# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

## இருபத்தைந்தாவது ஆண்டு மலர்




யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

Tamilischer Bildungsverein Deutschland e.V.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய தமிழ்மொழி வளர்ப்பில் இனிதே இருபத்தைந்தாவது ஆண்டு விழாக்காணும்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவைக்கு எமது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்

# ORIENTALISCHE TEXTILIEN & SCHMUCK



* உயர்தரப் பட்டுக்கூறை, பட்டுப்புடவை, பட்டுவேட்டி, சுடிதார், காகிறாச்சோளி மற்றும் சிறுவர், நங்கையர், ஆடவர்களுக்கான ரெடிமெட் ஆடைகள்
* கனம், தரமிக்க எவர்சில்வர் வீட்டுப் பாத்திரங்கள்
* நவீன வண்ணங்களில் அலங்கார அசல் வெள்ளி ஆபரணங்கள், பரதநாட்டிய உடைகள்
* தரமான தங்க, வைர நகைகள் (916,22K) உத்தரவாதத்துடன் தாராள தேர்வில் சிங்கப்பூர் விலையில் கிடைக்கும்.
* தாயக உறவுகளுக்கு தாயகத்திலும், விலை குறைவாக தரமான பொருட்கள் யாவும் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடனும், உத்தரவாதத்துடனும் தெரிவிக்கின்றோம்.

---

மாதம்தோறும் 1ம் திகதியில் இருந்து 5ம் திகதிவரை பவுண் தவிர்ந்த அனைத்துப் பொருட்களும் 15% முதல் 25% வரை மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: எஸ்.ஜெகதீஸ்

**KOENIGSWALL FUSSGAENGER ANLAGE (AM HBF)**
**44137 DORTMUND - 1. GERMANY.**
**TEL: 0231 - 162377 FAX: 0231 - 147836**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை



MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel ...
47249 Duisburg
Germany

## இருபத்தைந்தாவது ஆண்டு விழா மலர்




## 14.06.2014

## Tamilischer Bildungsverein Deutschland e.V.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்: யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழா

வெளியீட்டுத் திகதி: 14.06.2014

மலர்க்குழு:

திரு.பொன்னுத்துரை சிறீஜீவகன்
திருமதி.கலாதேவி மகேந்திரன்
திரு.வயிரமுத்து சிவராசா
திரு.அம்பலவன் புவனேந்திரன்
திரு.பொன்னையா புத்திசிகாமணி
திருமதி.கிளி சிறீஜீவகன்

புத்தக வடிவமைப்பு கணனி: திரு.பொ.சிறீஜீவகன்

கணனி அச்சுப்பதிவு: திருமதி.கிளி சிறீஜீவகன்

முன்மட்டை ஓவியம்: திரு.மாரி ஆனந் (சென்னை)

அச்சுப்பதிப்பு:

தொடர்புகளுக்கு

பொறுப்பாளர்
பொ.சிறீஜீவகன்
Nordenmauer 17
59174 Kamen
Germany

Tamilischer Bildungsverein
Deutschland e.V.
Postfach 1646
59159 Kamen
Germany

தொலைபேசி: 0049 2307 299384
மின்னஞ்சல்: Jeevaghan@web.de
இணையம்: Kalvichsevai.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

வணக்கம் பல கூறி
வணங்கி வரவேற்கின்றோம்
வண்ண மலர் ஒன்று
வண்டமிழில் வடிவமைத்து
வழங்குவதில் மனமகிழ்வு கொள்கின்றோம்
தாய்த்தமிழ் வளர்க்க - நாம்
கால்நூற்றாண்டு வரை ஆற்றிய
பலநூறு நற்பணிகள் பலவற்றை
கலக்கமின்றிச் செப்புகின்றோம்!
கற்ற கல்விதனை பெற்ற பேறென
மற்றவரும் பயன்பெற வேண்டி
ஏற்றம் பல கொண்டு
வேற்று நாடுகளில்
நாற்று நட்ட நாள் முதல்
ஊற்றுப் போல் குறையாது - வளர்ந்து
ஆற்றும் தொண்டுதனை
இதழ்களாய்ச் சேர்த்தாக்கிய மலர்தன்னை
சிறப்புடன் பெற்று மனமுவந்து
நன்றே வளம்பல பெற்றுப் பணியாற்றிட
வாழ்த்தவேண்டி வரவேற்றுத் தருகின்றோம்!
மலர்தனை உம்கரம்தனில்
களிப்புடன் கரம் குவித்தோம்
வாருங்கள் நுழைவாயில் திறக்கிறது
உள்ளே நுழைவோம் நறுமணம் நுகர்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவைக் கீதம்

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
வாழிய வாழியவே!
என்றென்றும் தமிழ்மொழி வளர்த்திடும்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை வாழியவே!

யேர்மன் நாட்டில் முதன்முதல் தோன்றி
தமிழ்மொழி வளர்த்திட
நாளும் நற்பணி செய்யும்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
எல்லைகள் கடந்த இந்த உலகினில்
தமிழ்மொழி வளம் பெருக்கிட
தொல்லைகள் நீக்கியே சேவை புரிந்திடும்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை வாழியவே!

தொன்மைகள் பல கொண்டு உலகினில்
தோன்றிய முதற்தேன் மொழியின்
நன்மைகள் பல கண்டு உலகினில்
மானிடம் போற்றிட
தினமும் சேவை புரிந்திடும் கல்விச் சேவை
ஏற்றம் பெற்றே விளங்கிட
நன்றே நாம் ஒன்றுபட்டு உழைத்திடுவோம்
வாருங்கள் தமிழர்களே! வாருங்கள் தமிழர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

# செயற்குழு தூவிடும் செந்தமிழ் மலர்கள்

1. வளர்தமிழ் வளம் பெருக்க நாளும் நாம் நற்பணி செய்வோம்!
   தமிழ்மணி திரு.பொ.சிறீஜீவகன்
   தலைவர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

2. கண்ணிலும் மேலான தமிழ்மொழி!
   திருமதி.கலாதேவி மகேந்திரன்
   செயற்குழு உறுப்பினர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

3. தமிழர்கள் உயிரிலும் மேலாகக் கருதுவதில் மொழியும் ஒன்றாகும்!
   திரு.வ.சிவராசா
   செயற்குழு உறுப்பினர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

4. கதிரவன்வடியாய் நீயிங்கு வந்தாய்!
   திரு.அ.புவனேந்திரன்
   செயற்குழு உறுப்பினர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

5. பன்னெடுங்காலம் சேவை புரிந்திட வேண்டும்!
   திருமதி.ஞானாம்பாள் விஜயகுமார்
   செயற்குழு உறுப்பினர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

6. திரு.பொ.புத்திசிகாமணி
   செயற்குழு உறுப்பினர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆற்றிவரும் தாய்மொழிக் கல்வித் தமிழ்ப் பணியின் தொலைதூர நோக்கு!

1. ஐரோப்பாவில் தமிழ்மக்கள் கூடுதலாக வாழும் பகுதிகளில் பரவலாகத் தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்கல் அல்லது உருவாக்க உதவி புரிதல்.

2. இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளுடன் தொடர்பு கொண்டு கல்வி சம்பந்தமான உதவி புரிதல்.

3. இலங்கைப் பாடத்திட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுதல். இலங்கையிலே நடைமுறையில் உள்ள பாடத்திட்டங்களுக்கு ஏற்ப இங்கும் பாடவிதானங்களை உருவாக்கல்.

4. ஒவ்வொரு வருடமும் தமிழ்மொழிப் பரீட்சையை நடாத்துதல்.

5. மாணவர்களைப் பரீட்சையில் தோற்றச் செய்து சான்றிதழ்கள் வழங்கல். (உறுதிப்படுத்தப்பட்ட)

6. தமிழ்ப் பாடசாலைகளுக்குச் செல்ல வாய்ப்பற்ற மாணவர்களையும் பரீட்சையில் தோற்றச் செய்து சான்றிதழ்கள் வழங்கல்.

7. விசேட திறமை வாய்ந்த மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கல்.

8. கல்வி தொடர்பான ஆசிரியர் கருத்தரங்குகளும், ஆசிரியர் பயிற்சி வகுப்புக்களும் நடாத்துதல்.

9. வேற்றுமொழி ஆசிரியர்களையும் அழைத்துக் கல்வி சம்பந்தமான கலந்துரையாடல்கள் செய்தல்.

10. மாணவர்களின் எண்ணங்களையும், கருத்துக்களையும் அறியும் நோக்குடனும், வெளிக்கொணரும் நோக்குடனும், “மாணவர் கருத்துக் களம்” நடாத்துதல்.

11. தமிழ் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டுக் கலை நிகழ்ச்சிகளையும், போட்டிகளையும் நடாத்துதல். ( தமிழ்த்திறன் - கட்டுரை - நாடகம் )

12. பயிற்சிப் புத்தகங்கள் தயாரித்து வெளியிடுதல்.


13. சிறுவர்களுக்கான சஞ்சிகைகள், நூல்கள் வெளியிடுதல். வெளியீடு செய்ய உதவி புரிதல்.

14. கல்வி சம்பந்தமான பாடப்புத்தகங்கள் வெளியிடுதல்.

15. உயர் கல்விக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழ் மாணவர்களைப் பங்குபற்றச் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சேவையின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர்
## யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் தலைவர்
## யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்க உபதலைவர்
## தமிழ்மணி திரு.பொ.ஸ்ரீஜீவகன் உங்களுடன்........



### “வளர்தமிழ் வளம் பெருக்க நாளும் நாம் நற்பணி செய்வோம்“

பலநூறு நூற்றாண்டுகளைக் கண்டு, பண்பட்டுச் செழித்து வளர்ந்து வானத்தைத் தொட்டு நிற்கின்ற தமிழ்மொழிக்கு, கால்நூற்றாண்டுகளாக “யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை“ வேற்று நாடுகளில் தமிழ்மணம் பரப்பிடச் சேவை புரிந்து வருகின்றமை ஒரு ஆரம்பமேயாகும். இந்த ஆரம்பம் வளர்ந்து செல்ல தூண்டுகோலாகத் துணைபுரிந்திடத் துணிந்து நின்று பணியாற்றும் பண்புடையோர் யாவருக்கும் எமது நன்றியையும் பாராட்டினையும் முதற்கண் தெரிவிப்பதில் மனம் நிறைவு கொள்கின்றோம். மேன்மேலும் வளர்தமிழ் வளம்பெருக்க நாளும் நாம் நற்பணி செய்வோம் வாருங்கள் என உங்கள் யாவரையும் அன்போடு அழைத்து நிற்கின்றோம்.

இருபத்தைந்து ஆண்டுகளாக, அந்நியப்பட்ட சூழலில், பெரும் ஏக்கங்களுடன் வாழ்ந்துவரும் தமிழ்மக்களுக்கு, யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஒருசிறு அளவிலான பெரும்பணியினை ஆரம்பித்து வைத்து சிறு ஆறுதலைக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது. ஏனெனில் முதன்முதலில் தமிழ்க்கல்வி என்ற சிந்தனையை ஏற்படுத்திச் செயற்பட்டு, வழிகாட்டிய முதற் பொது அமைப்பு யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆகும். எந்த எண்ணக் கொள்கையில் ஆரம்பிக்கப்பட்டதோ! அதன்படி செயலாற்றும் தன்மையில் எந்த மாறுபாட்டையும் ஏற்படுத்தாது, காலமாற்றத்தை ஏற்றுத் தொடர்ந்து சேவையாற்றும் பொது அமைப்பாக இன்றும் செயற்பட்டு வருகின்றது. தமிழ்மொழிக்கு வளம் சேர்க்கும் பணியில் அயராது தன்னை ஈடுபடுத்தி பலருக்கும், பல அமைப்புக்களுக்கும் வழியமைத்துத் தன் எண்ணங்களின், கொள்கைகளின், நோக்கத்தின் அடிப்படையில் நேரிய கோட்டில் பயணிக்கும் அமைப்பாக இன்றுவரை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலும் இப்பயணம் தொடரும் என்பது திடமான அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆரம்பித்த 18.01.1989 இருந்து இன்றுவரை பல சாதனைகளைப் புரிந்து தமிழ்ப் பெற்றோர்க்கும், தமிழ்ப் பிள்ளைகளுக்கும் பயன் பாட்டைக் கொடுத்துள்ளது. பிள்ளைகள் தமிழ்மொழியைப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை தமக்குள் வளர்த்துக் கொள்ளும் தன்மையை யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் படிக்க வேண்டுமெனப் பெற்றோரை வற்புறுத்திக் கேட்கும் பிள்ளைகளை உருவாக்கியுள்ளோம். தாய்மொழியைத் தெரியாது வாழ்வது தவறு என்பதைப் பிள்ளைகள் உணர்ந்து, தமிழ்படிக்க முயல்கின்றனர். இவ்வளர்ச்சிக்குப் பல்வேறு பகுதிகளிலும், எம்முடன் சேர்ந்தியங்கும் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களும், திருக்குறள் போட்டிகளும், கலைநிகழ்வுகளும் காரணமாக அமைந் திருப்பதை நாம் மனங்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு செயற்படும் பாடசாலைகளை நாம் பாராட்டி வாழ்த்துவதோடு, ஊக்கம் கொடுத்துச் செயற்படுத்தித் தேவையான உதவிகளையும் செய்து வருகின்றோம். பல பாடசாலைகளைச் செய்யத் தூண்டுகின்றோம். எமது பாடசாலைகளில் படிக்கும் பிள்ளைகள் தாயகத்திற்கு சென்று, அங்கு உற்றார் உறவினர்களுடன் தாய்மொழியாம் தமிழில் சரளமாக உரையாடுவதையும், அங்கு பாடசாலைகளில் பயன்படுத்தும் புத்தகங்களை வாசித்து, இப்புத்தகங்களை நாங்கள் படிக்கின்றோம் என்று கூறுவதைக் கண்டும் கேட்டும் உறவுகளும் பெற்றோரும் பூரிப்படைகின்றனர். தாயகம் சென்று வந்த பிள்ளைகளும் பெற்றோரும் திரும்பி வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களிடமும், எம்மிடமும் கூறி மகிழ்கின்றனர். நாம் கால்நூற்றாண்டில் செய்த சேவைக்கு ஒரு சான்றாக இது அமைகின்றது.

பிள்ளைகள் தாய்மொழி படிப்பதைத் தாங்கள் படிக்கும் அந்தந்த நாட்டுப் பாடசாலைகளில் தெரிவிப்பதோடு, எம்மால் வழங்கப்படும் சான்றிதழ்களையும் காண்பித்துத் தங்கள் பாடசாலைச் சான்றிதழ்களில் பதிந்து கொள்கின்றனர். இதனால் அந்தப் பாடசாலைகளில் மதிப்பினைப் பெறுவதோடு, பாடங்களிலும் திறமையைக் காட்டி வருகின்றனர். உயர்கல்வி கற்பதற்காக பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் எமது சான்றிதழைக் காண்பித்து பலமொழிக் கல்விக்கான மதிப்பினைப் பெறுவதோடு மேலதிகப் புள்ளிகளையும் பெற்றுக் கொள்கின்றனர். இன்று பல பிள்ளைகள் மொழிபெயர்ப்பாளர் களாகவும், பல்வேறு கம்பனிகளில் பல மொழி தெரிந்த வேலையாளர்களாகவும் வேலை செய்வதற்கு தாய்மொழிக் கல்வி பெரும் துணைபுரிந்துள்ளமையை பெற்றோரும் பிள்ளைகளும் உணர்ந்து மற்றவர்களுக்கும் தெரியப்படுத்தி வருகின்றனர்.

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை தாயகப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தித் திட்டத்திற்கான செயற்பாட்டில் இதுவரை பதினொரு பாடசாலைகளுக்கு நிதியினை சேகரித்து அனுப்பியுள்ளது. இதனைத் தொடர்ந்தும் செயற்படுத்தத் திட்டம் கொண்டுள்ளது. தமிழ்மொழி கல்வி, கலைகலாச்சாரப் பண்பாண்டு வளர்ச்சிக்கான செயற்பாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் பல்வேறு நிறுவனங்களுடனும், தனிநபர் களுடனும் தொடர்புகளை ஏற்படுத்திச் செயற்படுவதுடன், பல்வேறு வகையான உதவிகளையும் செய்து வருகின்றது.

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையுடன் சேர்ந்தியங்கும் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையை நாம் நன்கு உணர்வோம். பல்வேறு வேலைப்பளுக்களுக்கு மத்தியில் அவர்கள் தொடர்ந்து செயற்படுவதை நாம் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். ஒவ்வொரு பாடசாலைகளையும் நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற நிர்வாகிகளையம், ஒத்துழைப்புச் செய்கின்ற உறுப்பினர்களையும், பெற்றோர்களையும் நன்றியுடன் பாராட்டிக் கொள்கின்றோம்.

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்பாட்டில் செயற்பட்டுக் கொண்டிருப்பதற்கு பல வழிகளில் ஒத்துழைப்பையும், ஆக்க ஊக்கத்தையும் தருகின்ற செயற்குழு உறுப்பினர்களுக்கு எனது அன்பான வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது செயற்பாட்டிற்கு சகல விதங்களிலும் ஒத்துழைப்புத் தந்து, நான் நினைத்த நேரத்திலெல்லாம் செயற்பட்டு பேருதவி புரிகின்ற மனைவி திருமதி.கிளி அவர்களுக்கும், மக்கள் ராகுலன், ராகவன், ரஜீவா இவர்களுக்கும் எனது நன்றியைத் தெரித்துக் கொள்கின்றேன். மற்றும் சகல விதங்களிலும் ஒத்தாசைகளும், உதவிககளும் செய்தும்கொண்டிருக்கின்ற சகலருக்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல வருடங்களாக உப தலைவராக இருந்து, கடந்த 2012ஆம் ஆண்டு பிரியவிடை பெற்றுத் தாயகம் சென்று, வாழ்ந்துவரும் அன்புக்குரிய அண்ணர் திரு.கே.கே.அருந்தவராஜா அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம் மலர் பதினைந்தாவது ஆண்டு மலரின் தொடராகவே வெளிக்கொணரப்படுகின்றது. அதன் பதிகளும் தொடர்களும் இம்மலரில் தொடராகப் பதியப்பட்டிருப்பதைக் காணமுடியும். தொடர்ந்த செயற்பாடுகளை தொடராக்கித் தருகின்றேன்.

நன்றி.

இங்ஙனம்
அன்புடன்
பொன்னுத்துரை சிறீஜீவகன்
பொறுப்பாளர்
யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னச் சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்பம்மிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிபக் கிழப்பருவ மெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ! (பாரதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் வரலாறும் அதன் செயற்பாடுகளும்

~~~~~~~~~~~~~~~~~

- ❋ யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை 1989ஆம் ஆண்டு தை மாதம் 18ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.
- ❋ ஆரம்பத்தில் பன்னிரண்டு பாடசாலைகளைத் தன்னுள்ளே இணைத்துக்கொண்டு செயற்பட ஆரம்பித்தது.
- ❋ ஆரம்பத்தில் பல்வேறு பிரதேசங்களுக்கும் சென்று தமிழ்க் கல்வியின் அவசியம் பற்றிய கருத்தரங்குகளையும், கூட்டங்களையும் நடாத்தியது. பாடசாலைகளை அமைக்க ஏற்பாடு செய்தது.
- ❋ இலங்கை இந்தியாவிலிருந்து புத்தகங்களை எடுத்தது.
- ❋ இலங்கையிலிருந்து எடுக்கப்பட்ட பாடப் புத்தகங்களைப் பிரதி செய்து, இலவசமாகப் பாடசாலைகளுக்குக் கொடுத்தது.
- ❋ பாடத்திட்டத்தையும், பாடப்புத்தகங்களின் பாடங்களையும் தயாரித்தது. தொடர்ந்து தயாரித்து வருவது.
- ❋ பரீட்சைக்கான மாதிரி வினாவிடைப் புத்தகங்கள் தயாரித்துப் பாடசாலைகளுக்குக் கொடுத்தது.
- ❋ 1990.05.05ந் திகதி முதல்முறையாகத் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சை நடாத்தப்பட்டது.
- ❋ 1991.04.13ந் திகதி முதலாவது பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டது.
- ❋ சிறுவர்களுக்கான ஆரம்பப் புத்தகங்கள் இலவசமாக வினியோகிக்கப்பட்டது.
- ❋ 1992.11.14ந் திகதி கட்டுரைப் போட்டி நடாத்தப்பட்டது.
- ❋ 1993ஆம் ஆண்டு அரையாண்டுப் பரீட்சை நடாத்தியது.
- ❋ ஆசிரியர் கலந்துரையாடல்களும், கலந்தாலோசனைகளும் ஆரம்பித்து நடாத்தப்படுவது.
- ❋ பாடசாலைகளுக்குச் சென்று மாணவர், ஆசிரியர், பெற்றார் ஆகியோரைச் சந்தித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்யப்படுவது.
- ❋ வகுப்பு அடிப்படையில், பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதலாவது மாணவர்களுக்கு, ஈழத்து அறிஞர்களின் பெயரில் ஞாபக வெற்றிக் கிண்ணம் வழங்குவது.
- ❋ தனிப்பட்ட மாணவர்களுக்குத் தொலைபேசி மூலம் கல்வி விளக்கங்கள் செய்யப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~~~~~~~~~~~~




யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் நடப்புவருட நிர்வாகசபை உறுப்பினர்கள்

இடமிருந்து வலமாக: திருமதி.வித்தியா சுபாஸ்கரன், திருமதி.ஞானம்பாள் விஜயகுமார். திரு.பொ.புத்திசிகாமணி. திரு.வ.சிவராசா.
திரு.பொ.சிறீஜீவகன் தலைவர். திருமதி.கலாதேவி மகேந்திரன் உப.தலைவர். திரு.அ.புவனேந்திரன். திருமதி.கிளி சிறீஜீவகன. திருமதி.சந்திரகௌரி சிவபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ தூர இடத்துப் பாடசாலைகளின் ஆசிரியர்களுடன் தொலைபேசி மூலம் பாடம் சம்பந்தமான கருத்துப் பரிமாற்றம் செய்வது.

❋ பாடப்புத்தகங்களை மறுபிரதி செய்து புத்தக வடிவில் கொடுப்பது.

❋ 2000ஆம் ஆண்டு, மாணவர் கருத்துப் பரிமாற்றத்திற்கான மாணவர் கருத்துக் களம் ஆரம்பிக்கப்பட்டது.

❋ பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விடைத்தாள்களைக் காண்பித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்யப்படுவது.

❋ பாடங்கள், மாணவர்கள் சம்பந்தமான கருத்துக்களை ஆசிரியர்களிடமிருந்து, கேட்டறிந்து அதற்கேற்ப செயற்படுத்துவது.

❋ தமிழ் வளர்ச்சிக்கான புத்தகங்கள் பரிசாகக் கொடுப்பது.

❋ கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டிற்கென தாயகத்துப் பாடசாலைகளுக்கு நிதி சேகரித்து அனுப்புவது.

❋ தாயகத்திலுள்ள பதினொரு பாடசாலைகளுக்கு அபிவிருத்தி நிதி அனுப்பப்பட்டது.

❋ யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் வெளியீடு செய்த “நாங்கள்“ இளையோர் கவிதை நூல், “சங்கமம்“ கவிதை நூல் ஆகியவை அச்சுப்பிரதி செய்ய பண உதவி செய்தது.

❋ இயற்கை அழிவுகளினால் பாதிப்புக்குள்ளான நாடுகளுக்காக, மாணவர்களினால் சேகரிக்கப்பட்ட நிதி உலக மன்னிப்புச் சபை மூலம் அனுப்பப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் நிர்வாகசபை உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டோர்.

முதலாவது நிர்வாகசபை உறுப்பினர்கள் ( 18.01.1989 )

திரு.மு.சொக்கலிங்கம் ( முன்னாள் அதிபர் ) இணைத்தலைவர்
திரு.இ.நாகலிங்கம் ( பயிற்றப்பட்ட ஆசிரியர் ) இணைத்தலைவர்
திரு.நா.அன்னராசா
திரு.சு.பாக்கியநாதன்
திரு.பொ.ஸ்ரீஜீவகன்
திரு.வி.எஸ்.செல்வராசா
திருமதி.நாகலிங்கம்

தொடர்ந்து காலத்துக்குக் காலம் சேர்ந்தியங்கிய நிர்வாகசபை உறுப்பினர்கள்.

திரு.மு.சொக்கலிங்கம் (தலைவர்)
திரு.பொ.ஸ்ரீஜீவகன் (செயலாளர்)
திரு.ஏ.எஸ்.சந்திரபால்
திருமதி.நகுலேஸ்வரி சிவநாதன்
திருமதி.விக்னேஸ்வரி பாக்கியநாதன்
திரு.சு.பாக்கியநாதன்
திரு.ஆ.வேலாயுதம் (தலைவர்)
திரு.வ.சிவராசா
திரு.க.அருந்தவராசா (உப தலைவர்)
திரு.செ.இராமச்சந்திரன்
திரு.ஆ.வை.லோகநாதன்
திரு.சின்ன.இராசேஸ்வரன்
திருமதி.கலாதேவி மகேந்திரன் (உப தலைவர்)
திரு.ச.உதயகுமார்
திருமதி.இலட்சுமி இரத்தினசபாபதி
திரு.செ.செல்வராசா
திரு.இ.சிவரஞ்சன்
திரு.பொ.புத்திசிகாமணி
திரு.அ.புவனேந்திரன்
திரு.த.இரவீந்திரன்
திரு.சு.இராஜகருணா

நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு.பொ.ஸ்ரீஜீவகன் (தலைவர்)
திருமதி.கலாதேவி மகேந்திரன் (உப தலைவர்)
திரு.வ.சிவராசா
திரு.அ.புவனேந்திரன்
திரு.பொ.புத்திசிகாமணி
திருமதி.கிளி சிறீஜீவகன்
திருமதி.ஞானாம்பாள் விஜயகுமார்
திருமதி.சந்திரகௌரி சிவபாலன்
திருமதி.வித்தியா சுபாஸ்கரன்
திரு.சி.ராகுலன்
திருமதி.சிவதர்சினி பிரங்கிளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1989ஆம் ஆண்டு தொடக்கம் எம்முடன் சேர்ந்து இயங்கிய, இயங்கிக் கொண்டிருக்கின்ற பாடசாலைகள்

1. வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட் (Dortmund)
2. ஹாட்ஸ் தமிழ்ப் பாடசாலை - கோஸ்லர் (Goslar)
3. அறிவாலயம் தமிழ்ப் பாடசாலை - ஒபகவுசன் (Oberhausen)
4. தமிழ்க் கல்வி நிலையம் - நொய்ஸ் (Neuss)
5. ஈழத்தமிழர் மகளிர் மன்றத் தமிழ்ப் பாடசாலை - பேர்லின் (Berlin)
6. முருகானந்தா தமிழ்ப் பாடசாலை - அட்லிஸ்வில். சுவிஸ் (Adliswil.Swiss)
7. அறிவுப்பூங்கா தமிழ்ப் பாடசாலை - ஸ்ருட்காட் (Stuttgart)
8. கவ்பேரன் தமிழ்ப் பாடசாலை - கவ்பேரன் (Kaubeuren)
9. தமிழினி தமிழ்ப் பாடசாலை - செங்காளன். சுவிஸ் (St-Gallen.Swiss)
10. கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Munster)
11. நாவலர் தமிழ் பாடசாலை - சோஸ்ற் (Soest)
12. ஜீவவசன சபைத் தமிழ்ப் பாடசாலை - நூரன்பேர்க் (Nürnberg)
13. கெம்ப்ரன் தமிழ்ப் பாடசாலை - கெம்ப்ரன் (Kempten)
14. திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - முன்சென் (München)
15. ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை - ஹாம்.சுவிஸ் (Cham.Swiss)
16. புக்ஸ்ரகூட தமிழ்ப் பாடசாலை - புக்ஸ்ரெகூடெ (Buxtehude)
17. பிரொண்டென் தமிழ்ப் பாடசாலை - பிரொண்டென் (Pfronten)
18. நூரன்பேர்க் தமிழ்ப் பாடசாலை – நூரன்பேர்க் (Nürnberg)
19. தமிழர் கலையகத் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட் (Dortmund)
20. முத்தமிழ் மன்றத் தமிழ்ப் பாடசாலை - அல்க்மார். நெதர்லாந்து (Alkmaar.Netherland)
21. கலைமகள் தமிழ்ப் பாடசாலை - வேர்பேர்க். நெதர்லாந்து (Beverwijik. Niederland)
22. நல்லாயன் தமிழ்ப் பாடசாலை - ஆன்ஸ்பேர்க் (Arnsberg)
23. நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம் (Mannheim)
24. வால்பேர்க் தமிழ்ப் பாடசாலை – மெசெடே (Mechede)
25. அகரம் தமிழ்ப் பாடசாலை - படபோர்ன் (Padaborn)
26. ஜீவவசன சபைத் தமிழ்ப் பாடசாலை - பொற்றோப் (Bottrop)
27. ரூர்ஸ் தமிழ்ப் பாடசாலை - ரூர்ஸ். பிரான்ஸ் (Trurs.France)
28. பாரீஸ் தனிப்பட்டோர் தமிழ்ப் பாடசாலை – பாரீஸ். பிரான்ஸ் (Paris.France)
29. பாரதி தமிழ்ப் பாடசாலை - காமன் (Kamen)
30. விற்றன் தமிழ்ப் பாடசாலை - விற்றன் (Witten)
31. புனித ஒகஸ்ரின் தமிழ்ப் பாடசாலை - பொண் (Bonn)
32. டுய்ஸ்பேர்க் தமிழ்ப் பாடசாலை - டுய்ஸ்பேர்க் (Duisberg)
33. கம் தமிழ்ப் பாடசாலை - கம் (Hamm)
34. சுன்டென் தமிழ்ப் பாடசாலை – சுன்டென் Sundern)
35. பேன் லங்கத்தால் தமிழ்ப் பாடசாலை - லங்கந்தால் (Bern. Swiss)
36. கெவெல்ஸ்பேர்க் தமிழ்ப் பாடசாலை (Gevelsburg)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. முல்கைம் தமிழர் ஒன்றியத் தமிழ்ப் பாடசாலை - முல்கைம் (Muhlheim)
38. பிறிமகாவன் தமிழ்ப் பாடசாலை - பிறிமகாவன் (Bremehaven)
39. றின்றெல்ன் தமிழ்ப் பாடசாலை - றின்றெல்ன் (Rinteln)
40. தமிழ்மொழிச் சேவைப் பாடசாலை - கற்றிங்கன் (Hattingen)
41. கரிதாஸ் தமிழ்ப் பாடசாலை - வேர்ண (Werne)
42. நொய்ஸ் மத்திய தமிழ்க் கலவன் பாடசாலை - நொய்ஸ் (Neuss)
43. தமிழர் நலன்புரிச் சங்கப் பாடசாலை - என்னப்பெற்றால் (Ennepetel)
44. செல்ம் தமிழ்ப் பாடசாலை - செல்ம் (Selm)
45. போகும் தமிழ்ப் பாடசாலை - போகும் (Bochum)
46. தமிழர் நலன்புரிச் சங்கப் பாடசாலை - காகன் (Hagen)
47. அரங்கேற்றம் பாடசாலை - கோர்சன்புறோச் (Korschenbroich)
48. கிறீபெல்ட் தமிழ்ப் பாடசாலை - கிறீபெல்ட் (Krefeld)
49. றெம்சைட் தமிழ்ப் பாடசாலை - றெம்சைட் (Remcheid)
50. கெல்சன்கேயன் தமிழ்ப் பாடசாலை - கெல்சன்கேயன் (Gelsengern)
51. விற்றன் பொது நூல் நிலையப் பாடசாலை - விற்றன் (Witten)
52. சூரிச் தமிழ்ப் பாடசாலை - சூரிச். சுவிஸ் (Zrüch. Swiss)
53. ஆலன் தமிழ்ப் பாடசாலை - ஆலன் (Alen)
54. புனித மரியாள் கல்விக் கூடம் - கனோவர் (Hannover)
55. ஓய் கோஸ் தமிழ்ப் பாடசாலை - சூரிச். சுவிஸ் (Zrüch. Swiss)
56. குன்சென்கௌசன் தமிழ்ப் பாடசாலை - குன்சென்கௌசன் (Kunzenhausen)
57. வாட்வில் தமிழ்ப் பாடசாலை - வாட்வில் (Wattwil Swiss)
58. பிறாக தமிழ்ப் பாடசாலை - பிறாக (Brake)
59. தமிழ்மொழிச் சேவைப் பாடசாலை - எசன் (Essen)
60. வின்சன் தமிழ்ப் பாடசாலை - வின்சன் (Winsen- Luhe)
61. கேர்ண தமிழ்ப் பாடசாலை - கேர்ண (Herne)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில் இரண்டாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பரிசு பெற்றவர்கள்.

2005.02.05 செல்வி. ஆரபி தயானந்தன்
ஹரேகிருஸ்ணா தமிழ்ப் பாடசாலை. ஹாம் - சுவிஸ் ( Cham – Swiss )

2006.02.04 செல்வி.லக்ஷிகா ஜெயநந்தன்
ஹரேகிருஸ்ணா தமிழ்ப் பாடசாலை. ஹாம் - சுவிஸ் ( Cham – Swiss )

2007.02.10 செல்வி. அபினா செந்தில்ராஜன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை - அட்லிஸ்வில். சுவிஸ் (Adliswil - Swiss)

2008.02.09 செல்வன். யதூசன் இராமச்சந்திரன்
ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை ஹாம். சுவிஸ் (Cham – Swiss)

2009.02.07 சாஜிதா கருணாநிதி
ஈழத்தமிழர் ம.ம. தமிழ்ப் பாடசாலை - பேர்லின். (Berlin)

செல்வி. நிவைதிதா சரத்சந்திரா
நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம். (Mannheim)

2010.02.13 செல்வி. தெபோரா அன்ரனி
ஜீவ வசன அருட்பணி சபைத் தமிழ்ப் பாடசாலை - நூரன்பேர்க் (Nürnberg)

2011.02.12 செல்வி. தபிசாலினி சட்சிதானந்தராஜா
தமிழினி தமிழ்ப் பாடசாலை - செங்காளன். சுவிஸ் (St-Gallen)

2011.02.12 செல்வி. யதுஷா புஸ்பாகரன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை – அட்லிஸ்வில். சுவிஸ் (Adliswil - Swiss)

2012.02.11 செல்வன். விதுஷன் சண்முகரத்தினம்
அறிவுப்பூங்கா தமிழ்ப் பாடசாலை - ஸ்ருட்காட் (Stuttgart)

2012.02.11 செல்வன். அகிசன் தயாகரன்
வல்பேர்க் தமிழ்ப் பாடசலை – மெசடே (Mecherde)

2013.02.09 செல்வி. றம்மியா மணிவண்ணன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2014.02.15 செல்வன். யூட் அபிஷேக் சுகந்திரன்
ஜீவவசன அருட்பணி சபைத் தமிழ்ப் பாடசாலை - நூரன்பேர்க் (Nürenberg)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில் மூன்றாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று நவாலியூர் சோமசுந்தரப்புலவர் நினைவுப் பரிவு பெற்றவர்கள்.

2005.02.05 செல்வி. லக்வினி சுகந்தன்
குன்செென்கவுசன் தமிழ்ப் பாடசாலை - குன்செென்கவுசன்

2006.02.04 செல்வி. துபீகா துரைராஜா
தனிப்பட்ட முறையில் தோற்றியவர். சுக் - சுவிஸ் ( Zug – Swiss )

2006.02.04 செல்வி. கஜந்தா ஸ்ரீமனோகரன்
வின்சன் தமிழ்ப் பாடசாலை - வின்சன் ( Winsen )

2007.02.10 செல்வி. யனுஜா கெங்கநாதன்
ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை. ஹாம் - சுவிஸ் ( Cham – Swiss )

2008.02.09 செல்வி. அபினா செந்தில்ராஜன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை - அட்லிஸ்வில் - சுவிஸ்

2008.02.09 செல்வன். தருஸன் உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2009.02.07 செல்வி. ஆதிஷா ஜெயகரன்
தமிழினி பாடசாலை - செங்காளன். சுவிஸ் (St-Gallen)

2010.02.13 செல்வி. நவீனா நகுலேந்திரன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர்

2010.02.13 செல்வி. சுஜாணி சிறிபவன்
சென் பியர் தமிழ்ப் பாடசாலை - ரூர்ஸ். பிரான்ஸ் (Trours.France)

2011.02.12 செல்வன் பவித்திரன் வைரவநாதன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை – அட்லிஸ்வில். சுவிஸ் ( Adliwil - Swiss)

2011.02.12 செல்வி. ஆகிரா முருகதாஸ்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - போகும் (Bochum)

2012.02.11 செல்வி. விதுஷா லோகநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2012.02.11 செல்வி. வைஸ்ணவி கணேஸ்வரன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2013.02.09 செல்வி. கவினா குகதாசன்
வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை – டோட்முண்ட் (Dortmund)

2014.02.15 செல்வி. றம்மிய மணிவண்ணன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டு தோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், நான்காம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சுவாமி விபுலாநந்த அடிகள் நினைவுப் பரிசு பெறுவோர்.

2005.02.05 செல்வன். தேனுஷன் ஞானதேவன்
குன்சென்கவுசன் தமிழ்ப் பாடசாலை - குன்சென்கவுசன்

2006.02.04 செல்வி. தர்சனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை. சோஸ்ற் (Soest)

2007.02.10 செல்வி. அதுர்ஜா மனோரஞ்சிதராசா
கலைவாணி தமிழ்ப் பாடசாலை. முன்ஸ்ரர் (Münster)

2008.02.09 செல்வி. நிருபா கண்ணன்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - ஹாம் - சுவிஸ் (Cham – Swiss)

2009.02.07 செல்வி. யனுஷா கெங்கநாதன்
ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை - ஹாம். சுவிஸ் (Cham – Swiss)

2010.02.13 செல்வி. லக்ஷிக்கா ஜெயநந்தன்
ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை - ஹாம். சுவிஸ் (Cham – Swiss)

2011.02.12 செல்வி. ஹேமலதா ரவிக்குமார்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2012.02.11 செல்வி. அர்ஷிதா அம்பரீசன்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் – பாரீஸ் - பிரான்ஸ் (Paris. France)

2013.02.09 செல்வி. வைஸ்ணவி கணேஸ்வரன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2014.02.15 செல்வன். சுகிர்தன் ஸ்ரீதாஷன்
திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலை – முன்சென் (Munchen)

2014.02.15 செல்வன். விதுஷன் சண்முகரத்தினம்
அறிவுப்பூங்கா தமிழ்ப் பாடசாலை - ஸ்ருட்காட் (Stuttgart)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், ஐந்தாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுப் பரிசு பெறுவோர்.

2005.02.05 செல்வி. துபீஸ்னா துரைராசா
தனிப்பட்ட பரீட்சார்த்தி - சுக். சுவிஸ்

2006.02.04 செல்வன். தேனுஜன் ஞானதேவன்
குன்சென்கவுசன் தமிழ்ப் பாடசாலை. குன்சென்கவுசன். ( Gunsenhausend )

2007.02.10 செல்வி. தர்சனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற். ( Soest )

2008.02.09 செல்வி. அபிநயா மனோகரன்
ஹாட்ஸ் தமிழ்ப் பாடசாலை - கோஸ்லர் (Goslar)

2009.02.07 செல்வி. நிருபா கண்ணன்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - ஹாம் . சுவிஸ் (Cham – Swiss)

2009.02.07 செல்வி. அபிராமி கெங்காதரன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை – அட்லிஸ்வில். சுவிஸ் ( Adliwil - Swiss)

2010.02.13 செல்வி. சுஜீகா சிறிபவன்
சென் பியர் தமிழ்ப் பாடசாலை - ரூர்ஸ். பிரான்ஸ் (Trours.France)

2011.02.12 செல்வன். அஸ்வின் விக்னேஸ்வரன்
ஈழத்தமிழர் மகளிர் மன்றத் தமிழ்ப் பாடசாலை – பேர்லின் (Berlin)

2012.02.11 செல்வி. நிறோமினா சுகந்திரன்
ஜீவஅருட்பணிச் சபைத் தமிழ்ப் பாடசாலை – நூரன்பேர்க் (Nürenberg)

2012.02.11 செல்வி. யாமினி ஜெயமோகன்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - சூரிச். சுவிஸ் (Zrüch. Swiss)

2013.02.09 செல்வி. பார்கவி செல்வேந்திரன்
வல்பேர்க் தமிழ்ப் பாடசாலை – மெசடே (Mecherde)

2014.02.15 செல்வன். ஜோன் பெனோ லக்ஷ்மன்
திருவள்ளுவர் தமிழ்ப் பாடசாலை – முன்சென் (Munchen)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், ஆறாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று அறிஞர். தாமோதரம்பிள்ளை நினைவுப் பரிசு பெறுவோர்.

2005.02.05 செல்வன். ரவிவர்ணன் சிவசோதிலிங்கம்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை - அட்லிஸ்வில். சுவிஸ் (Adliswil - Swiss)

2006.02.04 செல்வி. சந்தியா இரவீந்திரன்
நாவலர் தமிழ்ப் பாடசாலை. சோஸ்ற் ( Soest )

2007.02.10 செல்வி. அபிநஜா கெங்காதரன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை - அட்லிஸ்வில். சுவிஸ் ( Adliswil - Swiss )

2008.02.09 செல்வி. தர்சனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2009.02.07 செல்வி. ஆரபி தயானந்தன்
ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை - ஹாம். சுவிஸ் (Cham – Swiss)

2010.02.13 செல்வி. வினுஜா லோகநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2011.02.12 செல்வன். தருஸன் உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2012.02.11 செல்வி. அனிக்கா ஜெயசிங்கம்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் – விற்றன் (Witten)

2013.02.09 செல்வி. நிறோமினா சுகந்திரன்
ஜீவவசன அருட்பணிச் சபைத் தமிழ்ப் பாடசாலை - நூரன்பேர்க் (Nürenberg)

2013.02.09 செல்வி. யாமினி ஜெயமோகன்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - சூரிச். சுவிஸ் (Zrüch. Swiss)

2014.02.15 செல்வி. விஷாலி லோகநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், ஏழாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று அறிஞர்.சித்திலெப்பை நினைவுப் பரிசு பெறுவோர்.

2005.02.05 செல்வி. தர்சிகா ஜெனசிங்
புக்ஸ்ரெகூடெ தமிழ்ப் பாடசாலை - புக்ஸ்ரெகூடெ

2006.02.04 செல்வன். சுகிர்தன் சுந்தரலிங்கம்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை. அட்லிஸ்வில் - சுவிஸ் ( Adliwil - Swiss)

2007.02.10 செல்வி. சன்ஜா சுரேஸ்குமார்
நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை. மன்கைம். ( Mannheim )

2008.02.09 செல்வி. சந்தியா இரவீந்திரன்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2009.02.07 செல்வி. தர்ஷனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2010.02.13 செல்வி. ஆரபி தயானந்தன்
ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை - ஹாம். சுவிஸ் (Cham – Swiss)

2011.02.12 செல்வி. வினுஜா லோகநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2012.02.11 செல்வன். தருஸன் உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2013.02.09 செல்வி. ஜசீனா கணேசலிங்கம்
வல்பேர்க் தமிழ்ப் பாடசாலை - மெசடே (Mecherde)

2014.02.15 செல்வி. பார்கவி செல்வேந்திரன்
வல்பேர்க் தமிழ்ப் பாடசாலை - மெசடே (Mechede)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், எட்டாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று தனிநாயகம் அடிகள் நினைவுப் பரிசு பெறுவோர்.

2006.02.04 செல்வன். சயன் வாகீசன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை. அட்லிஸ்வில் - சுவிஸ் ( Adliwil - Swiss)

2007.02.10 செல்வி. சாதுஷா அருணகிரிநாதன்
வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை. டோட்முண்ட் ( Dortmund )

2008.02.09 செல்வி. சுகந்தினி அருட்செல்வம்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2009.02.07 செல்வி. சுபர்ணா சத்தியகுமார்
சுன்டென் தமிழ்ப் பாடசாலை - சுன்டென் (Sundern)

2010.02.13 செல்வி. தர்ஷனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2011.02.12 செல்வி. ஆர்த்தி கனகசுந்தரம்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2012.02.11 செல்வி. வினுஜா லோகநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2013.02.09 செல்வி. மதுஷா கணேசலிங்கம்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - பாரீஸ். பிரான்ஸ் (Paris. France)

2014.02.15. செல்வி. அனிக்கா ஜெயசிங்கம்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - போகும் (Bochum)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், ஒன்பதாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மலையக அறிஞர் சி.வி.வேலுப்பிள்ளை நினைவுப் பரிசு பெறுவோர்.

2005.02.05 செல்வி. அகல்யா ரதஜேந்திரன்
கேர்ண தமிழ்ப் பாடசாலை - கேர்ண

2006.02.04 செல்வன். சாகித்தியன் வெற்றிமயில்நாதன்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர். சூரிச். சுவிஸ் ( Zürich - Swiss )

2007.02.10 செல்வன். சயன் வாகீசன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை - அட்லிஸ்வில். சுவிஸ் (Adliswil - Swiss)

2008.02.09 செல்வி. சாதுஷா அருணகிரிநாதன்
வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட் (Dortmund)

2009.02.07 செல்வி. சுகந்தினி அருள்செல்வம்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2010.02.13 செல்வி. சுபாங்கி ரவீந்திரநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2011.02.12 செல்வி. தர்ஷனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2012.02.11 செல்வி. துவாரகா மனோகரன்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2012.02.11 செல்வி. அதுர்ஜா மனோரஞ்சிதராசா
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2013.02.09 செல்வி. வினுஜா லோகநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2014.02.15 செல்வி. மதுஷா கணேசலிங்கம்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர் - பாரீஸ். பிரான்ஸ் (Paris. France)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், பத்தாம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சு.வித்தியானந்தன் நினைவுப் பரிசு பெறுவோர்.

2005.02.05 செல்வி. பிரவீனா ஜெகதீஸ்வரன்
விற்றன் தமிழ்ப் பாடசாலை - விற்றன் (witten)

2006.02.04 செல்வி. சங்கீதா தில்லையம்பலம்
அறிவாலயம் தமிழ்ப் பாடசாலை. ஒபகவுசன். ( Oberhausen )

2007.02.10 செல்வன். நிவேத் சுரேஸ்குமார்
நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை. மன்கைம். ( Mannheim )

2008.02.09 செல்வன். சயன் வாகீசன்
முருகானந்தா தமிழ்ப் பாடசாலை - அட்லிஸ்வில் - சுவிஸ் (Adliswil - Swiss)

2009.02.07 செல்வி. சன்ஜா சுரேஸ்குமார்
நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம். (Mannheim)

2010.02.13 செல்வி. சுகந்தினி அருள்செல்வம்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2011.02.12 செல்வி. சுபாங்கி ரவீந்திரநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2012.02.11 செல்வி. தர்ஷனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

2013.02.09 செல்வன். விதுர்சன் தனபாலசிங்கம்
நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம் (Mannheim)

2014.02.15 செல்வி. வினுஜா லோகநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் தமிழ்மொழிப் பொதுப் பரீட்சையில், பதினோராம் ஆண்டில் தோற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பண்டிதமணி. கணபதிப்பிள்ளை நினைவுப் பரிசு பெறுவோர்.

2005.02.05 செல்வி. ரஜீவா சிறீஜீவகன்
புரதி தமிழ்ப் பாடசாலை - காமன் (Kamen)

2006.02.04 செல்வி. பிரவீனா ஜெகதீஸ்வரன்
தனிப்பட்ட முறையில் தோற்றியவர். விற்றன் ( Witten )

2007.02.10 செல்வி. சங்கீதா தில்லையம்பலம்
அறிவாலயம் தமிழ்ப் பாடசாலை. ஒபகவுசன் ( Oberhausend )

2008.02.09 செல்வி. சரணியா செவ்வேள்
நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம் (Mannheim)

2009.02.07 செல்வி. செல்வியா சிவயோகேஸ்வரன்
ஹாட்ஸ் தமிழ்ப் பாடசாலை - கோஸ்லர் (Goslar)

2011.02.12 செல்வி. சாதுஷா அருணகிரிநாதன்
வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட் (Dortmund)

2011.02.12 செல்வி. சிந்துஜா சண்முகதாசன்
வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட் (Dortmund)


2012.02.11 செல்வி. சுபாங்கி ரவீந்திரநாதன்
கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர் (Münster)

2014.02.15 செல்வி. தர்ஷனா உதயகுமார்
நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற் (Soest)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபக வெற்றிக் கிண்ணமாக வழங்கப்படும், ஈழத்து அறிஞர்களின் பெயர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர் | இரண்டாம் ஆண்டு |
| நவாலியூர் சோமசுந்தரப்புலவர் | மூன்றாம் ஆண்டு |
| சுவாமி விபுலாநந்த அடிகள் | நான்காம் ஆண்டு |
| சுவாமி ஞானப்பிரகாசர் | ஐந்தாம் ஆண்டு |
| அறிஞர் தாமோதரம்பிள்ளை | ஆறாம் ஆண்டு |
| அறிஞர் சித்திலெப்பை | ஏழாம் ஆண்டு |
| தனிநாயகம் அடிகள் | எட்டாம் ஆண்டு |
| சி.வி.வேலுப்பிள்ளை | ஒன்பதாம் ஆண்டு |
| சு.வித்தியானந்தன் | பத்தாம் ஆண்டு |
| பண்டிதமணி கணபதிப்பிள்ளை | பதினோராம் ஆண்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் உபதலைவர், ஒபகவுசன் அறிவாலயம் தமிழ்ப் பாடசாலையின் ஆசிரியர் திருமதி.கலாதேவி மகேந்திரன் அவர்கள்**

# கண்ணிலும் மேலான தமிழ்மொழி!

"கேடில்விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற வள்ளுவர் வாக்கை தலைமையாகக் கொண்டு சேவை மனப்பான்மையுடன் ஆரம்பிக்கப்பட்ட யேர்மன் தமிழ்க்கல்விச் சேவை பல தடைகளையும் உடைத்து 25 ஆண்டுகள் கடந்துவிட்டது என்பதை நினைக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

இலங்கையின் பாடத்திட்டத்திற்கு அமைய யேர்மன் தமிழ்க்கல்விச் சேவை ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் பாடப்புத்தகங்களை அனுப்பி, ஒவ்வொரு வருடமும் பரீட்சைகளை நடாத்தி, சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களையும் விசேட சித்தியடைந்த மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களையும் பரிசளித்து வருகிறது.

யேர்மன் தமிழ்க்கல்விச் சேவை பலநூறு மாணவர்கள் தமிழ்க்கல்வி பெற வாய்ப்பளித்துக் கொண்டிருக்கிறது. இக் கல்விச்சேவையில் கல்வி பெற்ற பல மாணவர்கள் சிறந்த நிலையில் உள்ளார்கள். இக் கல்விச்சேவையின் கீழ் படித்த மாணவர்கள் எமது தாய்நாட்டுப் பிள்ளைகளைவிட அனுபவத்தில் மிகுந்து நிற்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் பெருமைப்படத்தக்கதாக எங்கள் கல்விச்சேவை அமைந்துள்ளது.

யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையின் வளர்ச்சிக்காக பலர் உரம் இட்டு நன்கு உழைத்திருக்கிறார்கள். இவர்கள் இட்டுக் கொண்டிருக்கும் உரம் இன்று கல்விச்சேவையை நன்கு வளர்த்து தலைநிமிர்ந்து நிற்கச் செய்துள்ளது. கல்விச்சேவையின் வளர்ச்சிக்காக அல்லும்பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கும் தலைவர், அவர்குடும்பம், நிர்வாக உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எங்கள் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும்மேலும் எங்கள் கல்விச்சேவையின் வளர்ச்சிக்காக ஒத்துழைக்க வேண்டும் என்று அனைவரிடமும் கேட்டுக்கொண்டு, கண்ணிலும் மேலான தமிழுக்கு கடுகளவேனும் தொண்டாற்ற எனக்கும் வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி வாழ்த்துகின்றோம்.

வாழ்க தமிழ் வளர்க அதன் புகழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர், மண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திரு.வ.சிவராசா அவர்கள்



## தமிழர்கள் உயிரிலும் மேலாகக் கருதுவதில் மொழியும் ஒன்றாகும்!

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவையொட்டி எமது இதயபூர்வமான நல் வாழ்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து உலகப்பந்தெல்லாம் செறிந்து வாழ்கிறார்கள். இவ்வாறு வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் மத்தியில் தமிழ்க் கல்வி, கலை, கலாச்சாரம், பாரம்பரியம், சமூக வளர்ச்சிக்கு பல அமைப்புக்கள் மன்றங்கள் பணியாற்றிவருவது பாராட்டுக்குரிய விடையமாகும். தமிழர்கள் உயிரிலும் மேலாகக்கருதும் கல்வி என்பது நமது இரு கண்களைப் போன்றது. காலத்தால் அழியாது சந்ததி சந்ததியாக உயிர்கொடுத்துவரும் இக்கல்விப் பணியை புலம்பெயர்ந்த நாடுகளில் முன்னெடுத்துவரும் யேர்மனி தமிழ்க் கல்விச் சேவையானது தனது இருபத்தைந்தாவது ஆண்டுகளை நிறைவு செய்து வெள்ளிவிழா கொண்டாடுவதையிட்டு நாம் பெருமிதம் கொள்கிறோம். மனமாரப் பாராட்டுகிறோம்.

புலம்பெயர் நாடுகளில் அந்நிய சூலில் தமிழ்க் கல்வியை வளர்த்தெடுப்பது என்பது மிகக்கடினமான விடையமாகவே காணப்படுகின்றது. அந்நிய சூழல், கலை, கலாச்சாரம், பழக்கவழக்கம், இயந்திரமயமான வாழ்க்கை முறை, வேலைப்பழு, நிதிநெருக்கடி, குடும்பச்சுமைகள், நோய் எனப்பல நெருக்கடிகளை எதிர்கொண்டுதான் கல்வி மற்றும் பொதுப்பணிகளைப் பல சமூக நலன் விரும்பிகள் செய்துவருகிறார்கள். தம்மை அர்ப்பணிப்புச் செய்து பல தியாகங்களைப்புரிந்து பல செலவுகளை ஏற்றுத்தான் பொதுப்பணியை செய்துவருகிறார்கள். அந்தவகையில்தான் இந்தக் கல்விச்சேவையும் தனது பணியைத் தொடர்ந்து வருவதை நாம் நன்கு அறிவோம்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்விச்சேவையானது தனது வளர்ச்சிப்பாதையில் பல வெற்றிகளைச் சாதித்திருக்கின்றது. படிப்படியாக வளர்ச்சிகண்டு யேர்மனியில் முப்பது தமிழ்பாடசாலைகளையும் சுவீஸ்லாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து நாடுகளிலும் பல பாடசாலைகளையும் நடாத்தி ஐரோப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரீதியிலான தாபனமாக வளர்ந்து கல்விப்பணியாற்றிவருவதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். இத்தாபனத்தின் கீழ் இயங்கும் பல பாடசாலைகளிலும் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பிறமொழிகளுடன் தமிழ்க்கல்வியையும் கற்றுத் தேறிவருகின்றனர். இன்று நூற்றுக் கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கும் அவர்கள் வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கும் இத்தாபனம் பெரும் பங்காற்றிவருவதும் சிறப்பான அம்சமாகும். அவை மட்டுமல்லாது வருடாவருடம் பாடப்புத்தகங்களை வழங்கி மாணவர் ஆசிரியர் பெற்றோர் கருத்தரங்குகளை நடாத்தி வருடாவருடம் பரீட்சைகளையும் நடாத்தி வெற்றிபெறுவோருக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி, விழாக்களை நடாத்தி எம் தாய்மொழியாம் தமிழையும் தமிழ்க் கல்வியையும் தமிழ்ச் சந்ததியினரையும் வளர்த்து நல்ல மனிதர்களாக இப்பூயில் பிரகாசித்து வாழ வழிவகுத்துப் பேருதவிபுரிந்துவரும் இக்கல்விச் சேவையின் சாதனைகள் வரலாற்றில் பதியப்படுகின்றன. இந்தத்தாபனத்தின் தலைவர், நிர்வாகிகள், பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் என யாவரும் போற்றுதலுக்குரியவர்களே.

நமது தாய்நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் நாம் அந்நியநாடுகளில் காலூன்றி பல ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. நம் சந்ததிகளுக்கு புலம்பெயர் தேசங்களில்தான் எதிர்காலம் என்ற நிலையும் பதிவாகிவருகின்றது. நாம் எங்கு வாழ்ந்தாலும் என்ன செய்தாலும் நம் மொழியையும், கலை கலைச்சார பாரம்பரியங்களைக் கைவிடுவோமானால் எமது இனம் அழிந்து முகம் தொலைத்து முகவரி இழந்துவிடுவோம் என்பதை நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். அந்த வகையில் நமது தாய்மொழியாம் தமிழை வருங்காலச் சந்ததிகள் கற்றுக்கொள்ள, அவர்கள் தமிழர் என்ற அடையாளத்துடன் தலை நிமிர்ந்து நிற்க, நல்ல மனிதர்களாக இப்பூமிப்பந்தில் வாழ இந்தக் கல்விச் சேவையானது தொடர் பணியாற்றும் என்பது நம்பிக்கை நட்சத்திரமாகும்.

கல்வியைப் பற்றி ஒரு துளி வள்ளுவர் எடுத்தியம்புகையில்..

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும் என்பது பொருளாகும். நமது எதிர்காலச் சந்ததியினரின் தமிழ்க்கல்வி அறிவினை மென்மேலும் வளர்த்துப் புகழ் படைத்துவரும் இந்தக் கல்விச் சேவையினரின் பணி ஏழேழு தலைமுறையையும் வாழ வழி வகுக்கும் என்பது திண்ணமாகும். கடமை, கட்டுப்பாடு, கண்ணியத்துடன் தியாக சிந்தனையுடன் அயராது பாடுபட்டு உழைத்துவரும் இக்கல்விச் சேவையினரைப் பாராட்டுகிறோம்!..நூறாண்டுகள் வளர்ந்து உயர வாழ்த்தி மகிழ்கிறோம்…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொருளாளர், ஒபகவுசன் அறிவாலயம் தமிழ்ப் பாடசாலையின் ஆசிரியர் திரு.அ.புவனேந்திரன் அவர்கள்**

## கதிரவன்வடியாய் நீயிங்கு வந்தாய்!

கங்குலை நீக்கவருகின்ற கதிரவன்வடியாய் நீயிங்கு வந்தாய்
கல்விச்சேவை எனும்பெயரில் காலத்தினையே நீவென்றாய்
கங்கைபோல்பரவி தாய்மொழிகல்வியினை தழைக்கச்செய்தாய்
கால்நூற்றாண்டு கடந்தவுனை களிப்புடனே வாழ்த்துகின்றேன்.!

எங்களது இன்பத்தமிழ் எல்லாத்தேசங்களிலும் ஒலிக்கும்வகை
இசைவாக்கிய உன்னைநான் இதயம்நிறைந்து வாழ்த்துகிறேன்
எண்பத்தேழுதையில் முதன்முதலாக இந்தமண்ணில்காலூன்றி
இன்றோடு கால்நூற்றாண்டு இலங்கியதால் வாழ்த்துகின்றேன்..!

துங்கக்கரிமுகத்தான் தொடங்கிவைத்த தூயதமிழையின்று
தூரதேசமெல்லாம் துளிர்க்கவைத்த நீ விருச்சமாக்கினாய்
சங்கமமமைத்து வளர்ந்த தமிழ் சகமெங்கும் ஒலித்துநின்று
சந்ததிகள் கல்விபெற சேவைபுரிந்தமைக்காய் வாழ்த்துகிறேன்..!

பங்கயப்பாதங்கள் படர பாவையாய் இம்மண்ணில் வந்தாய்
பாடங்கள் மூலம் வாரிசுகளுக்கு பைந்தமிழை ஊட்டுகின்றாய்
பாங்காக எம்சிறார்களின் கல்விப்பயணங்களில் பங்கெடுக்கும்
பனிவிழும் தேசங்களில் உனதுநற்பணியினைப் பாராட்டுகின்றேன்..!

வாங்கிவந்த வரத்தின்பயனாலே நாம் வாழும்தேசமெல்லாம்
வள்ளுவனின் குறள்வரிகளோடு வந்தெமக்கு அமிழ்தமானாய்
வாங்கக்கடல் தாண்டிவந்து வரைகளின் உச்சிகளைத்தொட்டு
வரலாறுபடைத்திடுதற்கு வளர்ந்தமையால் நான்வாழ்த்துகின்றேன்..!

தூங்காது நகருகின்ற நதியாய் துள்ளிநடை பயின்றுவந்தாய்
தூரிகைகள்கொண்டு தமிழை துல்லியமாய் நீ வரைகின்றாய்
சங்கெடுத்து அமுதூட்டி சாகரமாய்விரிந்த தமிழைப்புகட்டும்
சாஸ்வதமாயான சேவையின் சமநிலைக்காய் வாழ்த்துகின்றேன்..!

பங்குனிக்குமுன் இருதிங்கள் பதினெட்டாம்நாளில் உதித்து
பகட்டில்லாப் பணிசெய்து பல்லாண்டாய் உழைக்கின்றாய்
பங்கு நீயாய் எம்வாழ்வில் பதியம்வைத்த பொற்கரங்களின்
பங்கமில்லாத கடமைக்காய் பணிவோடுநான் வாழ்த்துகின்றேன்..!

தங்கிடத்தேசமின்றி ஈழத்தமிழர்கள் தஞ்சபுகுந்த மண்ணிலே
தமிழ்மொழி தழைக்கநீ தார்மீகப் பணியினைச் செய்கின்றாய்
தாங்கிடும் கல்வியிலே தாய்மொழி தமிழினை ஊட்டிடநீயும்
தாயாகிப்போனவளே உன்தாழ்பணிந்து நான் போற்றுகின்றேன்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர், சங்கீத ஆசிரியை திருமதி.ஞானாம்பாள் விஜயகுமார் அவர்கள்**

## பன்னெடுங்காலாம் சேவை புரிந்திட வேண்டும்!

புலம்பெயர் நாட்டில் தமிழிற்கு தொண்டாற்றிவரும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையானது இன்று இருபத்தைந்தாவது நிறைவை கொண்டாடுவதையிட்டு நான் பெரும் மகிழ்வு அடைகின்றேன். பற்பல இடர்பாடுகள் தடங்கல்கள் மத்தியில் தனது பணியை திறம்பட செய்துவரும் யேர்மன் கல்விச்சேவை தலைவர் பொன் சிறீஜீவகன் அவர்கள் இச்சமயத்தில் பாராட்டப்பட வேண்டியவர். யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையானது புலம்பெயர் தேசத்தில் 50 ஆண்டுகள் 100 ஆண்டுகள் அல்ல பன்னெடுங்காலம் தனது சேவையை திறம்பட செய்து தமிழையும், கலையையும், கலாச்சாரத்தையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்றும் கூறி எனது குடும்பம் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றேன்.

---

**யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர்**
**யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு.பொன் புத்திசிகாமணி அவர்கள்**

## படிகள் வெற்றிப்படிகளாகட்டும்!

இருபத்தைந்து ஆண்டுகள் தனது சேவையினை முடித்து,அடுத்த ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் யேர்மன் தமிழ்க்கல்வி சேவைக்கு முதலில் உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வாழ்த்துக்களோடு எனது குடும்பத்தையும், இணைத்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி. நான் பார்த்திருக்க வளர்ந்தது இந்தக் கல்விச்சேவை. இந்தச் சேவையுடன் எனது பங்களிப்பும், கொஞ்சமாகவேனும் இருந்திருக்கிறது என்பது மனநிறைவைத் தருகிறது. இதன்தாபகரும், பொறுப்பாளருமான திருபொ.சிறிஜீவகன், அவர்தம் பாரியார் பிள்ளைகள் இதற்காகக் கடுமையாக உழைத்திருக்கிறார்கள். காலத்திற்காலம் நிர்வாக உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும் சேர்த்து இவ்வேளை எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தாபகருள் ஒருவராக இருந்து செயல்பட்ட நண்பன் திரு முத்துச்சொக்கனையும் இவ்வேளையில் நினைவு கூருகிறேன். இன்று தாயகத்தில் வாழ்ந்தாலும் அவர் இருந்தபோது இதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியிருக்கிறார். இதேபோல் நண்பன் திருகே.கே.அருந்தவராசாவுக்கும் இவ்வேளையில் வாழ்த்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகின்றேன். என்றும் தொடரும் படிகள் வெற்றிப்படிகளாக அமைய எனது பங்களிப்பும் சிறிதாவது இருக்குமென்ற செய்தியுடன் மனம் நிறைவான வாழ்த்துக்களை யாவருக்கும் தெரிவித்துக் கொள்கினறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சான்றோர் தூவிய ஆசி மலர்கள்

1. **வளர்க பல்லாண்டு வாழ்க வையமெங்கும்**
   திரு.முத்துச்சொக்கன் (முன்னாள் அதிபர்) அவர்கள்
   B.Com. B.Phil(Horns) Dip.in.Ed.
   முன்னாள் தலைவர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
2. **தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்வோம்.**
   தமிழ்மணி திரு.க.அருந்தவராஜா அவர்கள்
   முன்னாள் உப தலைவர் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
3. **புலம் சிதறி வாழும் நாடுகளிலும் அர்ப்பணிப்புடன் தமிழ்ப்பணியும் அறிவுப்பணியும் ஆற்றிவரும் நிறுவனம்.**
   திரு.எஸ்.தில்லைநடராசா அவர்கள் - பன்முக மூத்த எழுத்தாளர்.
   கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர், (ஓய்வு நிலை) இலங்கை.
4. **மொழியாலேயே ஓர் இனம் அடையாளம் காணப்படுகிறது!**
   இலக்கியச்சுடர் திரு.த.இராமலிங்கம் அவர்கள்
5. **ஒரு நாட்டின் பெருமை கல்விமான்களின் எண்ணிகையிலாகும்**
   திருமதி.இ.தேவராஜா அவர்கள்
   கமு/ஸ்ரீ மாமாங்க வித்தியாலய அதிபர்
6. **வீட்டு மொழியாக தமிழ் ஆட்சி செய்தல் வேண்டும்**
   திரு. பொ.கனகசபாபதி அவர்கள் (கனடா)
   தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர்
7. **முன்னோர்கள் நம்மிடம் கொடுத்துச் சென்ற பரம்பரைச்சொத்தே தமிழ்மொழி**
   நகைச்சுவைத் தென்றல் புலவர் இரெ. சண்முகவடிவேல் அவர்கள்
8. **தாய்மொழி தமிழே சிதறிய உறவுகளை இணைக்கும் பாலமாகும்**
   திரு.தம்பிப்பிள்ளை கந்தையா அவர்கள் (கனடா)
   முன்னாள் உப அதிபர்
9. **எமது இனத்தையும் மொழியையும் காப்பாற்றும் பணிகள் தொடர வாழ்த்துக்கள்!**
   திரு.வி.தேவராஜா அவர்கள் வீரகேசரி பத்திரிகைப் பதிப்பாசிரியர்
10. **நாடு கடந்த போதிலும் நற்றமிழை மறவாது**
    வித்தியா சிரோன்மணி நடராஜா பார்த்தீபன் அவர்கள்
    இலங்கை - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி சிரேட்ட விரிவுரையாளர்
11. **தாய் மொழியைக் கற்பதால் தன் தனித்துவ மொழி அடையாளத்தைப் பேணலாம்!**
    நூலகவியலாளர் திரு.என்.செல்வராஜா அவர்கள் (லண்டன்)
12. **தேனமுதத் தமிழ்மொழியில் உள்ளம் உருகச் செய்யும் இனிமையான ஒரு வார்த்தை சேவை.**
    முன்னாள் ஆசிரியை திருமதி.இரஞ்சிதம் கந்தையா அவர்கள் (கனடா)
13. **தெய்வம் மறவார், செயும் கடன் பிழையார்**
    தமிழருவி திரு.த.சிவகுமாரன் அவர்கள்
    செயலாளர் வவுனியாத் தமிழ்ச் சங்கம்
14. **வரலாற்றுப் பதிவாகிட வாழ்த்துகிறேன் மனதார!**
    திருமதி. கலைவாணி ஏகானந்தராஜா அவர்கள் சங்கீத ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யோர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவர்**
**ஆரம்காலத் தலைவர் திரு.முத்துச்செக்கன் அவர்கள்**



# வளர்க பல்லாண்டு வாழ்க வையமெங்கும்

"ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி இசை கொண்டு வாழியவே எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே" என்றார் எங்களின் மகாகவி பாரதி. அந்த பெரியோரின் வாக்குப்படி பல கடல்களையும் பல நாடுகளையும் ஏன் பல கண்டங்களையும் தாண்டி தமிழ்மொழி தலைசிறந்து வளர்ந்து வருகின்றதென்றால் அந்த செம்மொழியின் சிறப்பையும் அதை போற்றி வளர்க்கின்ற மக்களின் சிறப்பையும் அவர்களின் மனத் திறமையையும், ஆற்றலையும் எவ்வாறு என்ன வார்த்தைகளால் புகழ்வதென்றே தெரியாமல் தடுமாறுகின்றேன், தத்தளிக்கின்றேன், ஆனந்த வெள்ளத்தில் புழகாங்கிதம் கொள்கின்றேன்.

திக்கற்றவர்களாக, அனாதைகளாக திரைகடல் தாண்டி சென்றோம். எமது மொழியை, பண்பாட்டை, கலாச்சாரத்தை பாதுகாத்து வருகின்ற பல நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களை சிரம்தாழ்த்தி வாழ்த்துகின்றேன். இந்நிலை மட்டும் இல்லாமல் எம் மொழியானது இன்னும் பல உயர்வுகள் பெற்று வளர வேண்டும். இந்த வளர்ச்சிக்கு உயிர் போல் அமைவது அம் மக்களிடம் அமைந்த கல்விச் செல்வமே தான். அதனால் தான் எமது முப்பாட்டன் வள்ளுவன் சொன்னார் "கேடில் விழுச் செல்வம் கல்வி" என்று. அக் கல்வி அம்மக்களின் அழியாச் சொத்தாக இருந்தபடியால் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக இன்னல்கள் பலவந்த போதிலும் அஞ்சோம். ஏழையாக இருந்தும் மனம் துஞ்சோம் என்பது போல் எவ்வளவோ துன்பங்களையும் தாண்டி இருபத்தைந்து ஆண்டுகளாக நிலைத்து "தமிழுக்கு அமுதென்று பெயர் அந்த தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற வரியோடு இந்த யேர்மன் கல்விச் சேவையானது தொடர்ந்து வீறுநடை போட்டு வளர வேண்டும், மலர வேண்டும், மலர்ந்து உலகமெங்கும் மணம் பரப்ப வேண்டும் என வாழ்த்துவதோடு பல்லாண்டு வளர்க என்று வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மொழியையும், கலையையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் அழிக்க நினைக்கும் அரக்ககுணம் படைத்த அற்பர்களுக்கு இந்த வளர்ச்சியானது நல்ல எடுத்துக் காட்டாக அமையும் என்று எண்ணுகின்றேன்.

“எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே“ ஆனால் இன்று எமது இனமானது கல்வியை, மொழியை, கலாச்சாரத்தை, பண்பாட்டை பாதுகாத்துக் கொள்ள முடியாமல் தவியாகத் தவிக்கின்ற இந்த வேளையில் “தேன் வந்து பாயுது காதினிலே“ என்பது போல யேர்மன் கல்விச் சேவையின் 25 ஆண்டு வளர்ச்சி வந்து விழுந்ததும் இனி எங்கள் மொழி அழியாது, மடியாது இமயம் போல் வளர்ந்து செல்லும். அதற்கு உணர்வுள்ள ஜீவன்கள் வீறு கொண்டு எழுந்து விட்டார்கள் என்பதை கண்டு உள்ளம் பூரிக்கின்றேன்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்
ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு“

என்பதை போல எமது இனம் எங்கெல்லாம் வாழ்ந்தாலும் அங்கெல்லாம் ஒற்றுமையுடன் அடம்பன்கொடி திரண்டால் போல் ஒன்றுபட்டு எமது மொழியை உயிர் போல் பாதுகாத்து வருவோமானால் எமது இனத்துக்கும் எமது மொழிக்கும் அழிவென்பது இல்லை. மற்ற எல்லாச் செல்வங்களும் எம்மை விட்டு போனபோதும் வெறும் கையோடும் உடுத்திய உடையோடும் வந்தோம். எமது கையிலிருந்த சொத்து கல்வியேயாகும். அக் கல்வியால்
இன்று பெறமுடியாத எல்லாச் செல்வங்களையும் இசைபட வாழ்ந்து கொண்டுள்ளோம். இதற்கெல்லாம் எமது இனத்திடம் இருந்தது “கல்வியே“. அந்த அரும்பெரும் செல்வத்தை கண் போல் பாதுகாப்போம். அதையே எமது எதிர்கால சந்ததிக்கும் விட்டுச் செல்வோம். அதன் மூலமாக எமது எதிர்கால சந்ததியும் இதைவிட உலகில் இசைபட வாழும் எனது இனம் வளரும்.

எனவே இந்த யேர்மன் கல்விச் சேவையானது இவ்வளவு காலமும் எவ்வளவு இடர்களுக்கும் மத்தியில் 25 ஆண்டுகள் வளர்ச்சி பெற்று ஆலமரமாக வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சியானது தொடர்ந்து பல்லாண்டு காலம் வளர்ந்து பல நாடுகளிலும் நிலைத்து நிற்க எனது வாழ்த்துக்கள்.

“எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் முன்னாள் உபதலைவரும், யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் முன்னாள் செயலாளரும், வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான, எழுத்தாளர். தமிழ்மணி.கே.கே.அருந்தவராஜா (மேழிக்குமரன்) அவர்கள்**



## "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்வோம்."

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றான் மகாகவி பாரதி. செம்மொழியாகிய இனிய தமிழ்மொழியை யேர்மனியில் வரலாற்றுப் பதிவோடு வளர்த்து வந்து இருபத்தைந்து வருடங்கள் கால்பதித்து, வெள்ளிவிழாக் காண்கின்ற பெருமை கொண்டது யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை.

இருபத்தைந்து வருடங்கள் யேர்மனியில் தடம்பதிப்பது என்பது ஒன்றும் இலகுவான காரியம் அல்ல. மிகுந்த பகீரதப் பிரயத்தனத்தோடு முட்டி மோதி, கரடுமுரடான கற்களிலும், முட்களிலும் நடந்து, போராடி, ஓடிவந்து நிமிர்ந்து நிற்கிறது யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை என்றால் அது மிகையாகாது. அதனால்தான் புகலிட வரலாறு அதனைப் பதிவு செய்கிறது.

பணப் பரிமாற்றப் பொருளாதாரச் சிந்தனைகளுடன் கூடிய புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில், சமூகப் பார்வையுடன், பொறுப்புடன், சிந்தனைவழி ரீதியாகச் செயற்படுகின்றவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரே. அவர்களுள் சிலரின் சீரிய சிந்தனைவழித் தோற்றத்தால் தூரநோக்குப் பார்வையுடன் 1989இல் முகிழ்ந்ததே யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை. ஆயினும் 1993இல் தன்னைப் புடம்போட்டுக் கொண்டு வீறுநடைபோட்டு தனது நடைப்பயணத்தை தொடர்ந்து வந்திருக்கிறது.

பொறுப்புமிக்க பெற்றோரும், தமிழ்மீது பற்றுக்கொண்ட ஆர்வலர்களும், வரலாற்றுக் கடமை உணர்ந்த நற்றமிழ் ஆசிரியர்களும், தமிழ் கற்றுத் தமிழராய் வாழ்வோம் என்று விருப்புக் கொண்ட மாணவ மணிகளும், தம்மைத் தியாகம் செய்துள்ள கல்விச் சேவை நிர்வாகத்தினரும் இணைந்து இந்தத் தேரை வெள்ளிவிழாவுக்கு இழுத்து வந்து நிறுத்தியுள்ளார்கள்.

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை தனது இருபத்தைந்து வருட காலத்தில், புகலிடத் தமிழ் மாணவர்களிடையே தாய்மொழி தொடர்பான பல நல்ல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து, வெற்றிகண்டு சாதனை படைத்திருக்கிறது.

ஐரோப்பிய ரீதியில் ஆண்டுதோறும் நடைபெறும் தமிழ்மொழிப் பொதுப்பரீட்சையில், ஒவ்வொரு வகுப்பிலும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாமிடம் பெறும் மாணவர்களுக்கு, இலங்கையில் வாழ்ந்த தமிழறிஞர்களின் பெயரால் வெற்றிக்கேடயம் வழங்கப்படுகிறது. இதனால் கல்விச் சேவையின் தமிழ்மொழிப் பரீட்சை எழுதி முதலிடம் பெற்ற பலநூறு மாணவர்கள் வீடுகளில் தமிழ் அறிஞர்கள் வாழ்கின்ற பெருமையை கல்விச் சேவை நிலைபெறச் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை எழுதிய மாணவர்களின் பெறுபேறு அறிவிக்கப்பட்ட பின்னர், அவர்களின் விடைத்தாள்களை கல்விச் சேவையின் பரீட்சைக்குழு எடுத்துச் சென்று, மாணவர்களை பாடசாலைகளில் தனித்தனியே சந்தித்து விடைத்தாள்களைக் காட்டி, அவர்களின் திறமைகளை, குறைகளை எடுத்துக்கூறி கல்விச்சேவை மாணவர்களை ஊக்குவித்து வருகிறது.

மாணவர்கள் சுயமாக தமது உணர்வுகளை, கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக மாணவர் மன்றம் ஒன்றை கல்விச் சேவை உருவாக்கியுள்ளது. இம்மன்றத்தில் மாணவர்கள் தாமே கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர். தமிழ்மொழி, கலாசாரம், பண்பாடு, உலக நடப்புகள் என இக்கருத்தரங்குளில் விவாதிக்கப்படுகின்றன. இதனால் மாணவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள, தமிழ்மாணவர்களாய் வாழ கல்விச்சேவை பெரும்பங்காற்றியுள்ளது.

இலங்கையிலிருந்து வந்திருந்த பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், ஜேர்மனியில் தமிழ்மொழி கற்பித்து பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், ஜேர்மனியில் தமிழ்மொழி கற்றுத் தேர்ந்து கற்பிக்க முன்வந்த பயிற்சி ஆசிரியர்கள் அனைவருக்குமான கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகளை நடாத்தி, ஐரோப்பாவில் தமிழாசிரியர் சமூகம் ஒன்றை உருவாக்கிக் கல்விச் சேவை பெருமை சேர்த்துள்ளது.

ஐரோப்பாவில் தமிழ்ப் பாடசாலைகள் நடாத்தும் ஆண்டு விழாக்களிலும், கல்விச் சேவை நடாத்தும் ஆண்டு விழாக்களிலும், தமிழ்க் கலை நிகழ்ச்சிகளை நடாத்த கல்விச் சேவை ஊக்குவித்து வருகிறது. இதனால் புகலிட தமிழ் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதோடு, தமிழ்கலாசார விழுமியங்கள் தமிழ் மாணவர்களின் மனதில் உறுதிபட நிறைந்து நிற்க கல்விச்சேவை வழிவகுத்துள்ளது.

தமிழ்பாடசாலைகள் எங்கும், திருக்குறள் மனனப் போட்டிகளையும், திருவள்ளுவர் விழாக்களையும் நடாத்த கல்விச்சேவை ஊக்குவித்து வருகிறது. இதனால் திருக்குறளையும், திருவள்ளுவரையும் புகலிட மாணவர்கள் மத்தியில் தெரியவைத்து, பதியம்வைத்து கல்விச்சேவை வளர்த்து விட்டிருக்கிறது.

ஆண்டுப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும்போது, மாணவர்களின் திறமைகளை, குறைகளை, விடுகின்ற பொதுவான பிழைகளை, பரீட்சைக்குழு கவனமுடன் குறிப்பெடுத்துத் தொகுத்து கல்விச் சேவை ஆண்டு விழாக்களில் ஒரு நிகழ்ச்சியாகத் தொகுத்தளித்து கல்விச் சேவை பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.


இதுபோன்ற பல வெற்றிப்படிகளில் நடந்து வந்த ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையின் வளர்ச்சியில் இன்றுவரை தொடர்ந்து தம்மைத் தியாகம் செய்துள்ள தலைவர்.திரு.பொ.சிறிஜீவகன், அவரது துணைவியார் திருமதி.கிளி சிறிஜீவகன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களான திரு.வ.சிவராஜா, திரு.பொ.புத்திசாகாமணி, திரு.அம்பலவன் புவனேந்திரன், கல்விச் சேவையின் உபதலைவர் திருமதி.கலாமகேந்திரன் ஆகியோர்

புகலிடத் தமிழ்ப் பாடசாலைகளில் பன்னிரண்டாம் வகுப்புவரை தமிழ்கற்று கல்விச் சேவையின் மாணவர் மன்றத்தில் இணைந்து பணியாற்றி, இப்போது கல்விச் சேவையின் செயற்குழு உறுப்பினர்களாக செயலாற்றும் துணிச்சலும், துடிப்பும் மிக்க இளையவர்கள், ஏனையோருக்கு முன்மாதிரியாக தடம்பதித்த தமிழ்மாணவர்களாகும்.

உயர்ந்து, அகன்று, ஆழஊடுருவி ஆலவிருடச்சமாய் வளர்ந்து நிற்கும் ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையில் பணியாற்றியவன் என்ற வகையில் வெள்ளிவிழாக் கண்டு அகமகிழ்வுறுகிறேன். கல்விச் சேவை பொன்விழா, வைரவிழா, பவளவிழா, நூற்றாண்டு விழாக்கள் கண்டு புகலிடத் தமிழ்மாணவர்களுக்கு, தமிழ்க் கல்விச் சேவையாற்ற வேண்டும் என்று நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறேன். "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்வோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர், (ஓய்வு நிலை) இலங்கை. பன்முக மூத்த எழுத்தாளர் திரு.தில்லைநடராசா அவர்கள்



### புலம் சிதறி வாழும் நாடுகளிலும் அர்ப்பணிப்புடன் தமிழ்ப்பணியும் அறிவுப்பணியும் ஆற்றிவரும் நிறுவனம்.

1970ஆம் ஆண்டுகளின் பிற்பகுதி – 1980ஆண்டுகளின் ஆரம்பம் வடகிழக்கு பகுதிகளில் திடீர்திடீரென்று தோன்றிய பிரச்சினைகள் பலரை பல்வேறு நாடுகளுக்கு புலம் சிதற வைத்தது. சிலர் யேர்மனிக்கும் புலம் பெயர்ந்து சென்றனர். என்னதான் புலம் சிதறி வாழ்ந்தாலும் பலரால் எமது நாடு, எமது மொழி, எமது பண்பாடு ஆகியவற்றை மறந்து வாழமுடியவில்லை. தாம் பெற்றுச்சுவைத்த தமிழ் மொழி இன்பத்தை தமது வருங்காலச் சந்ததியும் பெற்று இன்புற வேண்டும்., நமது தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களில் தமது வருங்காலச் சந்ததியும் ஊறித்திளைக்க வேண்டுமென்ற ஆவலால் 25 வருடங்களுக்கு முன்பு யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையை ஆரம்பித்து நன்கு திட்டமிட்ட வகையில் சிறப்பான பணியாற்றி வருகின்றனர்.

இலங்கையிலிருந்து பாடநூல்களை சிரமம் பாராது பெற்று, ஒழுங்கான பாடவிதானத்துக்கமைவாக கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, சித்திபெறும் மாணவர்களுக்குப் பெறுதியான பரிசில்கள் வழங்கி ஊக்குவிப்பதோடு, பல்வேறு பரீட்சைகளையும் போட்டிகளையும் நடாத்தி, சாதனை நிலைநாட்டும் மாணவமணிகளுக்கு ஈழத்து தமிழறிஞர்கள் பெயரால் பரிசில்களும் விருதுகளும் வழங்கி வருவதை நன்கு அறிவேன். அவ்வப்போது இலங்கையிலிருந்தும் அறிஞர் பெருமக்களை அழைத்து பாராட்டிக் கௌரவம் செய்து வரும் யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையையும், தொடர்ந்து சீராக இயக்கி வரும் திருமிரு.பொ.சிறீஜீவகனையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

25 ஆண்டுகள் இடைவிடாது ஆற்றி வரும் சேவைக்காக இரட்டிப்பு மகிழ்வுடன் பாராட்டுவதோடு, இனி வரும்காலங்களிலும் பயனுறு பணிகள் பலநூறு ஆற்றிட வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் இலக்கியச்சுடர் திரு. த. இராமலிங்கம் அவர்கள் (சென்னை)

## மொழியாலேயே ஓர் இனம் அடையாளம் காணப்படுகிறது!

யேர்மனி நாட்டில், "யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை" என்னும் பெயரில், ஓர் அமைப்பினை உருவாக்கித் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கும் வண்ணம் அவ்வமைப்பு இயங்கி வருவதனை, சில ஆண்டுகளுக்கு முன்னர் அறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன்.

இவ்வமைப்பு, தனது இருபத்தைந்தாம் ஆண்டினை நிறைவு செய்கிறது என்பதை அறிந்தபோது, மகிழ்ச்சியுடன் வியப்பும், பெருமையும், பெருமிதமும் என்னை ஆட்கொண்டன.

"திறமையாளனைக் கடலில் மூழ்கடித்தாலும், அவன் கையில் முத்துக்களுடன் கரை சேர்வான்" என்று தமிழில் ஒரு சொல்லடை உண்டு. அதற்கு உதாரணம் தமிழர்களே!

புலம்பெயர்ந்து வாழும் சூழல் ஏற்பட்ட துயரத்திலும், சென்ற இடங்களிலெல்லாம், மொழியின் உயர்வையும் தமது கலை மற்றும் கலாச்சார உயர்வுகளையும் நிலைநாட்டத் தமிழர்கள் தவறியதே இல்லை.

அவ்வழியில், யேர்மனி நாட்டில் தமிழ்க் கல்விச் சேவைக்காக அமைப்பு ஒன்றினை நிறுவி, தமிழ்மொழி, தமிழினம் என்பன தவிர வேறு எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் இருபத்தைந்தாண்டுகளாக இணையில்லா சேவைகளைச் செய்துவரும் தமிழன்பர்களை எந்தச் சொல் கொண்டு பாராட்டுவது...?

மொழியாலேயே ஓர் இனம் அடையாளம் காணப்படுகிறது. தமிழ்மொழியின் பெருமையையும், நூற்றாண்டுகள் பழமையான தனித்தன்மையையும் காத்துவருவது, தமிழினத்தின் கடமையாகும். குறிப்பாக நமது அடுத்த தலைமுறை இளைஞர்கள், நமது மொழியின் அழகையும், ஆளுமையையும், இம்மொழி தன்னகத்தே கொண்டுள்ள இலக்கியக் கருவூலங்களையும் அறிந்துகொள்ள வேண்டியது, காலத்தின் கட்டாயமாகும்.

இந்தக் குறிக்கோளுடன் செயல்படும் "யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை" என்னும் அருந்தமிழ் அமைப்பு, இன்னும் பல வெற்றிகளைக் காணவேண்டும் என்று உளமார வாழ்த்துகிறேன்.

தடங்கல்கள், சிக்கல்கள், குழப்பங்கள் என எவை வந்தாலும் அவற்றைத் துடைத்தெறிந்து தொடர்ந்து செயல்பட்டு, உங்கள் அனைத்து முயற்சிகளும் வெற்றியையே காணட்டும் என்று அன்புடன் வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமு/ஸ்ரீ மாமாங்க வித்தியாலய அதிபர் திருமதி.இ.தேவராஜா அவர்கள்

## ஒரு நாட்டின் பெருமை கல்விமான்களின் எண்ணிகையிலாகும்

இலங்கை வாழ் தமிழ் கல்விச் சிறார்களின் கல்வி மேம்பாட்டுத் துறையிலும், கல்விச் செயற்பாடுகளிலும் மிகச் சிறப்பானதொரு இடத்தைப் பிடித்துள்ள இவ்வுயர்ந்த யேர்மன் தமிழ்க் கல்விச்சேவை பாராட்டப்படவேண்டிய சேவையாகும். இச்சேவையை வாழ்த்தியும், பாராட்டியும் ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஒரு நாட்டின் பெருமை, அந்நாடு கொண்டுள்ள கல்விமான்களின் எண்ணிக்கையைக் கொண்டே கணிக்கப்படுகிறது என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். அந்தவகையில் எதிர்கால நன் மாணாக்கர்களை உருவாக்குகின்ற யேர்மன் கல்விச் சேவை (ஐரோப்பா)யின் பணி மிக, மிக உன்னதமான ஒன்றாகும்.

இவ்வாறு செயற்பட்டுவரும் இச்சேவை எமது பாடசாலையின் கல்வி அபிவிருத்திக் காக நிதி அனுப்பி உதவியமைக்குப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் சார்பாக நன்றி கூறுவதோடு, எமது பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

மேற்படி கல்விச்சேவை, தமது இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளிவிழாவை முன்னிட்டு வெளிவரவிருக்கும் சிறப்பு மலர் சிறப்பாக வெளிவந்து அனைவரதும் பாராட்டைப் பெற வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

இலங்கைத் தமிழ் மாணவர்களின் கல்வியியல் புலத்தில் நல்ல மாணவர்களை உருவாக்கும் நோக்குடன் இயங்கிவரும் இச்சேவை தனது இருபத்தைந்து ஆண்டு நிறைவுக்காய் இந்த ஞாபகார்த்தப் பேழையை உருவாக்கும் உத்தமப் பணியில் தம்மை அர்ப்பணித்து நிற்கும் மலராக்க ஆலோசனைக்குழு, மற்றும் இம்மலர் வெளியிட உதவி புரியும் அனைத்து கல்விமான்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகள் உரித்தாகட்டும்.

அத்தோடு இச்சொத்து எமது சமூகத்திற்குப் பல்லாண்டு காலம் கல்விப்பணிபுரிய எல்லாம் வல்ல இறைவனின் ஆசி வேண்டிப் பிரார்த்திப்பதோடு, மேற்படி கல்விச்சேவை மேலும் தொடரவும் வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர்**

**திரு. பொ.கனகசபாபதி அவர்கள்** (கனடா)

## வீட்டு மொழியாக தமிழ் ஆட்சி செய்தல் வேண்டும்

நீங்கள் திறம்படநிர்வகித்து வரும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை தொடர்ந்து இருபத்தி ஐந்து வருடங்கள் தமிழ்சேவையாற்றி வருவதை அறிந்து பேருவகை கொள்கிறேன். தமிழை தெடர்ந்து வரும் நமது தலைமுறையினர் பேசவும் எழுதவும் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற சீரிய நோக்கத்திலே தமிழ்க் கல்விச் சேவையின் நிர்வாகத்தர்கள் அரும் பெரும் பணியாற்றுவது கண்டு பெருமை கொள்கிறேன். கனடா , இங்கிலாந்து போன்ற நாடுகளிலே வீட்டு மொழியாக தமிழ் மறைந்து ஆங்கிலம் கொலு வீற்றிருக்கையில் தமிழ் மொழியின் நிலை என்னவாகும் என்ற கவலை தமிழ் ஆர்வலர்களின் மனதினைக் குடைந்து கொண்டிருக்கிறது. அதே சமயம் உங்களது நாட்டிலும் அதிக ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் மொழியே தொடர்ந்து வீட்டு மொழியாக ஆட்சி செய்வது தமிழ் வாழும் நம்பிக்கையை எமக்குத் தருகிறது. உங்கள் நாட்டின் தமிழ்ப் பெற்றோர்களைப் பாராட்டவேண்டும் என்பதுடன் அவர்களை இவ்விதமாக செயற்பட ஏவுகின்ற உங்களது தமிழ்க் கல்விச் சேவையையும் பாராட்ட வேண்டும். தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் மொழியினை ஆவலுடன் கற்பதற்கு வேண்டிய பல உத்திகளைக் கையாண்டு ஊக்குவிக்கின்றீர்கள். பாராட்டுக்கள். உங்கள் பணி தொடரட்டும். தமிழ் மொழி தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக ஒலிக்கட்டும்.

---

**நகைச்சுவைத் தென்றல் புலவர் இரெ. சண்முகவடிவேல் அவர்கள்**

## முன்னோர்கள் நம்மிடம் கொடுத்துச் சென்ற பரம்பரைச்சொத்தே தமிழ்மொழி

இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ்ச் சேவையை யேர்மன் நாட்டிலிருந்து கொண்டு ஆற்றிவரும் தமிழ்க் கல்விச்சேவை செய்துவரும் தொண்டு, அடிப்படையானது மட்டுமன்று. இன்றைய நிலையில் மிகமிக இன்றியமையாததுமாகும்.

கால்நூற்றாண்டுக் காலமாக இச்சேவையை இனிதே புரிந்துவரும் தொண்டர்கள் யாவருக்கும் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னிடம் தரப்பட்ட பாரம்பரியச் சொத்தினை, நான் அனுபவித்ததோடு நில்லாமல், என் சந்ததியினரிடம் எந்தச் சேதமும் இல்லாதவாறு ஒப்படைத்துவிட்டுப் போவதுதான், என் கடமையும் பொறுப்பும் ஆகும்.

நம் முன்னோர்கள் நம்மிடம் கொடுத்துச் சென்ற பரம்பரைச் சொத்தே தமிழ்மொழி ஆகும். இந்தத் தமிழ்தான் நம்மைப், பேச வைத்தது, எழுத வைத்தது, எண்ண வைத்தது, எண்ணியதை எல்லோரும் வியக்கும்படியாக இயம்பவும் வைத்தது.

இந்த அமிழ்தத் தமிழை முடிந்தால் வளர்க்க வேண்டும். முடியாதபோது அழிவில்லாமல் நம் பின்னோரிடம் கொடுத்துச் செல்வதுதான் ஒவ்வொரு தமிழனும் செய்ய வேண்டியது.

முன்னோர் தந்த அமுதத்தைப் பின்னோரிடம் அமுதமாகவே தரும் முயற்சியில் தமிழ்க் கல்விச்சேவை ஈடுபட்டுள்ளதை எண்ணி இறும்பூதெய்துகிறேன்.

தங்களின் தொண்டு தொடரவும் இனிய தமிழ் வளரவும் தமிழன்னை திருவருள் புரிவாளாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னாள் உப அதிபர் திரு.தம்பிப்பிள்ளை கந்தையா அவர்கள்** (கனடா)

# தாய்மொழி தமிழே சிதறிய உறவுகளை இணைக்கும் பாலமாகும்

ஒருவருடைய வாழ்க்கையில் பெறும் வெற்றிகள் அனைத்திலும் அவருடைய உழைப்பு இருக்கலாம், திறமை இருக்கலாம், ஆற்றல் இருக்கலாம். ஆனால் அவரை அந்த வெற்றிக்கு இட்டுச் செல்வது, அவரைச் சார்ந்த சமூகமே ஆகும். ஆகையால் வாழ்வில் வெற்றியாளர்கள், மற்றும் ஓரளவிற்கு உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள் அனைவரும் சமூகத் திற்குத் திருப்பிச் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. அந்தவகையிலே புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளை இருவகையாகப் பார்க்கலாம். ஒன்று புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் எம்மினத்தின் அடையாளங்களை வளர்த்து வருவதுடன் அவற்றை ஆவணப்படுத்துவது. இரண்டாவது தாய்மண்ணில் தாம் பிறந்த சமூகமுன்னேற்றத்திற்கு உதவுவது. புலம் பெயர்ந்த பின்னரும் இவ்வாறு தாயகத்தின் நினைவுகளைச் சுமந்து வாழும் மனிதநேயம் கொண்டவர்களே இத்தகைய கடமைகளைப் புரிந்து வருகின்றனர். அந்தப் பாதையிலே இவ்விரு கடமைகளையும் மிகச் சிறப்பாகச் செயலாற்றிவரும் “யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை“ இன்று வெள்ளிவிழாக் கொண்டாடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையிலுள்ள பேரினவாதிகளின் கொடுமைகள், போர்கள், இன அழிப்புகளையும் தாண்டி, ஈழத்தில் வாழும் எமது இனம் ஏதோ ஓரளவு நிம்மதியாக வாழ்கின்றார்களென்றால் அதற்குரிய காரணிகளாக அமைவது, எமது தாய் மண்ணிலிருந்து சர்வதேசப்பரப்பிற்கு விசிறியடிக்கப்பட்ட எமது உறவுகளின் அயராத உழைப்பும் விடாமுயற்சியும், பிறந்த மண்ணுக்குக் கொடுக்கும் ஒத்துழைப்புமேயாகும். இவ்வாறு உலகின் பலபாகங்களிலும் வாழும் நம்மின மக்கள் தமது மொழி மற்றும் அடையாளங்களை மறந்து, அந்தந்த நாடுகளின் நாகரீகத்தில் மூழ்கி இன்புற்றிருக்கும் நிலைக்கு மாறாக “யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை“யின் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானதாகவும், முதன்மையானதாகவும், போற்றப் படவேண்டியவையாகவும் அமைகின்றன.

1998ம் ஆண்டிலிருந்து நான் அநேக முறைகள் ஜேர்மன் வந்து சென்றுள்ளேன். ஆனால் 2012ம் ஆண்டிலேயே “யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை“யின் தலைவரும், மற்றும் பல பொறுப்பான பதவிகளை வகித்து வருபவருமான சிறீஜீவகனின் அறிமுகம் கிடைத்தது. அதன் காரணமாக அந்த ஆண்டிலேயே ஐந்து நிகழ்வுகளில் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பும் கிட்டியது. அதில் நான்கு நிகழ்வுகளில் என்னுடன் துணைவியாரையும் அழைத்து பாராட்டிக் கௌரவித்தமை, என்றென்றும் மறக்கமுடியாத பசுமை நிறைந்த செயற்பாடுகளாகும். ஐந்தாவது நிகழ்வு லண்டன் தமிழ் வானொலிக்கு தொலைபேசி மூலம் பேட்டி கொடுத்தல். இதை ஒழுங்கு செய்தவர் “மண்“ சஞ்சிகை ஆசிரியர் சிவராசா என்பதும் குறிப்பிடத்தக்கது.

எமது மொழி, பண்பாட்டின் நல்ல அம்சங்களைப் பாதுகாப்பதும், அதை அடுத்த தலைமுறையினர்க்கு எடுத்துச் செல்வதும், உலகின் பல பாகங்களிலும் வாழும் உறவுகளைப் பேணிக்காப்பதுமான இச் சேவை மையத்தின் செயற்பாடுகள் மிகவும் வரவேற்கத்தக்கவை. உறவுகளைப் பேணிக்காப்பதற்கு முக்கியம் தொடர்புகொள்வது. தொடர்பு கொள்வதற்கு முக்கியம் மொழியாகும். அத்தொடர்பு மொழியே எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழி யாகிய தமிழ்மொழியாகும். அந்த மொழியாகிய தமிழே புலத்தில் வாழும் உறவுகளை இணைக்கும் பாலமாகும். தமிழ் மறையாதிருக்க தமிழை நாம் மறவாதிருக்க வேண்டும். தமிழை மறவாதிருக்க புலத்தில் வாழும் ஒவ்வொரு மாணவனும் தமிழைத் தவறாது கற்பது மிகவும் அவசியம்.

"தமிழன் என்று பெருமையோடு, தலைநிமிர்ந்து நில்லடா,

தரணி எங்கும் இணையில்லா உன், சரிதை கொண்டு செல்லடா" என்ற பாடலின் கூற்றுக்கமைய, புலம்பெயர்ந்து வாழும் சேவை மனப்பான்மை கொண்ட மக்கள் எம் இனத்தின் அடையாளங்களைக் கொண்டு சென்று வளர்த்து வருகின்றனர். இன்றைய நிலையில் பலர் சேவை செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தபோதிலும் சூழ்நிலைகளோ குடும்பங்களோ இடம் கொடுப்பதில்லை. அனைத்தையும் தாண்டி சேவை செய்பவர்களே உண்மையான சேவையாளர் ஆவார். உலகிலுள்ள அனைத்து மக்களிடமும் நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். சேவை என்னும்போது ஒருவர் தன்னிடமுள்ள நல்லனவற்றை மட்டும் மற்றவர்களுடன் அன்போடும் அக்கறையோடும் பகிர்ந்து கொள்வதாகும். அதாவது தன்னிட முள்ள ஆற்றல்கள், திறன்கள், நற்பண்புகள், செல்வம், நேரம் முதலியவற்றை எதுவித சுயநலமோ, எதிர்பார்ப்போ இன்றி வழங்குவதே உண்மையான சேவையாகும். அந்த வகையில் "யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை" நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருமே தன்நலம் கருதாத சேவையாளர்கள் என்பது யாவரும் அறிந்ததே.

அனைத்திற்கும் மேலாக இச்செயற்பாடுகள் அனைத்திற்கும் இடத்தையும் வாய்ப்பையும் கொடுத்த யேர்மன் அரசிற்கு நன்றிகள் சொல்ல வார்த்தைகளே இல்லை. ஆகையால் அந்த அரசின் அந்த சட்டதிட்டங்களுக்கு அமைய ஒழுங்காக நடந்து ஒத்துழைப்பைக் கொடுப்பதே ஒவ்வொரு தமிழனும் அந்த நாட்டிற்குக் காட்டும் நன்றிக் கடனாகும்.

இக் கல்விச்சேவை பலசேவை மையங்களுக்கூடாக கவிதைகள், நூல்கள் முதலிய வற்றை வெளியிடுவதோடு, கருத்துக்களம், கலைநிகழ்ச்சிகள், தமிழறிவுப் போட்டி, திருக்குறள் போட்டிகளை நடாத்தித் தராதரப் பத்திரங்களை வழங்குவதோடு, அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு ஈழத்து அறிஞர்கள் பெயர்களில் ஞாபக வெற்றிக் கிண்ணங்களை வழங்குவது ஒரு சிறப்பம்சமாகும்.

மலர் வெளியீடு என்பது ஒரு வரலாற்று நிகழ்வாகும். காலங்கள் மாறலாம், கருத்துக்கள் மாறலாம், களங்கள் மாறலாம். ஆனால் உறுதியான மனமும் நம்பிக்கையுமே மனித வாழ்வின் ஆதாரங்களாகும். அவற்றின் அடிப்படையிலேயே வெற்றிகள் கிட்டுகின்றன. ஒவ்வொருவரிடமும் ஆற்றல் இருக்கிறது. நம்பிக்கையோடு முன்னேறினால் வெற்றி நிச்சயம். அதன் வழிநின்று அகவை இருபத்தைந்தைக் கண்ட "ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை" பலவளங்களையும் பெற்று, வளர்ச்சி கண்டு, மேலும் பலவிழாக்களைப் புதுப்பொலிவுடன் கொண்டாடி, பல்லாண்டுபல்லாண்டு, பலநூற்றாண்டு வாழ்க வளர்க என எல்லாம் வல்ல சிவபரமாத்மாவை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரகேசரி பத்திரிகைப் பதிப்பாசிரியர் திரு.வி.தேவராஜா அவர்கள்**

# எமது இனத்தையும் மொழியையும் காப்பாற்றும் பணிகள் தொடர வாழ்த்துக்கள்!

தமிழினத்தின் தலைவிதி புலம்பெயர் தமிழர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. இது பற்றிய உண்மைநிலை இப்போதைக்கு முழுமையாக உணரப்படாதிருந்த போதும், காலம் ஒரு நாள் இதனை தமிழ்மக்களுக்கு உணர்த்தும் என்பதில் எவ்வித கருத்துக் களுக்கும் இடமில்லை.

யூதர்கள் தங்களுக்கு எதிரான கொடூரங்களிலிருந்து தப்புவதற்கு உலகின் பல நாடுகளிலும் தஞ்சமடைந்தனர். நாட்டைவிட்டு வெளியேறி அனாதைகளாக, அகதிகளாக சிதறுண்டு வாழ்ந்தபோதும் தமது இனத்தையோ தமது மொழியையோ தமக்கான ஒரு நாட்டையோ மீண்டும் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணப்பாடு அவர்களுடைய இரத்தத்தில் கலந்த ஒன்றாக வருங்காலச் சந்ததிக்கும் ஊட்டப்பட்டது. அதனை யூதர்கள் வெறுங்கனவாக கலைந்துபோக விடவில்லை. நிதர்சனமாக்கினர்.

யூதர்களின் நிலையில்தான் இன்று தமிழ்மக்கள் வாழ்கின்றனர். இனத்துவேசம் தமிழ்மக்களை இந்நாட்டிலிருந்து முற்றாகத் துரத்தியடித்து விடவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்கள் தவிர்த்து கணிசமானவர்கள் இலங்கை மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

முள்ளிவாய்க்காலுடன் அனைத்தையும் இழந்த தமிழ்மக்களை இன, மொழி, கலாச்சார விழுமியங்களையும், வேரறுத்துப் புதைத்துவிட பேரினவாதச் சக்திகளின் நிகழ்ச்சி நிரல்கள் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மொத்தத்தில் இன்னுமொரு முள்ளிவாய்க்காலுக்கு தமிழ் மக்கள் இழுத்துச் செல்லப்படுகின்றனர். இந்த ஒரு பின்னணியில் புலம்பெயர் தமிழர்களின் பிரசன்னம், ஒன்றிணைந்த, திட்டமிட்ட செயற்பாடுகள் தமிழினத்தை மீண்டும் தலைநிமிரச் செய்ய வழிவகுக்கும்.

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை இந்தப் பயணத்தில் எதிர்காலத்தில் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமுதாயத்தை உள்வாங்கிக் கொள்வதற்கு நிறையவே பணிகளைச் செய்து வருகின்றது. இந்த மன்றம் ஆற்றும் தமிழ்ப்பணி எமது இனத்தையும் மொழியையும் காப்பாற்றும் கடப்பாட்டை வருங்காலச் சந்ததியின் கையில் ஒப்படைத்துள்ளது. இவர்களது இந்தப்பணி மேலும் சிறக்க எனது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி சிரேட்ட விரிவுரையாளர் வித்தியா சிரோன்மணி நடராஜா பார்த்தீபன் அவர்கள்**



நாடு கடந்த போதிலும் நற்றமிழை மறவாது
நாவேந்தர் தம்மையும் நன்றியொடு நினைந்து
நற்பணி ஆற்றிடும் யேர்மன் தமிழ்க் கல்விச்
சேவை தொடர்வோரே! செயற்கரிய பணிபுரிந்து
வெள்ளி விழாக் காணும் வெற்றித் தமிழ்க் காப்போரே
உம்பணி தொடர்ந்திட உளம்கனிந்த வாழ்த்துக்கள்.

புலம் பெயர்ந்த போதிலும் எம் தமிழ் மொழியைப் பேண வேண்டும் என்ற அவாவுடனும், அனுபவத்துடனும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை நிறுவனம் கல்விப் பணி செய்வதையிட்டு நான் அகமகிழ்ந்து வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

"தாயோடு அறுசுவை போம்" என்பது போல் மொழியோடு எல்லாம் போய்விடும் என்பதை உணர்ந்தோர் புலம்பெயர வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளான போதும் தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கைவிடாது கல்விச் சேவையூடாக கலாசார, பண்பாட்டு, விழுமியப் பேணலைக் கைக்கொள்வது காலத்தின் தேவை எனக் கருதிச் செய்யும் அளப்பரிய சேவையை உளப்பூர்வமாக வாழ்த்தும் கடப்பாடு எமக்குண்டு.

தமிழை மறக்காது, குறிப்பாகத் தமிழ்த் தொண்டாற்றிய பெரியோரை மறக்காது ஒவ்வொரு ஆண்டிலும் ஞாபக வெற்றிக் கிண்ணத்தை ஈழத்து அறிஞர்களின் பெயர்களில் வழங்குவதும், இலங்கையில்கூட சுவாமி விபுலாநந்தரை நினைவு கூர்ந்து தமிழ்மொழித் தினத்தைக் கொண்டாடும் நிலையில், யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை பத்து அறிஞர்களை நினைவு கூர்வதும், பிரதேச, மத, இன வேறுபாடுகளைக் கடந்து அதன் கொள்கைக்கேற்பச் செயற்படுவதும் பாராட்டுக்குரியது. உங்கள் பணி சிறக்க வாழ்த்துவதில் மகிழ்கின்றேன்.

கற்ற கல்விதனைப் பெற்ற பேறென மற்றவரும் பயன்பெற எண்ணும் உங்களின் சிந்தனையும், செயலும் உன்னதமானது. உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும் என்ற பாரதியின் தீர்க்க தரிசனமான கருத்து யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் செயற்பாடுகளில் தெரிகிறது. எல்லை கடந்த இந்த உலகினில் தமிழ்மொழி வளம் பெருக்கிட உழைத்திடும் இந்த உழைப்பு வீண்போகாது என்று நம்பிக்கையுடன் வாழ்த்துவது சந்தோ'மாயிருக்கிறது.

மிக்க நல்ல, காத்திரமானமுயற்சியைச் செய்வது போற்றுதற்குரியது. பொதுவாக, படிப்பு, பரீட்சை, முடிவு..... மீண்டும் படிப்பு, பரீட்சை, முடிவு என்று தொடர்வதுதான் வழக்கம். ஆனால் பரீட்சையின் பின் மாணவர்களிடம் சென்று அவர்களின் விடைத்தாள்களைக் காட்டி, தவறுகள் திருத்தப்பட்டு..... இப்புதிய, புரட்சிகர, சற்றுக் கடினமான ஆனால் அத்தியாவசியமான முயற்சி வரவேற்புக்குரியது. தவறுகளிலிருந்து பாடம் படிக்காத எமது தலைமுறைக்கு தவறுகளிலிருந்து திருந்தும் முயற்சி முற்போக்கானது. இந்த சிறந்த முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

பல்வேறு வேலைப்பளுக்களுக்கிடையில் முற்போக்கான சிறந்த சிந்தனைகளுடன் இயங்கிவரும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையினை வாழ்த்தக் கிடைத்த வாய்ப்பை பெரும்வரப்பிரசாதமாகக் கருதி வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூலகவியலாளர் திரு.என்.செல்வராஜா அவர்கள்** (லண்டன்)

# தாய் மொழியைக் கற்பதால் தன் தனித்துவ மொழி அடையாளத்தைப் பேணலாம்

1989ஆம் ஆண்டில் தை 18இல் டோட்முண்ட் கரித்தாஸ் நிறுவன உதவியுடன் தொடக்கப்பட்ட ஜேர்மன் தமிழ்க்கல்விச் சேவை தனது இருபத்தைந்தாவது ஆண்டை வெள்ளிவிழாவாகக் கொண்டாட முன்வந்திருக்கும் இவ்வேளையில், அவ்வமைப்பின் தலைவராகவிருந்து கல்விச் சேவைக்கு வழிகாட்டிவரும் திரு. பொ.ஸ்ரீஜீவகன் அவர்களுக்கும், அவரது ஆசிரியர் குழாமிற்கும் எனது உளம்கனிந்த வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புகலிடத்தின் தமிழ்க்கல்வி என்பது பல்வேறு காரணங்களால் முக்கியத்துவம் பெறுகின்றது. தாயகத்தை விட்டுநீங்கி ஐரோப்பிய நாடொன்றில் நிம்மதியாக வாழ்ந்து தம்மையும், தமது சந்ததியினரையும் வளமுடன் காத்துக்கொள்ள ஈழத் தமிழரின் ஒரு தலைமுறை தீர்மானித்தது. அதன் விளைவே ஐரோப்பிய புலப்பெயர்வு. தாயகத்தைவிட்டு வெளியேறியவேளையில் அவர்கள் வெறும் கையுடன் வெளியேறவில்லை. தம்முடன் தமது மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் அனைத்தையுமே கொண்டு சென்றார்கள். அதனைத் தாம் புகலிடம் தேடிய நாடுகளில் முடிந்தவரை பதியம் வைத்தார்கள். அதன்வழியாக ஒரு ஆத்மதிருப்தியைக் கண்டார்கள்.

புதுமையான அந்நிய மண், பழக்கப்படாத சுவாத்தியம், புரியாத மொழி, கலாச்சாரம் எனப் பல்வேறு அந்நியங்களுக்குள் தம்மைப் பொருத்திக்கொள்ளவேண்டிய வாழ்வியல் போராட்டமாக அவர்களது புலம்பெயர்வாழ்வு அமைந்தது. தனது இனத்தின் தனித்துவம் இந்தப் புலம்பெயர் தேசத்தின் கலாசாரத்தினுள் கரைந்து மறைந்துவிடுமோவென்ற கவலையும், பயமும் அவர்களைத் தீவிரமாகச் சிந்திக்கவைத்தது. தனது குடும்பம் தாயக மண்ணிலிருந்து வேற்று மண்ணில் பதியம்வைக்கப்பட்டவேளை, தாம் காவி வந்த தமது நெஞ்சுக்கு நெருக்கமான மொழி, கலாச்சாரம், பாரம்பரியங்களை தமது தலைமுறையினரும் தொடரவேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அவ்வழியாகவே தனது குடும்பத்தின் தனித்துவம் பேணப்படும் என்ற ஒவ்வொரு குடும்பத்தலைவனும், தலைவியும் நினைக்க, அதற்கான வழிமுறையாகக் காணப்பெற்றதே தாய்மொழிக் கல்விச்சாலையாகும். தாய் மொழியைக் கற்பதால் தன் தனித்துவ மொழி அடையாளத்தைப் பேணலாம், அதன்மூலம் கலை, கலாச்சாரங்களையும் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற தனிமனித எண்ணமே ஒரு சமூகத்தின் எண்ணக்கருவாகவும் மாறியது.

அவ்வெண்ணக்கருவுக்கு செயல்வடிவம் கொடுக்கும் ஒரு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகால முன்னெடுப்பாகவே திரு ஸ்ரீஜீவகனின் யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையின் உருவாக்கம் 80களின் இறுதிப்பகுதிகளில் முளைகொண்டது என்பதை பதிவுசெய்யவேண்டும். இருபத்தைந்து ஆண்டுகளின் பின் இவ்வெண்ணக்கரு யேர்மன் தமிழர் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை இம்மலர் ஒரு ஐந்தொகையாகக் காட்டுகின்றது என்று கூறலாம்.

யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையின் பணிகள் பல்பரிமாணம் கொண்டவை. அவை தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்குவதுடன் மட்டும் நிற்கவில்லை. தமிழ்மொழிப் பொதுப்பரீட்சையொன்றை ஒவ்வொரு ஆண்டும் நடத்திச் சான்றிதழ் வழங்கல், கல்விக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் என்பவற்றை நடத்துதல், வேற்றுமொழி ஆசிரியர்களையும் இணைத்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல், மாணவர் கருத்துக்களம் நடத்துதல், கலைநிகழ்ச்சிகளை மாணவர்களிடையே ஊக்குவித்தல், பயிற்சிப் புத்தகங்கள், சிறுவர் நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றைத் தயாரித்தல், வெளியிடல், அதன் மூலம் இரண்டாம் தலைமுறை தமிழ் எழுத்தாளர்களை புகலிடத்தில் உருவாக்குதல் என இப்பட்டியல் நீளும்.

இத்திட்டத்தில் இந்த 25 ஆண்டுகாலப் பயணத்தில் சாதித்தவை எவை என்பதை இம்மலர் எமக்கு அறியத்தரும். கால்நூற்றாண்டாக யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையில் தமிழ் கற்ற பழைய மாணவர்களின் நிலை என்ன, ஆசிரியர்களின் துறைசார் வளர்ச்சி எவ்வளவுதூரம் விரிவடைந்துள்ளது என்பன போன்ற கேள்விகளுக்குப் பதில் தேடவேண்டிய அவசியமும், பழைய மாணவர்களிடையே எவ்வளவுதூரம் ஈழத்தமிழரின் கலை, கலாச்சாரம், மற்றும் தனித்துவமான அடையாளங்கள் இன்று பேணப்படுகின்றன என்பதை மீள்பரிசீலனை செய்யவேண்டிய கடப்பாடும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவைக்கு உண்டு. இதனை இந்த வெள்ளிவிழா மலர் பிரதிபலிக்கும் என்று நம்புகின்றேன்.

புலம்பெயர் சூழலில், ஆங்கிலம் அல்லாத வேற்று மொழியொன்றை கல்விப்புல மொழியாகக்கொண்ட யேர்மன், நோர்வே போன்ற நாடுகளில் தமிழ்க்கல்விச் சேவையாற்றல் என்பது இலகுவானதொன்றல்ல. அவ்வகையில் அத்தகையதொரு பணியைத் தளராமல் தொடரும் திரு பொ.ஸ்ரீஜீவகன் குடும்பத்தினருக்கும், அவர்களின் வழிகாட்டலில் இயங்கும் யேர்மன் தமிழ்க்கல்விச் சேவைஎன்னும் பெருவிருட்சத்தின் வேர்களுக்கும், விழுதுகளுக்கும் மீண்டும் வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முன்னாள் ஆசிரியை திருமதி.இரஞ்சிதம் கந்தையா** (கனடா)

## தேனமுதத் தமிழ்மொழியில் உள்ளம் உருகச் செய்யும் இனிமையான ஒரு வார்த்தை சேவை.

தேனமுதத் தமிழ்மொழியில் உள்ளம் உருகச் செய்யும் இனிமையான ஒரு வார்த்தை சேவை. சேவையில் சுயசேவை, சமூகசேவை, கல்விச்சேவை, ஆன்மீகசேவை எனப் பலதரப்பட்ட சேவைகள் உண்டு. இவை அனைத்தும் சரீரம், மனம், செல்வம் என்பவற்றின் ஊடாகச் செய்யப்படுகின்றது. சதா சந்தோஷமாகவும், திருப்தியாகவும், ஓய்வுநேரத்தைத் துறந்தும் செய்வதே உண்மையான சேவையாகும். உலகிலுள்ள செல்வங்கள் எல்லாவற்றிலும் மேலான செல்வம் கல்விச் செல்வமாகும். எதனாலும் அழிக்கமுடியாத செல்வம் கல்வி. இத்தகைய கல்விச் சேவை எமக்கு இந்தப் பிறவியில் மட்டுமல்லாது அடுத்த பல பிறவிகளிலும் பலனைத் தரும் என்பது ஆன்மீகக் கூற்று.


தாய் மண்ணைப் பிரிந்து, இந்நிய மண்ணில் வாழும் எமது வாழ்விலே எமது கல்வி, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றை வெளிப்படுத்துவதற்கு மொழி இன்றியமையாததொன்றாகும். புலம்பெயர் நாடுகளிலே எமது அடுத்துவரும் சந்ததியினர் தமிழ்மொழி பேச வேண்டும், எழுதவேண்டும் என்ற பரந்த நோக்கத்துடன் நிறுவப்பட்டிருக்கிறது இந்த யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் ஒலிக்க வேண்டும் என்பதற்காக இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் பயிற்றுவித்துக் கலைவிழாக்கள் பல நடாத்தி வருகின்றனர். இங்கே சேவை புரியும் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள் புலம்பெயர் நாட்டிலே அதன் தேவை அறிந்து, தாம் விருப்பத்துடன் ஏற்றுக்கொண்ட சேவையை, இயந்திரமயமான வாழ்க்கை நடத்தும் புலம்பெயர் மண்ணிலே எத்தனையோ துன்பங்கள், தடைகளுக்கு மத்தியிலும் எமது வருங்காலச் சந்ததியினரிடையே மொழியை வளர்க்கவும், ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் தங்கள் ஓய்வு நேரத்தை துறந்தும், மெய்வருத்தம் பாராது, வருமானம் எதனையும் எதிர்பாராது சேவையாற்றி வருகின்றனர் என்பது பாராட்டுதலுக்குரிய விடயமாகும்.

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை புலம்பெயர் தேசத்திலே தமிழ் மாணவர்களின் தமிழ்க்கல்வியை அனைத்துத் தமிழ் மக்களும் பாராட்டும் வகையில் மிகவும் சிறந்த முறையில் வளர்த்து வருகிறார்கள் என்பதை இரண்டு வருடங்களுக்கு முன்னர் (2012ம் ஆண்டில்) மூன்று தமிழ் விழாக்களை நான் நேரில் பார்த்து வியப்படைந்திருக்கின்றேன். அதற்கு இக் கல்விச்சேவையை வழிநடாத்தும் சகலகலா வல்லமை பொருந்திய தலைவர், உறுதியான நிர்வாகம், ஆர்வம் நிறைந்த ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் மொழிப்பற்றுக் கொண்ட அனைவரின் அயராத ஒருமித்த முயற்சியே அடிப்படைக் காரணியாகும்.

காலத்தின் தேவை அறிந்து தேவையான சமயத்தில் தேவையான சேவையைச் செய்யவேண்டும் என்று உணர்ந்து, இவ்வுலகம் உள்ளவரை தமிழ் சிறப்பமைய வாழும் என்பதை நிருபித்துக் காட்டும் வகையில் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை தனது இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் கொண்டாடுகிறது. இன்னும் இக் கல்விச்சேவை பொன்விழா, வைரவிழா, பவளவிழா, நூற்றாண்டுவிழா என்பவற்றைக் கொண்டாடிப் புலம்பெயர் நாடுகளுக்கு ஒரு கலங்கரை விளக்காக ஒளிவீசித் திகழ வேண்டும் என்று இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன். இந்த விசேட தினத்தில் இக் கல்விச்சேவையை வாழ்த்துவதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறுவதுடன் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாத் தமிழ்ச் சங்கம் செயலாளர் தமிழருவி திரு.த.சிவகுமாரன் அவர்கள்



"தெய்வம் மறவார், செயும் கடன் பிழையார்"

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை வாழ்க! தமிழ் வளர்த்திட தழைத்து நின்று வாழ்க! யேர்மனை அடித்தளமாகக் கொண்டு ஏனைய ஐரோப்பிய நாடுகளில் மற்றும் புகலிடங்களில் வாழும் எம்மவரை தமிழராய் தமிழோடு வாழவைக்கும் இந்தச் சேவை தரணியுள்ளவரை வாழ்க! புலம்பெயர்ந்த நாடுகளின் மன்றுகளில், மேடைகளில் தமிழ் முழக்கம் செய்யச் செய்யும் கல்விச் சேவையின் சேவையை மனதார வாழ்த்துகின்றேன். 1989இல் ஆரம்பித்து 25 ஆண்டுகள், அப்பாடி! பிரமிப்பாய் இருக்கிறது, வாழ்த்துகிறேன்.

"தெய்வம் மறவார், செயும் கடன் பிழையார்" என்று தமிழர்களை கனவாய்க் கண்ட பாரதியின் கனவை நனவாக்கிய கல்விச்சேவையை வாழ்த்த வார்த்தைகளைத் தேடுகிறேன். புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் வரலாற்றில் மறக்காமல் பதிவு செய்யப்பட வேண்டியது யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் பணிகளாகும். சொந்தநாட்டில் வாழும் தமிழர்களிடம் இல்லாத உணர்வு, மெத்தனப் போக்காய் வந்த அசட்டைத்தனம் இன்மை புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்மவரிடம் நிறைய உண்டு.

ஒரு துடிப்போடு, தவிப்போடு, விருப்போடு நாம் ஓர் இனம், தமிழினம் அதற்கான ஒரு மொழி, கலை, கலாசார பின்னணிகள் உண்டு என்ற உணர்வு, சிந்தனை அங்கு போன சிலநாட்களிலேயே ஏற்பட்டு விடும். இதனைப் பலதடவைகள் வெளிநாடுகளில் எம்மவரது விழாக்களுக்குச் சென்ற வேளைகளில் நான் உணர்ந்ததுண்டு. அத்தகைய உணர்வுகளை ஒன்றிணைப்பதில், உருவாக்குவதில் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை வெற்றி பெற்று, வீறுநடைபோட்டு வருகின்றமை மிக்க மகிழ்வைத் தருகின்றது.

தம்பிள்ளைகளுக்கு தாய்மொழி, பண்பாடு, கலாசாரத்தைக் கற்பிக்க எழுந்த வேணவாவின் விளைவே யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் தொடக்கமும் வளர்ச்சியுமாகும்.

இந்த 25 வருடங்களாக இதற்காக உழைத்தவர்கள் மிகப் போற்றத் தக்கவர்கள். புலம்பெயர்ந்தோம், காசு பார்ப்போம் என்றில்லாமல், தம் உழைப்பினை, உழைப்பு நேரத்தினை, முயற்சியினை அர்ப்பணித்து தமிழ் வளர்க்க முனைந்த இவர்களை எவ்வளவு போற்றினாலும் தகும்.

1989 தை 18இல் தோன்றிய இக்கல்விச் சேவை இன்று வெள்ளிவிழாக் காண்பது மிகமிக மேன்மைக்குரியது. பாராட்டி வளர்க்க வேண்டிய முக்கியத்துவம் மிக்கது.

புலம்பெயர்ந்த நாடுகளில் எம்மவர்கள் மூன்று தலைமுறையினர் உளர்

1. தாயகத்திலிருந்து பெரியவர்களாகப் புலம்பெயர்ந்தவர்கள்
2. தாயகத்திலிருந்து சிறுவர்களாக, இளவயதினராகப் போய் அங்கு பெரியவர்களானவர்கள்.
3. அங்கேயே பிறந்த எம்மவரது குழந்தைகள்.

இதில் மூன்றாவது தலைமுறையினரை இலக்கு வைத்தே அதிக பணிகள் செய்யப்பட வேண்டும். ஆற்று வெள்ளத்தை அணைபோட்டுத் தடுத்து மடைமாற்றம் செய்யும் முயற்சியேயானாலும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை சாதித்திருக்கிறது. இன்னும் சாதிக்கும். அது சரித்திரமாகும்.

தமிழ்மொழி, கலாசாரம் பேணி, தமிழ்ப் பாடசாலைகளை நடத்தும் பணியிலும், இன்னும் இவற்றுடன் தொடர்புடைய பணிகளிலும் மென்மேலும் சிறந்து பொன்விழாவும் கண்டு பூரித்து வாழ வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட்



நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம்



முத்தமிழ் மன்றத் தமிழ்ப் பாடசாலை - அல்க்மார்.நெதர்லாந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழினி தமிழ்ப் பாடசாலை - செங்காளன். சுவிஸ்



ஜீவ வசன தமிழ்ப் பாடசாலை — பொற்றோப்



பரீட்சை மண்டபங்களில் பரீட்சை எழுதும் மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லாயன் தமிழ்ப் பாடசாலை – ஆன்ஸ்பேர்க்



திருவள்ளுவர் கலாச்சாரத் தமிழ்ப் பாடசாலை – முன்சென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் தமிழ்ப் பாடசாலை – சோஸ்ற்



ஜீவ வசன சபைத் தமிழ்ப் பாடசாலை - நூனர்பேர்க்



அறிவாலயம் தமிழ்ப் பாடசாலை – ஒபகௌசன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





23வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினர் திரு.திருமதி.கந்தையா ரஞ்சிதம் அவர்களைக் கௌரவிக்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23வது ஆண்டு விழாவில் திரு.க.பத்மகுணசீலன் அவர்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




20வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினர் திரு.வி.தேவராஜ் அவர்களைக் கௌரவிக்கும் காட்சி



20வது ஆண்டுவிழாவில் ஆசிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு விழா நிகழ்வுக் காட்சிகள்

15வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினர் திரு.தில்லைநடராசா அவர்கள் மலர் வெளியீடு செய்யும் காட்சி




16வது ஆண்டுவிழாவில் பிரதமவிருந்தினர் திரு.என்.செல்வராசா அவர்களைக் கௌரவிக்கும் காட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைத்தாள்களில் கண்டவை









18வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினர் திரு.ஹேயர்மன்
டோட்முண்ட் கரிதாஸ் நிறுவன அதிகாரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கீத ஆசிரியை திருமதி. கலைவாணி ஏகானந்தராஜா அவர்கள்**

# வரலாற்றுப் பதிவாகிட வாழ்த்துகிறேன் மனதார!

ஈழத் தமிழரின் வரலாறு, கலை, கலாச்சாரம், நாகரீகம் இவற்றையெல்லாம் தாங்கி நிற்பவள் தாயான எங்கள் தமிழ் மொழியே. கல்விவளர்ச்சி, மனோவளர்ச்சியை பேணி வளர்த்திட, தாய் மொழியின் அவசியத்தை நன்குணர்ந்த கற்றவர்கள் சிலர் கூடி, யேர்மனியில் முதன் முதலில் 1989 ம் ஆண்டில் யேர்மன் தமிழ் கல்விச் சேவையை ஆரம்பித்து வைத்தனர். "திரைகடலோடியும் தாய்மொழி காத்திடு " என்னும் புதுமொழியை முன்னெடுத்து, தாய்மொழிக் கல்வியை புலம்பெயர்ந்த எமது இளந் தலைமுறையினர்க்கு இருபத்தைந்து ஆண்டுகளாகப் புகட்டி வரும் அரும்பெருஞ் சேவையை செய்துவரும் யேர்மன் தமிழ் கல்விச்சேவையை பாராட்டாமல் இருக்கமுடியாது. ஒரு இனத்தின் வரலாறு அந்த இனத்தின் மொழி மட்டுமின்றி மொழிவழிப்பண்பாடு, கலை, கலாச்சாரம என்பவற்றிலேயே தங்கியுள்ளது. ஒரு சமுதாய வளர்ச்சிக்கு அத்தியவசியமான தாய்மொழிக் கல்வியையும், கலை, கலாச்சாரத்தையும் இணைத்து வருங்கால சந்ததியினரிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திவைத்த பெருமை இவர்களுக்கே உரியது.

பல்வேறு தடங்கல்களையும், தடைகளையும் தாண்டி, அரசியல், சமய, இன, இயக்க வேறுபாடின்றி இருபத்தைந்து ஆண்டுகளாக மொழித்தொண்டை ஆற்றிவரும் யேர்மன் தமிழ் கல்விச் சேவையின் பெயர் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட்டுவிட்டது. இரு தசாப்தங்களைத் தாண்டிய இவர்களது பணியை அடுத்த தலைமுறையினர் எடுத்துச் செல்வதை கண்கூடாய் காண்பதில் மகிழ்ச்சி அடைவதுடன், இக்காலகட்டத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதில் பெருமை கொள்கிறோம். ஆண்டுதோறும் கல்விச் சேவையின் ஆண்டுவிழாக்களில் ஆயிரக் கணக்கான மாணவர்கள் பரீட்சைக்கான சான்றிதள்களைப் பெற்றுக்கொண்டதுடன், இச்சான்றிதழானது யேர்மன் அரச பாடசாலைகளிலும், இலங்கை அரச பாடசாலைகளிலும் அங்கீகரிக்கப்பட்டு வருவது அனைவருக்கும் தெரிந்த விடயமே. தற்போது யேர்மன் சுவிற்சிலாந்து ஒல்லாந்து பாரீஸ் நாடுகளில் மட்டுமே தமிழ் பாடசாலைகளை நிர்வகித்துவரும் இக்கல்விச் சேவையானது தொடர்ந்து ஐரோப்பிய நாடெங்கிலும் தம் சேவையைப் பரப்பி அன்னிய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் வருங்காலச் சந்ததியினிடையே மொழிப்பற்றுடன் கலை, கலாச்சாரத்தை மேம்படுத்தி தமிழினத்துக்கு பெருமை சேர்த்திட எல்லாம்வல்ல இறைவனின் ஆசிகள் வேண்டி என் மனம் நிறைந்த வாழ்த்துகளை தெரிவிக்கிறேன். இக்கல்விச் சேவை நிர்வாகிகளையும் தலைவர் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் நல் இதயத்துடன் வாழ்த்துகிறேன்

கல்விக்கு வித்திட்டு கலைகளை மதித்திட்டு
புலம்பெயர் வாழ்விலே புலமைகளை வெளிப்படுத்தி
கன்னித்தமிழ் வளர்க்க கண்ணியமான பாடசாலை
வேண்டுமென எண்ணி வேற்று நாட்டெங்கும்
ஊற்றுப்போல் பெருகி உலகை வியக்க வைத்த
யேர்மன் தமிழ் கல்விச் சேவை
ஆண்டுகள் இருபத்தைந்து ஆற்றிவந்த பணிதனை
வரலாற்றுப் பதிவாகிட வாழ்த்துகிறேன் மனதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்கள் தூவிய நித்திய மலர்கள்

1. டோட்முண்ட் கரிதாஸ் நிறுவனம்
   Herr.Christoph Gehrmann
   Caritasverband Dortmund e.V

2. டோட்முண்ட் கரிதாஸ் நிறுவனம்
   Herr.Ralf Plogmann
   Caritasverband für den Kreis Unna e.V

3. டோட்முண்ட் கலாச்சாரப் பகுதி
   Herr.Gernot Rehberg
   Stadt Dortmund Kulturbetriebe

4. IN VIA
   Frau.Tina Geissen
   IN VIA Unna e.V
   Katholischer Verband für Mädchen-und
   Frauensozialarbeit


5. யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்
   திரு.வ.சிவராசா தலைவர்
   திரு.பொன்.புத்திசிகாமணி செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Caritasverband Dortmund e.V.
Bernhard – März - Haus

Caritasverband Dortmund e.V.



**25 Jahre Tamilischer Bildungsverein Deutschland e. V.**

Sehr geehrte Damen und Herren,
ich kann kaum glauben, dass schon wieder 10 Jahre vergangen sind, nachdem ich ein Grußwort zu Ihrem 15jährigen Jubiläum geschrieben habe. Meine ersten Begegnungen mit Menschen tamilischer Herkunft hatte ich übrigens in meinem Praktikum bei Frau Haarmann bei der Caritas Dortmund im Jahr 1987.
Wir sprechen also längst über mehr als eine ganze Generation tamilischen Lebens in Deutschland. Viele Kinder sind hier geboren, haben selbst schon wieder Kinder, Viele haben einen deutschen Pass. All das sind Zeichen von Integration, die gelungen ist. Und dennoch gelingt es Ihnen nun schon so viele Jahre dafür zu sorgen, dass Ihre Herkunft, Ihre Kultur und Sprache nicht in Vergessenheit geraten, sondern weitergegeben werden.
Ich freue mich mit Ihnen über diesen Erfolg und bin dankbar, dass Sie mit Ihrer Kultur unser gemeinsames Leben bunt und lebendig gestalten. Ich wünsche Ihnen und uns, dass wir diesen Weg gemeinsam weitergehen und wünsche Ihnen weiterhin bei Ihrem Tun viel Erfolg.
Für heute herzlichen Glückwunsch und für die Zukunft alle guten Wünsche!

Mit freundlichen Grüßen,
Christoph Gehrmann
Dienststellenleiter

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Trauer um Marlies Haarmann



## Frühere Leiterin des Bernhard-März-Hauses verstarb am Gründonnerstag 2012

Mit diesem Artikel wurde Marlies Haarmann im April 2012 noch einmal gewürdigt:

*Die Katholische Stadtkirche Dortmund und der Caritasverband Dortmund e.V. trauern um Marlies Haarmann. Die frühere Leiterin des Bernhard-März-Hauses und Islambeauftragte der Katholischen Stadtkirche verstarb am Gründonnerstag im Alter von 76 Jahren.*

*23 Jahre lang widmete sich Marlies Haarmann mit großem persönlichen Einsatz im Caritasverband Dortmund den Menschen in sozialen Notlagen. Ganz besonders galt ihr Engagement Flüchtlingen und Zuwanderern. Ihr Ziel war stets das friedliche Zusammenleben der Menschen in Dortmund - unabhängig von ihrer Herkunft, sozialen Stellung und politischen Zugehörigkeit. Dafür hat sie sich zusammen mit vielen Partnern aus Kirchen, Verbänden und Politik eingesetzt. Über ihre berufliche Tätigkeit hinaus engagierte sie sich ehrenamtlich in zahlreichen Gremien und Projekten. So förderte sie – besonders auch in der Phase ihres Ruhestandes - den wichtigen interreligiösen Dialog in Dortmund und war Mitbegründerin und Sprecherin der Initiative „Integration mit aufrechtem Gang". Sie war engagiertes Mitglied der Kommission „Soziale Stadt", der St. Hedwig Stiftung und im Arbeitskreis gegen Rechtsextremismus. 2009 wurde sie für ihren unermüdlichen langjährigen Einsatz für die Integration und das Zusammenleben von der Stadt Dortmund mit dem Ehrenpreis für ihr Lebenswerk ausgezeichnet.*

Ich bin mir sicher, dass Frau Haarmann gern dem Tamilischen Bildungsverein zu seinem Jubiläum gratuliert hätte. Sie hat häufig davon gesprochen, dass ihr die Tamilen besonders ans Herz gewachsen seien. „Meine Tamilen" sagte sie gern, wenn es um diese Gruppe ging.
Ich freue mich, dass ich an dieser Stelle noch einmal an Frau Haarmann erinnern darf. Ich glaube, dass es auch ihr Verdienst ist, dass der Verein noch heute aktiv ist und die Sprache und Kultur pflegt. Die Pflege der Kultur aller Menschen, gleich wo sie herkamen, war ihr immer ein großes Anliegen.
Ich habe ihre Nachfolge im Bernhard-März-Haus antreten dürfen und habe viel von ihr gelernt. In diesem Sinne bleibt Frau Haarmann für mich und hoffentlich auch für Sie unvergessen.

Christoph Gehrmann
Caritasverband Dortmund e. V.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

caritas für den Kreis Unna

Caritasverband für den Kreis Unna e.V. · Höingstraße 5-7 · 59425 Unna

**Tamilischer Bildungsverein**
**Deutschland e.V.**
**Herr Ponnuthurai Srijeevghan**
**Germania Str. 34**
**59174 Kamen**

**59425 Unna**
Höingstraße 5-7
Tel. 0 23 03 / 2 51 35-0
Fax 0 23 03 / 2 51 35 35
info@caritas-unna.de
http://www.caritas-unna.de
Geschäftszeichen:
Nachricht vom:
Vorstand
**Herr Plogmann**
Telefondurchwahl: **-24**

plogmann@caritas-unna.de

Unna, den 19.05.2014

**Ihr Jubiläumsheft**

Sehr geehrter Srijeevaghan,

wir beglückwünschen Sie zu 25 Jahre Arbeit für Menschen im Kreis Unna und darüber hinaus.

Über einen langen Zeitraum haben wir von Seiten unseres Verbandes diese Arbeit gefördert und unterstützt.

Heute gilt es als erwiesen, dass die Kenntnis der Muttersprache bei Migrantenkindern als wichtig und förderlich zum Erwerb der deutschen und auch weiterer Sprachen ist.

Diese Sichtweise musste sich erst über lange Zeit hinweg in Deutschland durchsetzen. In der Vergangenheit wurde diese Kenntnis immer bestritten und Ihnen wurden viele Steine in den Weg gelegt.
Sie haben als Tamilischer Bildungsverein Deutschland e.V. diese Kenntnis der Muttersprachenförderung bei Kindern in einer neuen Heimat früh erkannt und sind mit viel Engagement diesen Weg gegangen.

Dazu beglückwünschen wir Sie und wünschen noch viele erfolgreiche Jahre!
Lassen Sie sich abhalten dieser erfolgreichen Weg weiter zu beschreiten.

Mit freundlichem Gruß

Ralf Plogmann

Caritasverband
für den Kreis Unna e.V.
Amtsgericht Hamm VR 20340
Steuer-Nr.: 316/5921/0484

Höingstraße 5-7
59425 Unna
Vorstand:
Ralf Plogmann

Volksbank Unna
Zweigniederlassung der
Dortmunder Volksbank eG
(BLZ 441 600 14) 2420 292 601
IBAN DE95441600142420292601
BIC GENODEM1DOR

Bank für Kirche und Caritas
Paderborn
(BLZ 472 603 07) 10 080 200
IBAN DE58472603070010080200
BIC GENODEM1BKC

Sparkasse Unna
(BLZ 443 500 60) 23 853
IBAN DE8244350060000002З8
BIC WELADED1UNN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Stadt Dortmund**
Der Oberbürgermeister

Kulturbetriebe

Stadt Dortmund 44122 Dortmund

Dietrich-Keuning-Haus
Leopoldstr. 50 - 58
224
Herr Rehberg
Tel. (0231) 25141
Fax (0231) 26019
grehberg@stadtdo.de *
24.05.2014

Ponnuthurai Srijeevaghan
Germaniastr. 34

59174 Kamen

**Jubiläum des Tamilischen Bildungsverein Deutschland e.V.**

Sehr geehrter Herr Srijeevaghan

Im Namen des Dietrich-Keuning-Hauses gratuliere ich Ihnen hiermit ganz herzlich zu dem 25-jährigen Jubiläum des Tamilischen Bildungsverein Deutschland e.V..
Mit Ihren gezielten Bildungsangeboten leisten Sie einen ganz besonderen Beitrag zur Ausbildung tamilischer Kinder in Dortmund sowie zu deren Integration. Ich freue mich ganz besonders darüber, dass Sie mit Ihren Angeboten im Dietrich-Keuning-Haus zu Gast sind und darf Ihnen versichern, dass das Dietrich-Keuning-Haus auch in Zukunft gerne Ihr Gastgeber ist. Denn das Dietrich-Keuning-Haus versteht sich ganz besonders auch als eine Einrichtung, in der Migrantenvereine zuhause sind und kulturelle Bildungsangebote gestalten.
Ich wünsche Ihnen für die Zukunft des Vereines viel Erfolg und Freude an Ihrer Arbeit. Die Unterstützung des Dietrich-Keuning-Hauses dabei sei Ihnen gewiss!

Mit freundlichen Grüßen
Im Auftrag

Gernot Rehberg
Programmleiter

| | |
|---|---|
| **Sie können mit uns sprechen:** | dienstags bis mittwochs 9.00 - 12.00 / 13.00 - 15.30 Uhr, donnerstags bis 17.00 Uhr, freitags 9.00 - 12.00 und nach Vereinbarung, montags geschlossen |
| **Sie erreichen uns:** | mit den Stadtbahnlinien U41, U47, U49 Haltestelle Leopoldstraße und mit der S-Bahn Haltestelle Hauptbahnhof |
| **Im Internet unter:** | http://www.dortmund.de * *Unverschlüsselte E-Mail kann auf allen Internetstrecken unbefugt mitgelesen und verändert werden.* |
| **Unsere Bankverbindung:** | IBAN DE65440501990001124447 BIC DORTDE33XXX |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IN VIA

**IN VIA Unna e.V.** • Uelzener Weg 36 • 59425 Unna

Datum: 26.05.2014

Tina Geißen

Durchwahl:
02303/ 98612-12

E-Mail:
tgeissen@inviaunna.de

CERT ISO 9001

Sehr geehrte Damen und Herren,
Sehr geehrter Herr Srijeevaghan,

zum 25. Jubiläum Ihres Vereins möchten wir ganz herzlich gratulieren.
Wir blicken auf eine langjährige Zusammenarbeit unserer Vereine zurück.
Viele Ihrer Vereinsmitglieder nahmen bereits in den 1980/90iger Jahren an unseren Deutschsprachkursen teil. Auch derzeit nehmen viele ihrer Landleute und Vereinsmitglieder an den Integrationskursen teil.
Sie beteiligten sich an gemeinsamen kommunalen Veranstaltungen und Festen.
Lange Jahre haben Sie Herr Srijeevaghan den muttersprachlichen Unterricht für tamilische Kinder in Kooperation mit uns erteilt.
Diese Arbeit haben Sie auch über die Grenzen des Kreises Unna angeboten und verankert.
Gute Bildung ist derzeit ein wichtiges politisches Ziel.
Mit Ihrer Arbeit tragen Sie sehr intensiv dazu bei, dass die Kinder und Jugendlichen Ihrer Nationalität ein Bewusstsein entwickeln können, dass in Ihrer Kultur, Geschichte und Religion verankert ist. Aus diesem Selbstbewusssein ist es Ihnen viel besser möglich, ihren ganz persönlichen Standort in unserer heutigen komplexen Gesellschaft zu finden.

Herzlichen Glückwunsch!

Mit freundlichem Gruß

Tina Geißen
Tina Geißen
(Vorstand)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எழுத்தாளர் சங்கம் - யேர்மனி

Tamilischer Schriftsteller Verein – Deutschland

Tamil Writers Association – Germany

## ஏழை ஒருவனுக்கு கல்வி ஊட்டுவதே சிறப்பு!

„ஆயிரம் ஏழைகளுக்கு உணவளிப்பதிலும் பார்க்க ஒருவனுக்குக் கல்வி ஊட்டுவதே" சிறந்ததென்றான்" பாரதி. அவனின் வாழ்க்கை அனுபவத்தின் கூற்றாகவே நாம் இதனை எடுத்துக் கொள்ளலாம். கல்வியின் சிறப்பு அத்தகையது. "கேடில் விழுச் செல்வம் கல்வியென்ற வள்ளுவனின் குறள் தாங்கி வெளிவரும் கடிதத்தாளை எல்லோரும் பார்த்திருப்போம். இதுவே யேர்மன் தமிழ்க் கல்விச்சேவை இலட்சனை வரிகள். கல்வியின் சிறப்பு பற்றி வள்ளுவன் நிறையச் சொல்லியிருக்கிறான். அனைத்துக் குறள்களுக்கும், இந்த ஒரு குறள் சிறப்பைச் சேர்க்கும். இருபத்தைந்து ஆண்டுகள் வள்ளுவனுக்கும், பாரதிக்கும், மதிப்பும் சிறப்பும் கொடுத்து அவர்கள் வழியில் வளர்வதால் இந்த வெள்ளிவிழாவைக் கண்டிருக்கிறது யேர்மன் தமிழ்க்கல்விச்சேவை. எத்தனை இடர்கள் எத்தனை சோதனைகள், அனைத்தையும் தாங்கி உழைப்பால் உடைத்தெறிந்து நிமிர்ந்து நிற்கின்ற இந்த விழாக்கோல நாளில் எமது சங்கம் முதலில் நெஞ்சார வாழ்த்துகின்றது. வாழ்க நெடுங்காலம்.

பொறுப்பாளராகவும், ஆக்கதாரராகவும் இன்றுவரை சிறப்போடு செயலாற்றுகின்ற திரு.சிறிஜீவகனையும், வழி வழியாக வந்து இதற்காக உழைத்த நிர்வாகத்தினரையும் இவ்வேளை நினைவு கூர்ந்து பாராட்டுக்களைத் தெரிவிக்கலாம். இவர் மட்டுமன்றி இவருடைய குடும்பமும் இவரோடு சேர்ந்து கடுமையாக உழைத்திருக்கிறது. இவர்களால் ஆரம்பித்து, இவர் குடும்பத்தாலும், ஏனைய ஆசிரியர்களாலும் தமிழ்க் கல்வி கற்பித்து டோட்முண்டில் இயங்கிவரும் வள்ளுவர் பாடசாலை, சிறப்போடு பல மாணவர்களை உயர்நிலைக்கு உருவாக்கியுள்ளது.. இந்த மாணவர்களும் கல்விச்சேவையில் சேர்ந்தியங்கும் பாடசாலை மாணவர்களும், படித்த பாடசாலைகளில் ஆசிரியர்களாகவும், பரீட்சைக் காலங்களில் நிர்வாக அலுவல்களில் உதவியாளர்களாகவும் சேர்ந்தியங்குவதைப் பார்க்கின்றபோது, இதன் வளர்ச்சி எத்தகையது என்பதை நினைத்துப் பூரிக்கலாம். பத்து ஆண்டுகள் இயங்கும் எங்கள் எழுத்தாளர் சங்கம் இருபத்தைந்து ஆண்டுகளில் வெள்ளிவிழாக்காண எவ்வளவு கடுமையாக உழைக்கவேண்டும் என்பதற்கு, யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. இந்த நாள் மகத்தான பொன்னாள். இந்த விழா அடுத்தவரையும், பொதுச்சேவைக்குள் ஈடுபட வைக்கின்ற அளவிற்கு உந்து சக்தி அமைகின்றது. எங்களின் கடமை, எமதுமொழி வளர்ச்சிக்கு எத்தகைய பங்கைச் செலுத்த வேண்டும் என்கின்ற ஆதங்கம் அனைத்தையும் எண்ணவைக்கிறது. தோன்றில் புகழோடு தோன்ற வேண்டும். அதற்கான முயற்சிகளை நாமும் முன்னெடுக்க வேண்டும். யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையோடு சேர்ந்து அதன் வளர்ச்சிக்கு பேருதவி புரிந்து வரும், பெற்றோர் மாணவர்கள், ஆசிரியர்கள், நலம் விரும்பிகள் அனைவருக்கும் நாமும் நன்றி கூறுவோம். வரும்காலங்கள் வளமாகவும், சாதனை நிறைந்ததாகவும் மிளிர எங்கள் சங்க அங்கத்தினர் சார்பில் மீண்டும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

நன்றி

வ.சிவராசா
தலைவர்

பொன்.புத்திசிகாமணி
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைகள் தூவிய கவித்துவ மலர்கள்

1. ஈழத்தமிழர் மகளிர் மன்றம் தமிழ்ப் பாடசாலை - பேர்லின்
2. தமிழினி தமிழ்ப் பாடசாலை - செங்காளன். சுவிஸ்
3. முருகானந்தா தமிழ்ப்பாடசாலை - அட்லிஸ்வில் - சுவிஸ்
4. அறிவாலயம் தமிழ்ப்பாடசாலை - ஒபகௌசன்
5. ~~ஆசிரியை~~ விற்றன் தமிழ்பாடசாலை
6. புக்ஸ்ரெகூடெ தமிழ்ப் பாடசாலை - புக்ஸ்ரெகூடெ
7. நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம்
8. கலைவாணி தமிழ்ப் பாடசாலை - முன்ஸ்ரர்
9. நல்லாயன் தமிழ்ப்பாடசாலை ஆன்ஸ்பேர்க்
10. நாவலர் தமிழ்ப் பாடசாலை - சோஸ்ற்
11. திருவள்ளுவர் கலாச்சாரப்பாடசாலை - முன்சன்
12. ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை - காம் - சுவிஸ்
13. கலைமகள் தமிழ்ப் பாடசாலை - பேவர்வைக் - நெதர்லாந்து
14. தமிழ் கல்வி நிலையம் - நொய்ஸ்
15. முத்தமிழ் மன்றம் தமிழ் பாடசாலை - அல்க்மார்
16. தமிழ் மகளிர் மன்றம், அறிவுப்பூங்கா தமிழ்ப் பாடசாலை - ஸ்ருட்காட்
17. தமிழர் கலையகம் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட்
18. மெசடே வல்பேர்க் தமிழ்ப் பாடசாலை – மெசடெ
19. ஜீவ வசன தமிழ் பாடசாலை - பொற்றோப்
20. வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை – டோட்முண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்தமிழர் மகளிர் மன்றம் தமிழ்ப் பாடசாலை - பேர்லின்

## இருபத்தைந்தாவது அகவையைத் தொடும் யேர்மன் கல்விச் சேவைக்கு இதயபூர்வமான வாழ்த்துக்கள்

புலம் பெயர் மண்ணில் தமிழ்மொழிக் கல்விக்கு மாபெரும் பங்காற்றிவரும் கல்விச் சேவையானது கடல்கடந்த மண்ணில் மாறுபட்ட சமூக, மொழி, கலாச்சார மையங்களில் வாழ்ந்துவரும் வேளையில் தாய்மொழியின் படிவுகள் எம்மிடையே கசிந்துபோகும் காலங்களாக மாறிவிடக்கூடாது என்பதில் உறுதியுடன் நின்று செயலாற்றி வருகின்றது. தரணி போற்றும் இப்பணியானது நூற்றாண்டு காலம் தன் சேவையைப் புரிய வேண்டும் என மனமார வாழ்த்தி, எம் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி
திருமதி. தேவகி மனோகரன்
ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள்
ஈழத்தமிழர் மகளிர் மன்றம் தமிழ்ப் பாடசாலை - பேர்லின்

---

## தமிழினி தமிழ்ப் பாடசாலை - செங்காளன். சுவிஸ்

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையே அகவை இருபதைந்து வருடங்களை இனிதே நிறைவேற்றி நின்புகள் உயர நிகரிலா வாழ்த்துக்கள் புகலிடத்தில் உன்புகழ் வெள்ளி விழா எட்டியதை வியந்து மகிழ்கின்றோம்.

நாடுவிட்டு நாடு வந்தும் நல்ல தமிழ் கல்விதனை அமுதாக ஊட்டி அரும் சேவை செய்கின்றாய்.
வருடாந்தப் பரீட்சையில் பங்கு கொள்வதற்கு பல வழிகளிலும் அரிய சேவையினை வழங்கிய திரு-சிறிஜீவகன் பொறுப்பாளர் பெரும் சேவை கண்டு மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

விழாக் காணும் இன்நாளில் " மெல்லத் தமிழினிச் சாகும்" என்ற பாரதியின் வாக்கைப் பொய்யாக்கி பல மாணவ மாணவிகளை உருவாக்கும் தமிழ் ஆசிரியர்கட்கு மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம். ஆல விருட்சமாய் ஓங்கிப் பரவிச் செழிக்க, பார் வியக்க வாழ்த்தி நிற்கிறோம்

மாணவ மாணவிகள்
ஆசிரியை ஈஸ்வரலிங்கம் இராசமலர்
தமிழினி தமிழ்ப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகானந்தா தமிழ்ப்பாடசாலை அட்லிஸ்வில்
**MURUGANANTHA TAMILISCHE SCHULE - ADLISWIL**

Soodstrasse 51
8134 Adliswil

தொலைபேசி 044 709 13 49
மின்னஞ்சல் vaaheesan05@yahoo.com

## வெள்ளிவிழா வாழ்த்து

எட்டுத் திக்கும் கொட்டி முழக்கி
மட்டில்லா மதிப்புடன் மழலையர் நாவினிலே
எங்கும் தங்கு தடையின்றி தளிர் நடை போட்டு
பொங்கு தமிழ் தலைநிமிர்வுடன் விளங்க
தினமும் முழுமனத்துடன் அயராது உழைத்தீர்கள்
கனவல்ல இன்று இருபத்தைந்தாண்டு
ஜேர்மன் நாடுதாண்டி சுவிஸ் பிரான்சு எனப் பரந்து
பாடுபட்டு மொழி வளத்தீர்
ஈடுஇணை இதற்கு ஏது?
நாடு நாடாய் சென்று பாடசாலைகளைப் பராமரித்து
ஒன்றல்ல இரண்டல்ல பல பாடசாலைகள்
கூடி ஒன்றாய் ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை என
கல்விச் சேவை ஆற்றுகின்றீர்
முகத்திரண்டு புண்ணுடையார் என இழிவுபடாது
கண்ணுடையாராய் கற்றவராய் திகழ
செயற்கரியன பலவும் செய்தீர்
செலவு, நேரம் எனப் பாராது நீங்கள் பாடுபட்டதனால்
பயனைக் கொள்ளுகின்றோம் நாம் இன்று;
புலம்பெயர் வாழ்விலும் புகழ் பொருள் கருதாத
தலையாய தங்கள் பணிகளால்
நலமெல்லாம் பெற்று கலைகளும் பயின்று
வலம் வரும் பிள்ளைகள் நம்
பலம் என மகிழ்ந்து உங்களை வாழ்த்துகின்றோம்
கள்ளமில்லாத சிறுவர்களின் உயர்வுக்காய்
தெள்ளுதமிழ் தேசமெல்லாம் பரப்பி
உள்ளங்களில் என்றும் ஊர் நினைவுகள்
வெள்ளமெனப் பெருகிப் பிரவாகிக்க உழைத்த
தலைவர் திரு சிறீஜிவகன்
முன்னாள் உபதலைவர் திரு அருந்தவராஜா
மற்றும் நிர்வாக உறுப்பினர்கள்
அனைவரையும் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றோம்
வெள்ளி விழா காணும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை
துள்ளி எழும் குழவியாய், வள்ளலாய் அனைவரும்
அள்ளி உண்ண அறிவுக்கு அமுது படைக்கும் அட்சய பாத்திரமாய்
நூற்றாண்டுகள் வாழ்க வாழ்க

லோகநாதன் வாகீசன்
முருகானந்தா தமிழ்ப்பாடசாலை -அட்லிஸ்வில் - சுவிற்சர்லாந்து

24.03.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## „வெள்ளிவிழாக் காணும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவைக்கு எங்கள் வாழ்த்துக்கள்“

**~ அறிவாலயம் தமிழ்ப்பாடசாலை ஒபகௌசன் ~**

„தமிழுக்கு அமுதென்று பெயர், அந்தத்தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்...“ என்ற பாரதிதாசனின் பாடல் வரிகளுக்கு இணங்க அந்நிய நாட்டிலும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை, எமது தாய்மொழியான தமிழ்மொழியை உயிராக நினைத்து, தமிழ்மொழியை வளர்ப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதனை பெருமையுடன் நினைவுகூர்ந்து வாழ்த்துகின்றோம்.

நாம் எமது தாய் மண்ணிலிருந்து புலம்பெயர்ந்து இங்கு வந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் எமது தாய்மொழியையும், பாரம்பரிய கலாச்சாரங்களையும் மறந்து வாழவில்லை என்பதற்கு சான்றாக பெற்றோர்களே பல நகரங்களில் தமது சிறார்கள் தமிழ்மொழி கற்பதற்காக பாடசாலைகளை ஆரம்பித்தார்கள். ஆனாலும் மொழியை வளர்ப்பதற்கு பாடப்புத்தகங்கள் எடுப்பதற்கு சிரமப்பட்டார்கள். அந்தக் காலகட்டத்தில்தான் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை உருவாக்கப்பட்டது. மாணவர்களுக்காக இலங்கைப் பாடத்திட்டத்திற்கு அமைவாக புத்தகங்களை பெற்று, இங்குள்ள பாடசாலைகளுக்கு வழங்கி பரீட்சைகளையும் நடாத்தி மாணவர்களை தமிழ் கற்பதற்கு ஊக்கப்படுத்தினார்கள்.

இவ்வேளையில் ஒபகௌசன் அறிவாலயம் தமிழ்பாடசாலையும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையின் சேவையை பாராட்டுகிறோம். எங்கள் பாடசாலை சென்ற ஆண்டு 25வது ஆண்டுவிழாவை கொண்டாடியது. ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையின் பொறுப்பாளர் திரு. பொன் சிறிஜீவகன் அவர்கள் எமது பாடசாலையின் 20வது ஆண்டுவிழாவிற்கு பிரதமவிருந்தினராகவும், 25வது ஆண்டுவிழாவிற்கு சிறப்பு விருந்தினராகவும் வருகைதந்து விழாவை சிறப்பித்தமையை நினைத்து நன்றியுடன் பெருமைப்படுகின்றோம். இவருடன் இணைந்து செயற்படும் உறுப்பினர்களையும் மனமார பாராட்டிவாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலையும், ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையின் பாடப்புத்தகங்களை பெற்று மாணவர்களுக்கு கொடுப்பதும், மாணவர்களை பரீட்சையில் பங்கு கொள்ள செய்வதிலும் வருடாவருடம் செயற்பட்டுவருகிறது.

தொன்மையும் பழமையும் வாய்ந்த எமது செம்மொழியான தமிழை வளர்தெடுப்பதற்கு ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை செய்யும் சேவைக்கு நாமும் தமிழர் என்ற உணர்வோடு ஆதரவு கொடுத்து தமிழ்மொழியை வளர்த்தெடுப்போம். புலம்பெயர் மண்ணில் நம் தாய்மொழியான தமிழ்மொழி வளர தங்கள் பணி தொடரவேண்டும், வெள்ளிவிழாவை வெகுசிறப்பாக கொண்டாடும் இந்நாளில் நாமும் வாழ்த்தி மகிழ்வதுடன் பொன்விழா, வைரவிழா, நூற்றாண்டு விழாக்கள் என கொண்டாட வேண்டுமென்றும், தமிழ் வளர்ச்சிக்கான பணியினை தாங்கள் மேன்மேலும் தொடர நாமும் வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நிர்வாகிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்றன் தமிழ்ப் பாடசாலை – விற்றன்

### யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையின் வெள்ளிவிழா

நேற்று இல்லை இன்று இல்லை
இருபத்தைந்து ஆண்டுகள் புலத்தில் பிறந்தநாள்
தாய்நாட்டை விட்டு அன்னிய நாட்டில்
எம்மொழி முதல்மொழி
இயற்கைக்கு உயிர் கொடுக்கும் உவமைமொழி
இல்லறத்தை இருவரியில் கூறும் தமிழ்மொழி
என்றுரைத்து எம் சிறார்களுக்கு
தமிழ்ப் பரீட்சைகளும் போட்டி நிகழ்ச்சிகளும்
பற்பல நிகழ்வுகளை நடாத்தி
ஐரோப்பிய நாடுகளில் நிமிர்ந்து நிற்கும்
யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையே - நீ வாழ்க

பெருமையில்லை சிறுமையில்லை விளம்பரமில்லை
தமிழ்தான் என்மூச்சு - என்று
அமைதியாக அன்னநடை போட்டு
மாணவர்களை வித்துக்களாக விதைத்து
வானுயர்ந்த சோலையாக வளர்த்து
தமிழ் என்னும் நறுமணத்தைப் பரப்பி
செந்தமிழைத் தாங்கி விருட்சமாய்
கிளைகள் பற்பல உருவாக்கி - இன்று
வாலிபனாக வளர்ந்து வெள்ளிவிழாக் கண்டு
வெற்றி நடை போடும்
யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையே நீ வாழ்க
உன்னிடம் தமிழ்ப்பால் அருந்தும் - சிறார்களுடன்
யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையில் நானும் ஆசிரியையாக
இருப்பதையிட்டு பெருமிதத்துடன் வாழ்த்துகின்றேன்.

திருமதி. சிவசக்தி ஜெயதேவன்
ஆசிரியை விற்றன் தமிழ்பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புக்ஸ்ரெகூட தமிழ்ப் பாடசாலை – புக்ஸ்ரெகூடெ
# வாழ்த்துரை

இருபத்தைந்தாவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையினரை புக்ஸ்ரெகூட தமிழ்ப் பாடசாலையின் சார்பில் மனதாரப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். கடந்த இருபத்தைந்து வருடங்களாக கல்விச்சேவையினர் ஆற்றி வரும் சேவை யாவரும் அறிந்ததே. ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்று வரும் தமிழ்ப் பாடசாலைகளிற்குத் தேவையான பாடப்புத்தகங்களையும், அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்புக்களையும் வழங்கி ஊக்குவிப்பது மட்டுமல்லாது, ஆண்டுதோறும் பாடத் திட்டத்திற்கமைய பரீட்சைகளை நடாத்தி, பெறுபேறுகளிற்கான சான்றிதழ்களையும், பரிசில்களையும் வழங்கி கௌரவிப்பது பாராட்டப்படவேண்டியது.

தனிப்பட்ட ஒரு பாடசாலை ஒரு ஆண்டுவிழாவோ, கலைவிழாவோ நடாத்துவது மிகவும் கடினமான காரியம் என்பதனை நான் நன்கு அறிவேன். இந்நிலையில் ஐரோப்பாவில் நடைபெற்று வரும் அனைத்து சக பாடசாலைகளையும் ஒருங்கிணைத்து, ஒரு விழாவை நடாத்துவதென்பது மிகமிகக் கடினமான காரியம். அப்படிப்பட்ட காரியத்தை யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையினர் கடந்த கால்நூற்றாண்டுகளாகத் திறம்பட நடாத்தி வருவது யாராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இக்கடின உழைப்பிற்குப் பின்னணியில் இருக்கும் அனைத்து யேர்மன் தமிழ்க் கல்விச்சேவையின் உறுப்பினர்களை, குறிப்பாக இக் கல்விச்சேவைக்கு முதுகெலும்பாகத் திகழும் திரு.சிறிஜீவகன் அவர்களை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது.

இக் கல்விச் சேவையினரின் தொடர்பு எமக்குக் கிடைத்தது, எமது பாடசாலைக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்றே கூறலாம். அன்று முதல் தமிழ்க்கல்விச் சேவையினர் சார்பாக திரு.சிறிஜீவகன் அவர்கள் எமது பாடசாலையில் நடைபெற்ற ஆண்டுவிழாக்களில் பட்டிமன்றப் பேச்சாளராகவும், பேச்சுப்போட்டி நடுவராகவும் பலதடவைகள் எம்மிடம் வருகைதந்து சிறப்பித்துள்ளார்.

அதுமட்டுமன்றி எமது பாடசாலை மாணவர்களுக்கான பரதநாட்டியப் பரீட்சை நடைபெற்ற போது, எமது அழைப்பிற்கு மறுப்பேதும் கூறாது, தனது பாரியாருடன், அத்துறையில் தேர்ச்சிபெற்ற வேறு சில நடுவர்களையும் தானே பல நூறுமைல்களுக் கப்பால் இருந்து அழைத்து வந்து பரீட்சையை நல்லபடியாக நடாத்தித் தந்ததை நான் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

இப்படியான தன்னலமற்ற பொதுநலச் சேவையிலும், தமிழ்ப்பணியிலும் ஈடுபட்டுக் கால்நூற்றாண்டாக பணியாற்றிவரும் யேர்மன் தமிழ்க்கல்விச் சேவையினரின் தமிழ்ப் பணியும், தொண்டும் மென்மேலும் வளர வாழ்த்துவதோடு, இருபத்தைந்தாவது வெள்ளிவிழா மட்டுமன்றி இன்னும் பல ஆண்டு விழாக்களைக் காண வேண்டுமென புக்ஸ்ரெகூட தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கிறேன்.

நிர்வாகி
ச.உ.தயகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலராலயம் தமிழ்ப் பாடசாலை - மன்கைம்

## யேர்மன் தமிழ்க் கல்விச் சேவைக்கு
## எமது வாழ்த்து

நம் தாய்மொழியாம் தமிழ்மொழியை
நம் புலம்பெயர் தமிழ்ச் சிறார்கள்
கற்பதற்காக யேர்மனியில் முதன்முதலில்
உதயமான தமிழ்க் கல்விச் சேவையே
இன்று நீ பல கிளைகள் விட்டு பெரும்
விருட்சமாக திகழ்கின்றாய்

உனது கல்விப்பணி மிகவும் இலகுவான முறையில் மாணவர்களுக்கு நன்கு புரியும் அளவிற்கு சிறந்த முறையில் பயிலப்பட்டு வருகின்றது. அத்துடன் பொதுப்பரீட்சையின் போது இன்றைய காலத்திற்கேற்ப பொதுவினாக்களை கேள்வியாகக் கேட்டு மாணவர் களிடம் இருக்கும் எண்ணங்களையும் எதிர்பார்ப்புக்களையும் அவர்களிடமிருந்தே பெறு கின்றாய். இது மாணவர்களின் சிந்தனை வளர்ச்சியை மேம்படுத்துகின்றது. ஆண்டுதோறும் பொதுத்தேர்வு விடைத்தாள்களை மாணவர்களுக்குக் காண்பித்து அதிலுள்ள பிழைகளையும் கருத்து வேறுபாடுகளையும் சுட்டிக்காட்டி அவர்களை தெளிவுபடுத்துகின்றாய். அது மட்டுமல்ல மாணவர் செல்வங்களுக்கு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவிப்பதுடன் அவர்களின் ஊக்கத்தை மேலும்மேலும் நீரூற்றுப் போல் பெருகச் செய்கின்றாய்.

தெள்ளுத் தெறிக்கும் வயது போல
தேனியின் சுறுசுறுப்பில் தமிழ்ச்சிறார்களின் வளர்ச்சிக்கு
பாடுபடும் திரு. ஸ்ரீஜீவகன் அவர்களே!
உங்கள் சேவை எங்களுக்குத் தேவை. நீங்கள் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.
நம் இனிய தமிழ்க் கல்விச் சேவையே – நீ
நேற்றுப் பிறந்தது போல் இருக்கின்றது. ஆனால் இன்று நீ வெள்ளிவிழாவைக் கொண்டாடு கின்றாய். இதே போன்று நூற்றாண்டு விழாவைக் கொண்டாட எமது மன்கைம் நாவலராலயம் வாழ்த்துகின்றது.

மன்கைம் ஆசிரியை
திருமதி. சந்திரவதனா சுரேஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணி தமிழ்ப் பாடசாலை, முன்ஸ்ரர்
# Kalaivani Tamilischer Schule,Münster


**ஆட்சிக்குழு**

திரு க.கனகசுந்தரம்
0251/73222
திரு சிசு.பரமானந்தன்
0251/1365914
திருமதி கௌரி.பரமேஸ்வரன்
0251/32351760

**ஆலோசனைக்குழு**

திருமதி கௌரி.பரமேஸ்வரன்
திருமதி ரா. இந்திரராஜா
திருமதி த. தர்மசீலன்

**ஆசிரியர் குழு**

திரு.சிசு. பரமானந்தன்
திரு அ. சேவியர்
திருமதி ச.வேலாயுதபிள்ளை
திருமதி கௌரி.பரமேஸ்வரன்
திருமதி ரா.இந்திரராஜா
திருமதி அ.வசந்தராஜன்
திருமதி அ.ரவீந்திரநாதன்
திருமதி த.தர்மசீலன்
திருமதி கி.றொபின்சன்
திருமதி பு.லோகநாதன்
திருமதி பா.ரவிக்குமார்
திருமதி அ.சுகுமார்
திருமதி கா.நந்தகுமார்
திருமதி டொ.கணேசலிங்கம்
திருமதி வனிதா சுரேஸ்

**ஆசிரியர் உபகுழு**

செல்வி சு.யோகராஜா
செல்வன் வ.சத்தியன்

**ஆட்சிப்பணிமனை**

Normannenweg93
48167 Münster
Germany
0251/1365914
eMail: kalaivani@t-online.de

**வைப்பகத் தொடர்புகளுக்கு**

TKSV Münster
Sparkasse Münsterlandost
Konto Nr 23002413
BLZ 40050150
Münster


**வாழ்த்துச் செய்தி** 20.04.2014

"காமன் நகர்தனிலே தமிழ்க் கல்விக்கோர் களமமைத்து
கால் நூற்றாண்டாய் கருத்துடனே கல்விப் பணி செய்து
தரணியில் தமிழர் தம் தனித்துவம் பேணிடவே மொழிதனை -அடுத்த
தலைமுறைக்கு நகர்த்திட தன்னலமின்றிப் பணி செய்யும் ஜேர்மன்
தமிழ்க் கல்விச் சேவையே நீ வாழி நீடுழி!"

போர்ச் சூழல் காரணமாக புலம்பெயர்ந்து இந்தப் பூமிப்பந்தெங்கும் பரந்து வாழுகின்ற தமிழர்களாகிய நாம், இங்குள்ள பல்லின பண்பாட்டுச் சூழலிலே சிதறிச் சீரகெட்டுப் போகாமல், கரைந்து காணாமல் போகாமல் எம் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். எமது பண்பாட்டின் அங்கங்களில் மொழி பிரதானமானது. தேனினும் இனிய மொழி. முச்சங்கம் வளர்த்த மொழி. மூவேந்தர் காத்த மொழி. முத்தமிழும் சேர்ந்த மொழி. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடியின் பேச்சுமொழி. செம்மொழி.எம் உயிரிலும் மேலான தமிழ்மொழி. இவ்வகையான சிறப்புகள் பெற்ற எம் மொழியை எமது அடுத்த தலைமுறையினரிடம் காவிச்செல்லும் பொறுப்பை கடந்த 25 வருடங்களாக கச்சிதமாகச் செய்துவரும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையின் பணி பாராட்டுவதற்குரியது. ஜேர்மனியிலும் அதன் அயல்நாடுகள் சிலவற்றிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகள் ஆதரவு தேடிவரும்போது அவற்றை அரவணைத்து தேவையான ஆலோசனைகளையும் பாடத்திட்டம்,பாடப் புத்தகங்கள் போன்றவற்றையும் வழங்குவதோடு, ஆண்டிறுதியில் தேர்வுகளை நடாத்தி பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கி மாணவர்களையும் ஊக்குவித்து வருகிறது. அத்துடன் அவ்வப்போது கருத்தரங்குகளை நடாத்தியும், பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியும் ஆசிரியர்கள் தம் பணிகளைச் சிறப்பாகச் செய்திட உதவியும் வருகிறது. ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையினர் கல்விப்பணியாற்றிவரும் ஆசிரியர்களை மதிப்பளித்து அவர்களுக்கு பட்டயங்களையும், மாணவர்களுக்கு பரிசுகளையும் வழங்கும்போது தாயகத்திலும் தமிழ் நாட்டிலும் தமிழ் வளர்த்த பெரியோர்களை நினைவுகூர்ந்து, அவர்கள் செய்த தமிழ்ப்பணியை மாணவர்க்கும் மற்றோர்க்கும் எடுத்தியம்பி, அப் பெரியோர்கள் விட்டுச் சென்ற பணியின் தொடர்ச்சியை புதிய சூழலில், புலம்பெயர்தளத்தில் செய்து வருவதை நாம் அறிவோம்.

இவ்வாறு இன்றைய இயந்திரமயமான வாழ்க்கைச்சூழலில் ஏற்படுகின்ற எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் தாம் ஏற்றுக்கொண்ட பணியை தொய்வின்றித் தொடர்ச்சியாக 25வருடங்களாகச் செய்துவருவது என்பது சுலபமான காரியமல்ல, அந்தவகையில் அரும்பணியாற்றி இன்று வெள்ளிவிழாக் காணும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவைதனை வாழ்த்தி, அதன் பணிதனைப் பாராட்டுவதில் முன்ஸ்ரர் கலைவாணி தமிழ்ப் பாடசாலை பெருமை கொள்கிறது.

நன்றி

**ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள்**
**கலைவாணி தமிழ்ப் பாடசாலை,முன்ஸ்ரர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாயன் தமிழ்ப்பாடசாலை - ஆன்ஸ்பேர்க்

„யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்.
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்வோம்"

நாம் எங்கு புலம்பெயர்ந்து சென்றாலும் நம் தாய்மொழியான தமிழ்மொழியை வளர்க்க வேண்டும், செம்மொழியான தமிழ்மொழியை வாழவைக்க வேண்டும், துள்ளிவிளையாடும் பிள்ளைகளான தமிழ்பிள்ளைகளுக்கு அறிவை அள்ளிக் கொடுத்திட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டு இன்று இருபத்தைந்து வருடங்களைத் தாண்டி வெள்ளிவிழாக்காணும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவைக்கு எமது பாடசாலையின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

புலம்பெயர் தமிழ் மக்களின் நன்மை கருதி கடந்த கால் நூற்றாண்டுகளாக தமிழ்மொழிக்குத் தாங்கள் ஆற்றிவரும் சேவை அளப்பரியது. தங்களின் சேவைகளினால் பயனடைந்தோர் ஏராளம். அந்த வகையில் எமது நல்லாயன் தமிழ்ப்பாடசாலையும் தங்களின் அளப்பரிய சேவையினாலும் பணியினாலும் பல நன்மைகளைப் பெற்றுள்ளது என்பதனை இவ்வேளையில் நினைவு கூருவதோடு எங்கள் மனமார்ந்த நன்றிகளை இதயபூர்வமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.

உங்கள் சேவையானது மேன்மேலும் தொடர்ந்து வெள்ளிவிழா மட்டுமல்ல பொன்விழா, வைரவிழா, பல நூற்றாண்டு விழாக்களைக்காண வேண்டும். மாணவர்கள் தமிழ்க்கல்வியை சிறப்பாகக் கற்று பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறவேண்டும். புகலிடத் தமிழர்கள் வாழ்வில் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவை ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி நீடூழி வாழ எல்லாம்வல்ல இறைவனை வணங்கி வாழ்த்துகின்றோம்.

என்றென்றும் நன்றியுடன்,

நல்லாயன் தமிழ்ப்பாடசாலை.

ஆன்ஸ்பேர்க் - ஜேர்மனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் தமிழ்ப் பாடசாலை – சோஸ்ற்

## பைந்தமிழ் வளர்த்திடும் பணி வளம்பெற வாழ்த்துகின்றோம்!

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை இருபத்தைந்து வருடங்களாகத் தமிழ் வளர்க்கும் பணியில் வெற்றிநடை போட்டு வருவதை யாவரும் நன்கு அறிவோம். அந்நி மண்ணில், வேற்றுக் கலாச்சாரப் பண்பாட்டுக்கு மத்தியில் வாழும் எமது பிள்ளைகளை, தாய்மொழிக் கல்வியைக் கற்ப்பித்தன் மூலம், அவர்களுக்கு எமது பாரம்பரிய கலைகலாச்சாரப் பண்பாடுகளைத் தெரியப்படுத்தி தமிழர்களா வாழ்வதற்கு வழியமைத்து செயற்படும் கல்விச் சேவையின் சேவையைத் தமிழர்கள் யாவரும் போற்றிப் பாராட்டுதல் அவர்கள் கடமையாகும்.

சோஸ்ற் நகரத்தில் வாழும் பிள்ளைகளின் தமிழ்க் கல்விக்காக ஒரு பாடசாலையை அமைப்பதற்கு யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை பல்வேறு வகைகளில் உதவிகளைப் புரிந்துள்ளது. நாம் நடாத்துகின்ற விழாக்களிலும், திருக்குறள் போட்டிகளிலும் கல்விச் சேவையினர் பல்வேறு வகையில் உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றனர். போட்டி நடுவர்களாக வந்து செயலாற்றி எமது பிள்ளைகளின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிக்கின்றனர். இவர்களின் சேவை எமக்கும் மாத்திரமன்றிப் பல்வேறு பாடசாலைகளுக்கும் கிடைக்கின்றன.

ஆசிரியர்கள் கலந்துரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள் செய்வதன் மூலம் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருவதும், பிள்ளைகளின் தமிழ்க் கல்வி வளர்ச்சி கருதி மாணவர் கருத்துக் களம், நடாத்துவம் சிறப்பானதாகும். பலரிடமும் பல வழிகளில் கருத்துக்களை கேட்டுச் செயற்படுகின்ற தன்மை யேர்மன் தமிழ் கல்விச் சேவையின் சிறப்பான விடயமாகும்.

தமிழ் வளர்க்கும் பணியில் யேர்மன் நாட்டில், கல்விச் சேவை ஆரம்பித்துச் செயற்பட்டாலும், ஐரோப்பாவின் பல நாடுகளிலும் தனது சேவையைச் செய்து தமிழ்ப் பிள்ளைகளின் தமிழ்க் கல்விக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுப்பது பாராட்டுக்கும் வாழ்த்தும் உரியதாகும். இவ்வாறான செயற்பாடு பல்வேறு நாடுகளுக்கும் பரவி ஆங்காங்கு தமிழ் வளர்க்கும் சேவை ஆரம்பித்துச் செயற்பட இது வழியமைத்தது எனலாம். இவ்வாறு செயற்படும் கல்விச் சேவை மேன்மேலும் வளர்ச்சியுற்று வளம்பெற்று தமிழுக்கும், தமிழினத்திற்கும் சேவையாற்ற வேண்டுமென நாம் நல்வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம்.

வளர்க வளமுடன்!

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

சோஸ்ற் நாவலர் தமிழ்ப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவள்ளுவர் கலாச்சாரப் பாடசாலை - முன்சன்

### மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

தாய்மொழியாம் எம் இனிய தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக 25 ஆண்டுகளாக சிறப்பாக சேவை செய்துகொண்டிருக்கும் யேர்மன் தமிழ்க் கல்விச்சேவைக்கு முன்சன் திருவள்ளுவர் கலாச்சாரப்பாடசாலை தனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது. எம் சிறார்களின் நலன் கருதி யேர்மன் தமிழ்க் கல்விச்சேவை ஆற்றும் இச் சிறந்த தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. இச்சேவையின் செயலாளர் திரு.சிறீஜீவகன் அவர்களுக்கும் அவருடன் சேர்ந்து இயங்கும் நல்லுள்ளம் கொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் உங்களை எண்ணிப் பெருமிதம் அடைகிறோம். யேர்மன் தமிழ்க் கல்விச்சேவை ஏற்றிய எங்கள் தாய்மொழித்தீபம் என்றும் சுடர்விட்டு ஒளிரும்.

பல சிரமங்களுக்கு மத்தியிலும் எங்களை ஊக்குவித்து எங்கள் பிள்ளைகள் தமிழ்மொழி கற்றுத் தமிழன் என்று தலை நிமிர்ந்துநிற்க எங்களுக்கு நல்வழி காட்டிக் கொண்டிருக்கும் திரு.சிறீஜீவகன் அவர்கள் ஆற்றும் இத்தொண்டு அளப்பரியது. உங்கள் மகத்தான இச்சேவை பல்லாண்டு காலம் தொடர மீண்டும் மீண்டும் வாழ்த்துகின்றோம்.

திருவள்ளுவர் கலாச்சாரப்பாடசாலை, முன்சன்
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்

---

## ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை -காம். சுவிற்சலாந்து.

### தமிழன் என்று தலை நிமிர்வோம்!

தமிழ் வளர்க்கும் தன்னிகரில்லா பயணத்தில் இருபத்தைந்தாவது ஆண்டுகளை நிறைவு செய்த ஜேர்மன் தமிழ் கல்விச்சேவையை பாராட்ட வார்த்தைகள் ஏது.

வாழ்க்கையை தமிழ் கல்விச் சேவைக்காக அர்பணித்த தலைவர் திரு.பொன்னுத்துரை. ஸ்ரீஜீவகன் மற்றும் அவருடன் இணைந்து தொண்டாற்றும் அனைத்து நிர்வாகத்தினர்க்கும் ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள் பெற்றோர் மாணவர்கள் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கின்றோம்.

உலகமெலாம் தமிழ் முழங்கச் செய்யும் உன்னத பணி மேலும் தொடர்ந்து நூற்றாண்டு விழாக் காண எமது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

ஹரேகிருஷ்ணா தமிழ்ப் பாடசாலை -காம்சுவிற்சலாந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கலைமகள் தமிழ்ப் பாடசாலை

## பேவர்வைக், நெதர்லாந்

## Beverwijk, Nederland

23-03-2014

வீறுநடை போட்டு வெள்ளி விழாக்காணும்

ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையே! புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் சிறார்களுக்கு எமது தாய் மொழியாம் தமிழை கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நற்சிந்தனையை மனதில் கொண்டு எமது தாய்மண் கல்வித் திட்டத்தின் மூலம் தேசப்பற்றையும் எமது கலாச்சாரத்தையும் வளர்ப்பதற்கு திரு.ஜீவகன் அவர்கள் கடந்த இருபத்தைந்து வருடங்களாக தொண்டாற்றி வருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்

அது மட்டுமல்லாமல் மேலும் பல பாடசாலைகளை உருவாக்கி

சிறந்த கல்விமான்களை உருவாக்குவதுடன் தனது சேவையை கடைசி தமிழ் குழந்தை இருக்கும் வரை ஆற்ற வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்க தமிழ்

வளர்க தமிழ்க் கல்விச்சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கல்வி நிலையம் நொய்ஸ்

வாழ்த்துகிறோம்.......கால்நூற்றாண்டு காலம் தமிழைக் காத்து வளர்க்கும் ஜெர்மன் கல்விச் சேவையே, உன்னை மனமார மகிழ்ந்து வாழ்த்துகிறோம். உலக இன்பம் நாடி ஓடும் இன்றைய வாழ்க்கைச் சூழலிலே,பொது நலமே நின்சிந்தையாக, எதுவரினும் தாய்மொழி காப்போம் ,எம் சந்ததிக்கும் நம் மொழி சொல்வோமென, செம்மொழி காக்கும் கல்விச் சேவையே, காலங்கள் கடந்து பூமியின் கடைமுனை மட்டும், எங்கள் தமிழ் எட்டப்பாடுபடும் உன்னை வாழ்த்துகிறோம்!! தாய் நாட்டின் தமிழ்த்தரத்தை புகலிடமும் சாரும் வண்ணம், நீ நடத்தும் உயர்தரப் பரீட்சைகள், இதர தமிழ்ப் பாடசாலைகளின் உயர்வுக்கு உன்னத ஏணிப்படிகள். அவ்வகையில், எங்கள் நொயிஸ் தமிழ்ப் பாடசாலையும் நன்றி சொல்லி

உன்னை வாழ்த்துகிறது!! வாழ்க தமிழ்! வளர்க நின் சேவை!

தமிழ் கல்வி நிலையம்
நொய்ஸ்

---

## முத்தமிழ் மன்றம் தமிழ் பாடசாலை - அல்க்மார். நெதர்லாந்து

25 வது ஆண்டுவிழா வாழ்த்து - ஜேர்மன் தமிழ் கல்விச் சேவை

தாய் மொழியின் வாசத்தை புலத்திலும் சுவாசித்திட
முன் தோன்றிய செம்மொழியை பனிப் பூமியிலும் விதைத்துவிட
இனி வரும் சந்ததியை வான்முட்ட உயர்த்திவிட
மொழிப்பயணம் நீண்டு நெடுத்து நோக்கங்களை எட்டிவிட

தமிழன்னையின் ஆசீர்வாதம் தம் பணிகளுக்கு கிடைத்துவிடும்
எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் வருங்காலம் படைத்துவிடும்
தலை முறையின் முகவரிகள் தமிழோடு ஒட்டிவிடும்
தமிழ் தேனை சிந்திக் கொண்டு புலப்பூக்கள் பூத்துவிடும்

கொண்ட சேவை, வெற்றி ஓசை, நீண்டு தொடர வாழ்த்துகின்றேம்
தாங்கிக் கொண்டு பயணிக்கும் பங்காளர்களை வாழ்த்துகின்றோம்
மொழி உழைப்பாளிகளின் கடமைகளை வாழ்த்துகின்றோம்
தளராத, களையாத செயற்பாடுகளிற்காய் வாழ்த்துகின்றோம்

யேர்மன் தமிழ் கல்விச் சேவை தன் நோக்கங்களை அடையவேண்டும்
தாய் மொழியின் மகத்துவங்கள் சந்ததிகள் அறியவேண்டும்
நாம் வாழும் காலமெல்லாம் தமிழ் கூட வாழ வேண்டும்
இருபத்தைந்தாவது ஆண்டுவிழா அது தமிழுக்கு முடி சூட்ட வேண்டும்

ஆசிரியர் - மாணவர்கள் - பெற்றோர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மகளிர் மன்றம் அறிவுப்பூங்கா தமிழ்ப் பாடசாலை - ஸ்ருட்காட்

தங்கள் பெரும்பணிக்கு எம் வாழ்த்துக்கள்

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் வெள்ளி விழாவையொட்டி ஸ்ருட்காட் தமிழ் மகளிர் மன்றத்தால் வழிநடாத்தப்படும் அறிவுப்பூங்கா பாடசாலையும் தனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

„கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவற்கு

மாடல்ல மற்றுப் பிற"

என்பது வள்ளுவர் வாக்கு. அதாவது ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. அதைத் தவிர வேறு எந்த பொருட் செல்வங்களும் சிறப்புடையனவல்ல என்பதே இதன் பொருளாகும். அக்கல்விச் செல்வத்தை புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சிறார்களுக்கு புகட்டுவதில் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை தனது பணியை கண்ணும் கருத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் தொடர்ந்து பயணிப்பதை பாராட்டுவது சாலப் பொருத்தமே.

„நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல்

நன்றோ?" என பாரதியார் தமிழன் என்று பெயர் சொல்லிக் கொண்டாற் போதாது தமிழன் தன் கடமையைச் செய்ய வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

அதன்படி கல்வி கற்பிப்பதோடு நில்லாமல் , பரீட்சைகள் நடாத்தியும், பிள்ளைகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கியும்,ஆசிரியர்களைக் கௌரவித்தும் மென்மேலும் வளருகின்ற யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் வெள்ளி விழாவிற்கு எமது மன்றமும்,அறிவுப்பூங்கா பாடசாலையும் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றன.

வாழ்த்துக்களுடன்

தமிழ் மகளிர் மன்றம், ஸ்ருட்காட்

அறிவுப்பூங்கா,ஸ்ருட்காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கலையகம் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட்

## வாழ்த்துச் செய்தி

வாழ்வியலின் தத்துவத்தை வாய்மொழியாய் உரைத்திட்ட வள்ளுவரின் நாமங்கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளாக வான்புகழ் தமிழை வாரியே வழங்கி வருகின்ற யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை இதுபோன்ற பல அகவைகளைக் கடந்து நலம் பயக்கும் நற்றொழிலை நாளும் நயந்திட நற்றமிழால் நாமும் வாழ்த்துகின்றோம்.

தடைகளைத் தாண்டி நடையினைத் தொடரு
படையினைத் திரட்டு பயன்பட வேண்டின்
விடைகொடுத்து விடும்அந்த வினையெல்லாம் அகன்று
கடையென மீண்டும் வராதெனச் சொல்லும்.

முரசெனக் கொட்டும் குறளின் முழக்கத்தால்
முடிவுனக்கில்லை துணிந்திடு செயலில்
முப்பொழுதும் வாழ்த்துவதில் தப்பேதும் இல்லையென
முதுமையுறாத் தமிழால் நானும் வாழ்த்துகின்றேன்.

தமிழ்மணி. திருமதி. ஜெகதீஸ்வரி மகேந்திரன்.B.A
ஆசியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
தமிழர் கலையகம் டோட்முண்ட்

---

# மெசடே வல்பேர்க் தமிழ்ப் பாடசாலை - மெசடே

## மனதார வாழ்த்துகின்றோம்!

புலம்பெயர்சூழலில் தாய்த்தமிழை மறவாது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் அரியபணியில் எத்தனையோ சோதனைகளை தடைகளை தாண்டி அவற்றை சாதனைகளாக்கி இன்று 25வது அகவையை ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை கொண்டாடுவது பாராட்டுக்குரியது.எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும் களம் அமைத்து தரும் ஜேர்மன் தமிழ்க் கல்விச்சேவையை வாழ்த்துவதில் நாமும் பெருமையடைகின்றோம். அதன் பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லும் திரு.திருமதி சிறீஜீவகன் அவர்களையும் ஏனைய நிர்வாக உறுப்பினர்களையும் மனதார வாழ்த்தி அவர்கள் பணி மென்மேலும் திறம்பட செயற்பட்டு வளம்பெருக்க எல்லாம்வல்ல கம் காமாட்சி துனையை வேண்டுகின்றோம். வணக்கம்.

அன்புடன்
ஆசிரியர் பெற்றோர்கள் மாணவர்கள்
மெசடே வல்பேர்க தமிழ்ப்பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவ வசன தமிழ்ப் பாடசாலை – பெற்றோப்

## 25 வது ஆண்டு நிறைவு விழா - வாழ்த்துரை

ஜேர்மனியின் தமிழ்க்கல்விச் சேவை தனது 25 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் பொழுது எமது நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

புலம்பெயர் நாட்டிலே கலை கலாச்சாரம் மொழி வேறுபட்டிருப்பினும் எமது தாய் மொழியான தமிழ் மொழியை வளர்ப்பது மிகையாகாது. அதுமட்டுமல்லாது மாணவர்கள் நலன் கருதி இலங்கைப் பாடப் புத்தகத்தினை கற்பிப்பதும் அத்திட்டத்தின்படி செயற்படுத்துவதும் அத்தோடு பல பயிற்சி புத்தகங்களை வெளியிடுவதும் மாணவர்கள் திறமைகளை வெளிக்காட்டும் வகையில் சஞ்சிகைகளை தயாரிப்பதும் மிகவும் பாராட்டுதலுக்குரிய விடயமாகும்.

தமிழ் மொழியைக் கற்பிப்பது மட்டுமின்றி அதனைச் செயற்படுத்தும் முறையில் கலை விழா ஆண்டு விழா போன்ற விழாக்களை நடாத்தி மாணவர்கள் மத்தியில் இன்னும் தமிழை மெருகூட்டுவது பெருமைக்குரியதாகும். இன்று “கல்விச்சேவை” தொகையிலும் வகையிலும் வளர்ந்தது மாத்திரமல்ல இவைகளிலிருந்து எத்தனையோ தமிழ் அறிவும் உணர்வும் கலாச்சார ஆர்வமும் கொண்ட மாணவர்கள் தோன்றியிருக்கின்றனர்.

மத இன வேறுபாடின்றி எமது திருச்சபையிலுள்ள பிள்ளைகளும் தமிழ்மொழியை கற்கவேண்டும் என்பதற்காகவும் கலை கலாச்சாரம் பண்பாடுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு எமக்கு உதவியமைக்கு திருச்சபை சார்பாக நன்றி கூற கடமைப்பட்டிருப்பதோடு தங்களின் இந்த அருந்தமிழ்த் தொண்டினை மனமார வாழ்த்துகின்றோம்.

இன்னும்“தமிழ்க்கல்விச்சேவை”செயலகப் பொறுப்பாளர்கள் ஆசிரியப்பெருமக்கள் மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

தமிழ் கல்விச்சேவை தனது இருபத்தைந்தாவது ஆண்டினை காணும் இவ்வேளையில் பெரும் விருட்சமாக வளர்ந்து விழுதுகளை ஊன்றி மென்மேலும் ஓங்கி வளர வாழ்த்துகின்றோம். உமது சேவை இன்னும் தொடர இறைநல்லாசிகள்!

“தமிழ் மொழியை வளர்த்தெடுக்கும் எம் தமிழ்க் கல்விச் சேவையே!நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறோம்.25 ஆண்டுகளாக நீ செய்த சேவையை நிறைவு கூர இன்நாள் ஒரு பொன்நாளாகும்.”

வாழ்க தமிழ் வளர்க உன் சேவை!
ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்
ஜீவ வசன தமிழ்ப் பாடசாலை – பொற்றோப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை - டோட்முண்ட்
## Valluvar Tamilische Schule - Dortmund

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

## தமிழ் மணம் பரப்பும் சேவை வளம் பெற வாழ்த்துகின்றோம்

யேர்மன் நாட்டில் முதல்முதல் தோன்றி கால் நூற்றாண்டாக தமிழ்ப் பணியாற்றும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவைக்கு எமது இதயபூர்வமான நல் வாழ்த்துக்கள். வேற்று நாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்மொழியைப் படித்து தங்கள் இனத்தையும், கலைகலாச்சாரங்களையும் தெரிந்து கொண்டு வாழ்வதற்கு வழி அமைத்த கல்விச் சேவையே உன் சேவையை உலகம் போற்றும். தாயின் மொழியின் மூலமே அம் மொழிக்குரிய கலைகலாச்சார பண்பாட்டு விழுமியங்களை பூரணமாக உணர்ந்துகொள்ள முடியும். இவ்வுணர்வுக்கு வழிஅமைத்து தமிழ்ப் பிள்ளைகள் தமிழ்க் கலை கலாச் சாரங்களை அறிந்தும் புரிந்தும் வாழ்வதற்கு ஏற்ற வகையில் சேவை செய்யும் கல்விச் சேவையின் செயல் மிக மகத்தான பணியாகும்.

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை தமிழ்ப் பிள்ளைகளின் உயர்வு கருதி அவர்களை பல்வேறு வழிகளில் தமிழை நாளாந்தம் பயன்படுத்தும் முறையில் பல்வேறு கருத்தரங்கு களையும், போட்டிகளையும், கலைநிகழ்வுகளையும் பாடசாலைகள் மூலம் நடாத்தி வருவது பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும். பிள்ளைகள் தமிழ்க்கல்வி கற்றுப் பெற்ற சான்றிதழ்களை தங்கள் உயர்வுக்கு பயன்படுத்துகின்றார்கள். வேலை பெறுவதற்கும், உயர்கல்வியை தொடர்வதற்கும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையால் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் பேருதவியாக அமைகின்றன.

பலவழிகளிலும் தமிழ் வளர்த்து தமிழின அடையாளத்தையும், தமிழ்மொழியின் பண்பாட்டு விழுமியங்களையும், சிறப்புக்களையும் , மேன்மைகளையும் வளர்த்து வரும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் பணியும், சேவையும் மேன்மேலும் வளர்ந்து சிறப்புற்று விளங்க வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்
வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை
டோட்முண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மலர்கள்

1. **தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணிகள்**
   கலாநிதி சி. சிவநிர்த்தானந்தா
   பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வித் திணைக்களம்
   கிழக்கு மாகாணம் - இலங்கை

2. **பண்பாடும் தொழில்நுட்பமும்**
   நளாயினி பிரான்சீஸ்
   B.A.(Hons) (Sociology & Anthropology)
   Dip.in. Human Rights & Peace studies. (Uni of col)

3. **தமிழ்மொழியின் சிறப்பும் புலம்பெயர் எதிர்காலத் தலைமுறையினரும்**
   திருமதி.சந்திரகௌரி சிவபாலன் B.A. (தமிழ் சிறப்பு)
   முன்னாள் ஆசிரிய ஆலோசகர்

4. **படிக்க மறந்த பாடங்களும் படிக்க மறுக்கும் தமிழர்களும்**
   திருமதி.சுந்தராம்பாள் பாலச்சந்திரன் (எழுத்தாளர்)

5. **இசைத் துறையில் வயலின் வாத்தியத்தின் பங்கு**
   திரு. கந்தையா சுபாஸ்கரன் - வயலின் ஆசிரியர்

6. **தமிழ் இசை வரலாறு**
   திருமதி.ஞானாம்பாள் விஜயகுமார்

7. **தமிழ்வாழ வழி சமைப்போம்**
   திரு.பசுபதிராஜா - எழுத்தாளர்

8. **அடையாளம்? ......**
   திருமதி. வாசுகி சுதாகரன் (குணராஜா) – ஆசிரியை

9. **நானும் எனது தாய்மொழிக் கல்வியும்**
   செல்வி.சுபாங்கி ரவீந்திரநாதன்
   கலைவாணி தமிழ்பாடசாலை - முன்ஸ்ரர்

10. **தமிழனாகப் பிறந்திட வேண்டும்**
   தமிழ்மணி பொ. சிறீஜீவகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணிகள்

கலாநிதி சி. சிவநிர்த்தானந்தா
பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம் - இலங்கை

"தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனும் தாரக மந்திரத்தை மையமாகக் கொண்டு உடலாலும் தமிழை உயிருக்கு நிகராக மதித்து, உயிர் உயரத் தொண்டுகள் பல செய்த ஏராளமான பேராசிரியர்கள், மறைந்தும் மணம் பரப்பிக்கொண்டு இருப்பவர்களாக, இன்றும் தாம் செய்த தமிழ்ப் பணிகளால் தடம் பதித்து எம் மனதில் இடம் பிடித்தவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். தமிழுக்குத் தொண்டு செய்வதையே அறப்பணியாகக் கொண்டு, அதற்காகவென்றே தம்மை அர்ப்பணித்தவர்கள் ஏராளம். அந்த வரிசையில், பேராசிரியர் கலாநிதி எஸ். தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணிகள் போற்றி நோக்கத்தக்கது. யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சேர்ந்த ஸ்தனிஸ்லாஸ் கணபதிப்பிள்ளை, செசில் இராசம்மா தம்பதியர்க்கு ஆயிரத்துதொள்ளாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு ஆவணித்திங்கள் இரண்டாம் நாள் தனிநாயகம் அடிகளார் பிறந்தார். இவரது இயற்பெயர் சேவியர் ஸ்தனிஸ்லாஸ் என்பதாகும். ஆங்கிலம், லத்தீன் போன்ற மொழிகளிலே நல்ல தேர்ச்சிபெற்ற இவர் தமிழ்மொழியைத் தனியாக ஓர் ஆசிரியரின் துணையுடன் கற்றார். தமிழ்மீது தான் கொண்ட பற்றினால், அம்மொழியிலே மிகுந்த, உயர்ந்த அறிவினைப் பெற வேண்டுமென தனிநாயகம் அடிகளார் முயற்சி செய்தார்கள். இவ்வுந்துதலின் விளைவாக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே முதுகலைமாணி, முதுஇலக்கியமாணி ஆகிய பட்டங்களைப் பெற்றார். அத்தோடு உரோம் நகரிலே அருட்கலாநிதி பட்டத்தையும் பெற்றார்.

தமிழ் மீது தான் கொண்ட பற்றை பறைசாற்ற அடிகளார், பல விதங்களிலும் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டதை இங்கு கட்டாயம் நோக்கவேண்டும். அதாவது, அடிகளார் மறையியலில் தனது ஆய்வினைத் தொடங்கி, 1931ஆம் ஆண்டு முதல் கொழும்பு அர்ச்பேர்னாட் செமினரியில் மனிதப் பண்பியல், மெய்யியல், கல்வியியல் ஆகிய பாடங்களைப் பயின்றதோடு, சமய ஒப்பியல், சிங்களம், தமிழ் ஆகியனவற்றையும் பயின்றார். அதன்பின் ஆய்வுப் பயிற்சி பெற்றும், உயர்தரப் பாடசாலைகளிலே படிப்பித்து அனுபவம் பெற்ற பின்னரே தமிழுக்காக தன்னை தயார்ப்படுத்திப் பணிகளைச் செய்யத் தொடங்கினார். அடிகளார் தமிழுக்குத் தொண்டாற்றத் தொடங்கிய இப்பின்னணியைப் பார்க்குமிடத்து, பல அனுபவப் பொலிவுடன்தான் அவர் தமிழ்ப் பணிகளைச் செய்வதற்குத் தன்னை தகுதியாக்கியிருக்கிறார் என்பதும், இத்தகையவரின் தமிழ்ப்பணிகள் உச்சத்தை எட்டியிருக்கும் என்பதும் தெளிவாகின்றதல்லவா? தன்னுடைய தமிழ்மொழியின் இலக்கியச் செழுமையினையும் நீண்ட பாரம்பரியத்தையும் நன்குணர்ந்த அடிகளார் அவ்வுண்மையை உலகமெல்லாம் பரப்பவேண்டும் என்று எண்ணினார். "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி கண்ட கனவினை நனவாக்க வேண்டுமென அடிகளார் விரும்பினார். அடிகளார் தமது தமிழ்ப் பணியின் முதற் தடமாக, உலகின் பல நாடுகளுக்கு சென்று அவரவர் மொழிகளிலே தமிழ் மொழியினது, இலக்கியச் சிறப்பையும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்புக்களையும் எடுத்துக் கூறினார். அடிகளாருடைய விரிவுரையைக் கேட்டவர்கள் தமிழ் மொழி பற்றி அறிய ஆவல் கொண்டனர். இவற்றை அனுபவமாகக் கொண்டு அடிகளார் "தமிழ்த்தூது" எனும் நூலை எழுதி வெளியிட்டார். மேலும், பிறமொழியினர் தமிழ்ப் பண்பாட்டினை அறிந்துகொள்வதற்காக வயஅடை ஊரடவரசந (தமிழ்ப் பண்பாடு) எனும் ஆய்விதழை 1952ஆம் ஆண்டு தொடக்கம் வெளியிட்டு, இவ்விதழ் மூலம் தமிழின் புகழ் பரப்ப எண்ணி தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு என்பவற்றை அறிந்து மேலைத்தேய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர்களையும் தமிழாய்விலே ஈடுபாடு காட்ட உந்துசக்தியாக அடிகளார் திகழ்ந்தார். இத்தகைய ஆய்வு முயற்சிகள் பெருகிவரும் வேளையிலே தான் அடிகளார் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் ஒன்றின் தேவையை உணர்ந்தார். 1964 ஆம் ஆண்டில் கீழைத்தேய ஆய்வு மகாநாடு புதுடில்லியிலே நடைபெற்றபோது இம்மாநாட்டிலே பங்குபற்றிய பேராசிரியர்களுடன் ஆலோசனை செய்து அம்மாநாட்டின் இறுதியில், உலகத்தமிழாராய்ச்சி மன்றம் அமைக்க முடிவு செய்து, அம்முயற்சியில் வெற்றியும் கண்டார் அடிகளார். இவற்றின் துணையுடன் தொடர்ந்து எட்டு தமிழாராய்ச்சி மாநாடுகள் நடந்தேறியுள்ளன. அதன்மூலம், பெருந்தொகையான தமிழியல் ஆய்வுகள்

வெளியாகின. அடிகளாரின் இத்தமிழ்ப்பணி முயற்சியினால் தமிழ் அன்னைக்குக் கிடைத்த பெரும் பயன்களோ ஏராளம்! புகழ்தேடி உலகெங்கும் உலா வருபவர்கள் மத்தியில், தமிழ்ப் புகழ்தேடி தூது சென்றும், தமிழ்ப்பண்பாட்டிதழை ஆங்கிலத்தில் நடத்தியும் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினை அமைத்தும் தமிழை வளம்பெறச் செய்து தமிழியலுக்குத் தம்முடைய பங்களிப்பை தளராது செய்தார். இது மாத்திரமன்றி, ஐரோப்பியகால, மறையியல் வலியுறுத்தும் மனிதநேயம் ஆகியவற்றிலே பயிற்சிபெற்ற அடிகளார், தமிழியல் ஆய்விலே ஈடுபட்டதன் விளைவாக எமது பண்டைத் தமிழிலக்கியங்கள் பிரதிபலிக்கும், தமிழ்நாட்டின் இயற்கை அழகு, தமிழரின் அழகுணர்வு, அவர்களுடைய மனிதநேய ஆளுமை இயல்புகள், ஆகியவற்றிலும் ஈடுபாடு காட்டத் தவறவில்லை. இதன் பிரதிபலனாக, பண்டைத் தமிழ் இலக்கியங்களையும் நவீன இலக்கியங்களையும் தன் சார்பில் தமிழுக்கு அடிகளார் தந்துதவினார். அந்த வகையில் நோக்கும்போது Master of Letters எனும் பட்டத்திற்காக "சங்க இலக்கியத்தில் இயற்கை" எனும் விடயம் பற்றி ஆய்வு மேற்கொண்டு, சங்க காலத்தோடு தன்னை பண்டை இலக்கியத்தில் இணைத்துக்கொண்டார். இதனைத் தொடர்ந்து, அவ்விலக்கியங்கள் சித்தரிக்கும் இயற்கையினை, மக்களின் ஆளமை இயல்புகளுடன் தொடர்புறுத்தியே நோக்கினார். "சங்க இலக்கியத்தின் சிறப்பியல்பு" எனும் கட்டுரை இதனை பறைசாற்றுகிறது. சங்கப்பாடல் என்றாலே போரும் காதலும் தான் எம் மனதில் சங்கமிக்கும். ஆனால், அடிகளார் இப்போக்கிலிருந்து விதிவிலக்கானவர். பழந்தமிழ் மக்களின் "ஒன்றே உலகம்" எனும் பரந்த நோக்கு, கண்ணோட்டம், அவர்களுடைய நிறை, நீதி, கல்விக்கொள்கை ஆகியவற்றைப் பகரும் பாடல்களிலே இவர் ஈடுபட்டார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் இலட்சிய வாக்கினை உலகத் தமிழாராய்ச்சி மன்றத்திற்கு அளித்தமையை இங்கு மனம் கொள்ளலாம். மேலும் சங்கப் பாடல்களில் அவர் ஈடுபட்டது போலத் திருக்குறளிலும் தன் திருப்பணியின் மூலம் பண்டை இலக்கியங்களைப் பறைசாற்றினார். நூலைத் திறந்ததும் முதன்முதல் நான் கண்ட குறட்பா **"இருவேறுலகத் தியற்கைத் திருவேறு தெள்ளிய ராதலும் வேறு"** என்று வள்ளுவனுடைய குறள் கூறும் நல்ல வழிகளையும் கத்தோலிக்க சமயங்காட்டும் நல்ல வழிகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து "தமிழ்த்தூது" எனும் நூலில் அவர் கருத்துக் கூறியுள்ளார்.

இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களைத் துருவி ஆராய்ந்த அடிகளார், நவீன இலக்கியங்களைத் துருவி ஆராயவும் மறுக்கவில்லை. இதன்படி பாரதி, பாரதிதாசன் போன்றோருடைய கவிதைகளையும் மறைமலையடிகள் போன்றோருடைய வசன இலக்கியங்களையும் அடிகளார் ஆராய்ந்தார். "Urbanism in Dr. Varatarajn's Novels" எனும் இவருடைய கட்டுரை நவீன தமிழ் இலக்கிய ஆய்வுக்கும் அடிகளாருக்குமுள்ள தொடர்பினை எடுத்துக்காட்டுவதாயுள்ளது. அடிகளார், தமிழுக்கும் பண்டைய நவீன இலக்கியங்களுக்கும் செய்த அளப்பரிய சேவைகள் தேவைக்கேற்ற விதத்திலே தமிழ் பற்றிய நன் நோக்கங்களை மையமாகக் கொண்டே வெள்ளிடை மலைபோல வெளிப்பட்டு நிற்கின்றன என்றால் அது மிகையாகாது. இவ்வாறு தமிழைத் தன்உயிருக்கு நேராக வைத்து தமிழுக்காகவே தன்னை அர்ப்பணித்தவர்களை எம் உயிருக்கு நேராகக் கொண்டு நாம் மதிக்கவேண்டும். உயிர் என்றோ ஒரு நாள் பிரியும் என்பதால் எம் உடலில் உயிர் இருக்கும் வரையாவது மதித்துப் போற்றுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடும் தொழில்நுட்பமும்

நளாயினி பிரான்சீஸ்
B.A.(Hons) (Sociology & Anthropology)
Dip.in. Human Rights & Peace studies. (Uni of col)

மனித வரலாற்றில் உயிரினங்களின் வளர்ச்சி பல பரிமாணங்களைக் கொண்டது. இப்பரிணாம வளர்ச்சி ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலையை நோக்கி நகர்வதனால் சாத்தியமாகின்றது. எனலாம். ஆரம்பத்தில் மனிதன் தன்னால் இயன்ற அளவில் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான். இதன் போது பல சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. மனித அறிவும் அவனது தேவைகளும் அதிகரித்த போது புதிய வழிகளை இனங்காண முயற்சித்தான். இதனூடாக அவனது தொழில்நுட்ப உலகம் கட்டமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் காட்டு மரங்கள் சிற்றோடைகள் பெருநதிகள் மலைகள் பறவைகள் விலங்குகளின் அசைவுகள் நட்சத்திரங்கள் என இயற்கையைக் கொண்டு தனது பயணத்தையும் நகர்வையும் தீர்மானித்தான். இவ்வாறு சிந்தித்து போக்குவரத்து வாகனங்களின் வளர்ச்சி, வீதிகளின் பலதரப்பட்ட வடிவமைப்பு, தொடர்பாடல் விருத்தி என்று அவனது அறிவுத்திறன் விருத்தியடைந்த போது அது தொழில்நுட்ப ரீதியான விருத்தியாக மாறியது.

அந்தவகையில் தொழில்நுட்பம் என்பது அறிவியல்,பொறியியல் ஆகியவற்றுடன் மிக நெருக்கமான தொடர்புடையது. மேலும் கருவிகள் கைவினைகள் முதலியவற்றின் பயன்பாட்டுடனும் அவை எவ்வாறு அவற்றைப் பயன்படுத்துவோர் தமது சூழலைக் கட்டுப்படுத்தவும் அதனோடு இயைந்து வாழவும் கூடிய பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதுடன் தொடர்புடைய பரந்த எண்ணக்கருவாகும். தொழில்நுட்பங்கள் மனிதனுடைய பொருளாதாரத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை எனக் குறிப்பிடலாம். அதனடிப்படையில் ஆரம்பகாலத்திலிருந்து சமகால உலகப்போக்கினை நோக்குகின்ற போது உலகளாவிய அனைத்து சமூகங்களிலும் தொழில்நுட்பமானது அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியாகப் பெரும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. அதனடிப்படையில் தொழில்நுட்பத்திற்கும் பண்பாட்டுக்குமான தொடர்புகளை ஆராயும் முன்பு பண்பாடு பற்றிப் பார்க்க வேண்டியது அவசியமாகும். பண்பாடு என்றால் "தன்னுடைய தேவைகளைத் திருப்தி செய்து கொள்ள மனிதன் உருவாக்கிக் கொண்ட துணைக்கருவி" என சி.சி.நோத் எனும் மானிடவியல் அறிஞர் குறிப்பிடுகின்றார். பண்பாடு தொடர்பாக மானிடவியலாளரான காண்ட் கூறுகையில் "மனிதன் கொண்ட ஆர்வங்களையும், நோக்கங்களையும் அடைய செயல்களையும், பொருள்களையும் உபயோகப்படுத்துவது பண்பாடு" என்கிறார். இவை தவிர பண்பாடு தொடர்பாக 160 இற்கும் மேற்பட்ட வரையறைகளைத் தொகுத்த குரோபர், குளுக்கான் ஆகிய மானிடவியலாளர்கள் "Culture: A Critical review of concepts and definitions" என்ற நூலில் இரண்டு நிலைகளில் பண்பாட்டை விளக்கியுள்ளார்.

- உண்மையியல் நிலை (Realistic category)
- கருத்தியல் நிலை (Idealistic category)

பண்பாடு என்பது பற்றி அறிஞர்கள் கூறிய வரையறைகளில் சிறப்புப் பெற்ற வரையறையாக ஈ.பி.ரைலர் என்பவரால் " தொன்மைப் பண்பாடு (Primitive Culture-1871) என்ற நூலின் மூலம் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டதனைக் குறிப்பிடலாம். "Culture is that complex whole which includes knowledge, belief,art,moral,law,customs and any other capabilities and habites acquired by man as a member of society"

இவ்வாறு பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளைக் குறிப்பதாகவும், மனிதனது அகத்தை புலப்படுத்துகின்ற ஒழுக்கம் போன்றவையாகவும் மக்கள் அனைவரும் கூட்டாகச்சேர்ந்து செயற்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மானமாகவும் உள்ளது.

The dictionary definition of culture is "The customary beliefs, social forms and material traits of a racial religious or social group. அந்தவகையில் தொழில்நுட்பத்திற்கும் பண்பாட்டுக்குமான தொடர்பினைப் பார்த்தோமானால் மனிதன் புற, பௌதீக, சமூக சூழ்நிலைகளுடன் நேர் முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிராமல் மனித நடவடிக்கை இருக்க முடியும் என்று எண்ணுவது பொருத்தமற்றதாகும். தமது தேவைகளை அல்லது விருப்பங்களை நிவர்த்தி செய்ய மனிதன் சூழலுடன் தொடர்பு கொள்வதும், சூழலைப் பயன்படுத்திப் பல பொருட்களை உற்பத்தி செய்வதும் மனித பண்பு இவை தவிர வழக்கம; (Custom) பொதுமக்கள் வழக்கு, வழக்காறு, கொள்கைகள், நிறுவனங்கள், நுட்பங்கள் போன்றனவும் சமூகத்தில் காணப்படுகின்றன. இதனூடாகப் பார்த்தோமானால் மனிதன் தனது பண்பாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதனூடாகப் புதிய தொழில்நுட்பம் உருவாவதும், தொழில்நுட்பத்தினூடாகப் புதிய பண்பாடு தோற்றம் பெறுவதும் தொழில்நுட்பத்திற்கும் பண்பாட்டிற்குமான இருபக்கத் தொடர்பைக் காட்டுகின்றது. தொழில்நுட்ப வரலாற்றைப் பார்த்தோமானால் கருவிகளையும் நுட்பக் கூறுகளையும் குறித்த கண்டுபிடிப்புகளின் வரலாறு எனலாம். இதனைப் பண்பாட்டின் வளர்ச்சியோடும் பல வழிகளிலும் ஒப்பிடலாம். பல சமூகவியலாளர்களும், மானிடவியலாளர்களும் சமூக மற்றும் பண்பாட்டுப் படிமாற்றத்தைக் குறித்த பல சமூகக் கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர். இதில் லெவிஸ்.எச் மோர்கன், லெஸ்லிவைட், கெர்காட் லென்ஸ்கி போன்றவர்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மனித நாகரிக வளர்ச்சிக்கான முதன்மைக் காரணிகளாகக் கருதுகின்றனர். விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு எப்போது மனிதன் உற்பத்தி மேற்கொண்டானோ அன்றிலிருந்து நாகரிகம் தோன்றியது. இவ்வாறான அடிப்படையில் மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் இடையிலான முக்கியத்துவம் மிக்க வேறுபாடாக பண்பாடு அமைகிறது. அதனடிப்படையில் மனிதனின் வேட்டையாடும் யுகம் தொடங்கி இன்றைய நவீன யுகம் வரை தொழில்நுட்பம் பண்பாட்டு அம்சங்களுடன் தொடர்புபட்டேயுள்ளது. அந்தவகையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை எடுத்துக்கொண்டால் அண்மைக்காலத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சியும் தகவல் தொழில்நுட்பத்தின் அபிவிருத்தியும் நேர்நிலையான, மறைநிலையான பண்பாட்டுருவாக்கத்தை சமூகத்தில் தோற்றுவித்துள்ளது. இத் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் மூலம் கலாசாரம் பற்றிய கருத்துக்கள் மற்றும் அறிவு என்பவற்றை உலகின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் மக்களுடைய வாழ்க்கை வசதிகள் அமைகின்றன. இதில் பண்பாட்டு ரீதியான தாக்கமானது முக்கியப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. குறிப்பாக மேலைத்தேய மக்களின் வாழ்க்கை முறை உணவுப் பழக்க வழக்கங்கள், நடை, உடை, பாவனைகள் என்பவற்றைப் பின்பற்றுகின்ற போக்கானது தொழில்நுட்பத்தினூடான உலகமயமாக்கல் செயன்முறைக்கூடாகவே கீழைத்தேய மக்களிடம் பரவலடைகிறது. எனலாம். சமூகங்களின் முழுமையும் அதனுடைய தாக்கங்களும் தொழில்நுட்பத்தினூடாக வெளிப்படையாகவே புலப்படுகின்றது. எமது இடைத்தொடர்புகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக கொக்கக்கோலா, மக்டொனால்ட் என்ற உணவுப் பழக்கம் மட்டும் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படவில்லை, அச்சிடப்பட்ட உருவங்கள் விம்பங்கள் படங்கள் தொலைக்காட்சி அலைவரிசைகள் இணையத்தளங்கள் மூலமாகவும் பண்பாடானது காவிச் செல்லப்படுகின்றமையானது தொழில்நுட்பத்தினூடாக அனைவருக்கும் பொதுவான பண்பாடு என்ற கருத்துருவாக்கத்தினையும் ஏற்படுத்த முனைகின்றது. எனவே புதிய வாழ்க்கைமுறைமை, மனப்பாங்குகள், நியமங்கள் யாவும் ஒன்றாகச் சங்கமிக்கின்றன. ஆனால் பாரம்பரியப் பண்பாடு கலாசாரங்களில் இவை சவால்களையும் கேள்விகளையும் எழும்பச் செய்துள்ளன. இதனால் பாரம்பரியம் நவீனம் இரண்டையும் கலந்து புதிய ஆனால் தாறுமாறான கலப்பு வடிவங்களை உருவாக்குகின்றது. இணைத்தல் (Fusion) முறைகளும் இன்று அதிகளவில் வெளிவருகின்றன. எடுத்துக்காட்டாக உலக அழகிப்போட்டிகள்,காதலர் தினக் கொண்டாட்டங்கள் என்பன இன்று மேலைத்தேசத்தவர்களிடம் மட்டுமன்றி இந்தியா, இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளிடமும் பரவி வருகின்றது. மேலும் தொழில்நுட்பம் சார்ந்து மனிதத் தன்மையற்ற உருவாக்கும் போக்கும் பரவலாகி வருகின்றது. குறிப்பிட்டுக் கூறினால் இன்று பண்பாடு தொழில்நுட்பமாகி வருகின்றது. தொழில் நுட்பத்தின் இன்னொரு விளைவுதான் நுகர்வுக் கலாசாரம் (ConsumerCulture) ஆகும். தற்கால உலக அரங்கில் நுகர்வுக் கலாசாரமானது தீவிரமாகப் பரவி வருவதைக் காணலாம். தொழில்நுட்பத்தின் விளைவாகத் தமது பொருட்களை சந்தைபடுத்த முயலும் பன்னாட்டு நிறுவனங்களின் கவர்ச்சியான உற்பத்திகள் மீதான ஈர்ப்பானது சுதேச மக்களின் சமூக பொருளாதார தார்மீக விழுமியங்களை மறந்து போகச் செய்வதில் நுகர்வுக் கலாசாரம் என்பது துணை நிற்பதைக் காணலாம். தொழில்நுட்பத்தில் அபரிதமான ஆராய்ச்சிகள் நுகர்வுக் கலாசார உலகிற்குள் எம்மை அழைத்துச் செல்கின்றது. மிகவும் ஆடம்பரமானவை என மனம் ஒப்புக்கொண்ட விடயங்கள் நம்மை அறியாமல் அத்தியாவசியமாகின்றது. மேலும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலும் தகவல் பரிமாற்றத்திலும் ஏற்பட்டுள்ள பாரிய முன்னேற்றமும் மலிவான போக்குவரத்து வசதிகளும் தாராளமயப்படுத்தப்பட்டுள்ள நிதிச்சந்தைகளும் நாடுகளிற்கிடையில் போதை வஸ்துக்கள் ஆயுதங்கள், கறுப்புப்பணம் என்பவற்றின் தடங்கலற்ற விநியோகத்திற்கும் வாய்ப்புக்களை வழங்குகின்றன. போதை வஸ்துக்களிலான சட்டவிரோத விற்பனைகளும் பெண் வணிகமும், ஆயுத வர்த்தகமும் கறுப்புப்பணமும் உலகெங்கிலும் வன்செயல்களும் குற்றச்செயல்களும் பெருகுவதற்குக் காரணமாக அமைவதைக் காணலாம். இதனூடாக சமூகத்தின் பண்பாட்டுக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டு சமூக மாற்றம் என்பது உருவாகின்றது. கீழைத்தேய சமூகங்களில் சாதிக்கட்டமைப்பு என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும், அந்தவகையில் தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏற்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புக்கள் தொலைத்தொடர்பு வசதிகள், பாரம்பரியமாக சாதிக்கென வகுக்கப்பட்ட தொழில் முறைகளிலிருந்து விடுபட்ட தொழில் வாய்ப்புக்கள், போக்குவரத்து வசதிகள் காரணமாக ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட சமூகங்கள் அவற்றிலிருந்து விடுபடுகின்றமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேலும் ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களில் அச் சமூகங்களுக்கேயுரிய மொழி என்பது முக்கியமான அம்சமாகும். ஆனால் தொழில்நுட்பத்தினுடைய செல்வாக்கு காரணமாக உலக அளவில் முதன்மையான மொழியாக ஆங்கிலம் முக்கியத்துவம் பெறுகின்றது. இதனால் உலக அளவில் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் அதிகமாக உள்ளது.

- உலகின் 35% கடிதங்கள், தந்திகள் போன்றவற்றின் மொழி ஆங்கிலமாக உள்ளது.
- உலகின் 40% வானொலி நிகழ்ச்சிகள் ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏறத்தாழ 3.5 பில்லியன் மக்கள் ஆங்கிலத்தில் ஓரளவு பரிச்சயம் கொண்டவர்கள்.
- இணையத்தில் ஆங்கிலமே முதன்மை மொழியாகத் திகழ்கின்றது.

இதனூடாகப் பண்பாடுகளுக்கு இடையேயான தொடர்புகள் அதிகரிக்கும் அதேவேளை குறிப்பிட்ட சமுதாயங்களின் தனித்துவம் குறைகின்றது. மேலும் தனிமனிதர்களை அவர்களது மரபுகளிலிருந்து தனிமைப்படுத்துகின்றது. இருப்பினும் மூன்றாம் மண்டல நாடுகளில் தொழில்நுட்பமானது நேர் நிலையான தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அவர்களால் பாரம்பரியமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற சில பழக்க வழக்கங்கள் மரபுகளை தொழில்நுட்பம் மாற்றியமைத்துள்ளது.

உதாரணமாக

- நவீன தொழில்நுட்பத்தின் பாவனை குறிப்பாக ஒளிப்படக் காட்சிகள் (video) குடும்பத் திட்டமிடல் போன்ற அறிவை வழங்குவதாகவுள்ளது.
- கிராமங்களில் தொலைக்காட்சிப் பாவனையானது சுகாதாரம் தொடர்பான போதிய அறிவை அவர்களுக்கு வழங்குகின்றது.
- ஊடகத்துறையின் வளர்ச்சி வேறுபட்ட இனக்குழுமம் தொடர்பான அறிவை வழங்குவதாகவுள்ளது.

அந்த வகையில் தொழில்நுட்பத்தின் இன்னுமொரு வளர்ச்சிதான் இணையம் (Internet) மற்றும் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் அறிமுகம். நடைமுறை ரீதியாகப் பார்க்கும் போது வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் செல்வாக்கின் மாறுபட்ட பரிணாமங்களை நோக்க முடியும். இன்று அனைத்துத் தரப்பினரும் பிரபலமான பண்பாட்டினை நுகர்வோராக மாறிவிட்டனர். கூடுதலான மக்களால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்க்கப்படுகின்றபோது அதுவே பிரபல்யமான பண்பாடாகவும் மாறிவருகின்றது. குறிப்பிட்டுக் கூறினால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இசை, திரைப்படங்கள், குறுந்திரைப்படங்கள், சின்னத்திரைத் தொடர் நாடகங்கள் போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகள் பெருந்தொகையான பார்வையாளர்களுக்காகத் தயாரிக்கப்படுகின்றன. பொதுவாகத் தொடர்பாடல் தொழில்நுட்பமானது மக்களின் அனுபவம், நம்பிக்கை என்பவற்றின் மீது பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவை எமது மனோநிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதோடு அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கும் சமூகச் செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்கும் துணைபுரிகின்றன. மேலும் மக்களின் நம்பிக்கைகள், மனோநிலைகள், நடத்தைகள் என்பன தொடர்புச் சாதனங்களில் காண்பிக்கப்படும் காட்சிகளினால் மாற்றமடைகின்றது. வெகுசனத் தொடர்பு சாதனங்கள் இளையோரின் நடத்தைகள் மீது பெருஞ்செல்வாக்குச் செலுத்துகின்றது. இவற்றின் சமூக ரீதியான தாக்கங்களை நாம் வேறுபட்ட கோணங்களில் நோக்க முடியும். சமூக ரீதியான தாக்கங்களை நாம் வேறுபட்ட கோணங்களில் நோக்க முடியும். பொதுவாகத் திரைப்படங்கள் மூலமாக வெளிப்படுத்தப்படும் காட்சிகளினூடாக பாலியல் நெறிபிறழ்வு விலகல் நடத்தை போதைப் பொருள் பாவனை போன்றவற்றிற்கு காரணமாக அமைகின்றது. இவற்றினூடாக வேறுபட்ட பண்பாட்டு மாற்றங்கள் சமூகத்தில் தோற்றுவிக்கப்படுகின்றது. அதே வகையில் இணையத்தினூடான தொழில்நுட்பமும் வேறுபட்ட பண்பாட்டுருவாக்கத்தைத் தோற்றுவிக்கின்றது. குறிப்பாக சமூக வலைத்தளங்கள் உதாரணமாக Facebook, Myspace,Twitter,Linkedin, போன்றவற்றினைக் குறிப்பிட முடியும். குறிப்பாக Facebook என்பது மேலைத்தேயவர்களிடம் மாத்திரமல்ல கீழைத்தேய மக்களிடமும் மிக வேகமாகப் பரவி வரும் தொடர்புச்சாதனமாகக் காணப்படுகின்றது. இவை பண்பாட்டு ரீதியில் சர்வதேச அளவில் பெருமளவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாசாரப் பரிமாற்றம், கலாசாரங்களின் நிலைத்தன்மை ஏற்படுதல் உலகளாவிய வெகுசனப் பண்பாடுகள் பரவலுறுதல் என்பன காரணமாக கலாசாரப் பன்மைத்துவத்திற்கு தனித்துவமான வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றன. இருப்பினும் இதன் காரணமாக இறக்குமதியாகும் கலாசாரம் உள்நாட்டுக் கலாசாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் பண்பாட்டுக் கூறுகள் அனைத்துமே மேற்குமயமாக்கப்படும் நிலை ஏற்படும். இவ்வாறான மறை நிலையான தொடர்புகளையும் தொழில்நுட்பம் ஏற்படுத்தி வருகின்றது எனலாம். இருப்பினும், முற்றுமுழுதாக தொழில்நுட்ப மாற்றமே பண்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றது எனக் குறிப்பிட முடியாது. தொழில்நுட்பம் இயற்கையின் ஒரு அங்கீகாரம் எனக் கொள்ளலாம் ஆரம்பத்தில் மனிதன் இயற்கையை வெற்றி கொள்வதற்கு இயற்கையை அடிப்படையாகக் கொண்டு தொழில் நுட்பக் கருவிகளைக் கண்டுபிடித்தான். ஆகத் தனது பண்பாட்டுத்தேவையைப் பூர்த்தி செய்ய மனிதனுக்கு தொழில்நுட்பம் தேவையாகின்றது. பொதுவாகத் தொகுத்து நோக்குமிடத்து தொழில்நுட்பத்திற்கும் பண்பாட்டிற்குமிடையிலான தொடர்பானது இருபக்கத் தொடர்பாகக் காணப்படுகின்றது எனலாம். தொழில்நுட்பம் மேலைத்தேய நாடுகளை விட கீழைத்தேய நாடுகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதார விருத்தியை வளப்படுத்துவதற்கு உதவி வருகின்றது. கீழைத்தேய நாடுகளிலே கடைப்பிடிக்கப்படுகின்ற மூடப் பண்பாடுகள் மாற்றமுற்று முன்னேற்றகரமான மனித சமூகமாக மாறவும் தொழில்நுட்பம் துணைபுரிகின்றது. கைத்தொழிற் புரட்சியானது எவ்வாறு சமூக மாற்றத்திற்கு காரணியாக அமைந்ததோ அதேபோல் தொழில்நுட்ப வளர்ச்சியும் பண்பாட்டில் நேர் நிலையான மற்றும் மறை நிலையான மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றது. அதே போன்று மனிதனுடைய பண்பாட்டுத் தேவைகளும் புதிய தொழில்நுட்பங்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாகின்றன.

---

## இருபத்தைந்து வருடங்கள் என்பது வெறும் இலக்கங்கள் அல்ல!

கல்விக்குக் கரம் கொடுப்பவர்கள் உலகில் யாராக இருந்தாலும் அவர்கள் ஒப்புயாவற்றவர்கள். அவர்களது சேவை கல்வியைப் போலவே என்றும் அழியாதவை.
நீங்கள் ஒரு முறை ஒன்றைச் செய்வதற்கும். அதனையே தொடர்ந்து செய்வதற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. தொடர்ந்து செய்வதை ஒருவித தவம் என்று கூடச் செல்லலாம். இந்த வகையில் இருபத்தைந்து வருடங்களாகக் கல்விப் பணியாற்றும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையை எழிதாகக் கருதிவிட முடியாது. இருபத்தைந்து வருடம் என்பது வெறும் இலக்கங்கள் அல்ல. அது கல்வியை நோக்கிப் பயணித்த இலக்கின் இலச்சனை ஆகும். தமிழ் போல் வளரட்டும் இவர்கள் கல்விப் பணி!

திரு.மு.க.சு.சிவகுமாரன்
வெற்றிமணி, சிவத்தமிழ் ஆசியர். யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியின் சிறப்பும் புலம்பெயர் எதிர்காலத் தலைமுறையினரும்

திருமதி.சந்திரகௌரி சிவபாலன் B.A. (தமிழ் சிறப்பு)
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்

மனித இனமானது தனது தோற்றத்தில் இருந்து இன்றுவரை பல இயற்கை அழிவுகள், இயற்கை மாற்றங்கள், படையெடுப்புக்கள், மொழிக்கலப்புக்கள், விபத்துக்கள், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்ற பல மாற்றங்களைக் கண்டிருக்கின்றது. உடல் வளர்ச்சியடைவதற்காக பசிக்கும் போது உண்டல், களைப்பின் போது உறங்குதல் தவிர விலங்கு போன்று வேறு எதுவுமே ஆதி மனிதனுக்குத் தேவைப்படவில்லை. உண்பதற்கு மட்டுமே உணவு தேடிய மனிதன், மிருக வேட்டைக்கு ஆயுதங்களை உருவாக்கும் கலையை முதலில் கற்றான். கல்லைப் பயன்படுத்தி நெருப்பை உருவாக்க முடியும் என்னும் முதல் கண்டுபிடிப்பைச் செய்தான். தனியாய் வாழ்ந்து, குழுக்களாகி அங்க அசைவுகளின் மூலமும் ஒலி அலைகளை எழுப்புவதன் மூலமும் எண்ணக் கருத்துக்களை வெளிபடுத்தி வெற்றி கண்டான். முகக்குறி, கைக்குறி, படக்குறி, என புலப்படுத்தி காலப்போக்கில் மொழிப்பயன்பாட்டின் முக்கியத்துவத்தினை உணர்ந்து மொழியை உருவாக்கினான்.

சொற்கள் கோர்வைகள் ஆக்கப்பட்டு வாக்கியங்களாகி மொழிகள் உருவாயின. மொழிக்கு வரிகள் கொடுப்பதே எழுத்துக்களாகின்றன. இன்று நாட்டுக்கு நாடு மொழிகள் வேறுபட்டு ஏறக்குறைய (6800) ஆறாயிரத்து எண்ணூறுக்கு மேற்பட்ட மொழிகள் வழக்கில் இருக்கின்றன. இவற்றில் (2300) இரண்டாயிரத்து முன்னூறு மொழிகள் மட்டுமே எழுத்துருவில் இருக்கின்றன. அதிகமான மக்களால் தாய் மொழியாகக் கருதப்பட்டு பேசப்பட்டும் எழுதப்பட்டும் கொண்டிருக்கும் மொழிகள் ஆங்கிலம், இந்தி, சீனம், தமிழ். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அன்றும் இன்றும் செழுமையுடன் இருக்கக்கூடிய மொழி தமிழ்மொழி.

எமது தாய் மொழியாகிய இத்தமிழ் மொழி பற்றிய வரலாறு அறிவு ஆசிரியர்களிடம் இல்லையானால் அம் மொழியின் முக்கியத்துவம் ஐரோப்பிய வாழ் எதிர்காலத் தலைமுறையினருக்கு அறிவிக்க இயலாது போய்விடும். அதுபோல் தமிழ் மொழி கற்கும் ஆர்வமும் அவர்களிடம் இல்லாது போய்விடும்.

தமிழனின் பிறப்பிடமும் தமிழ்மொழியின் பிறப்பிடமும் குமரிக்கண்டம்தான். இதுவே முதல் மனிதன் தோன்றிய இடமாகிய இலெமூரியாக் கண்டம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இலெமூர் என்னும் குரங்கு இனம் வாழ்ந்ததனால் இலெமூரியா என வழங்கப்பட்டது என்பதனைவிட. குமரி என்பது ஒரு மூலிகைச் செடி. இதுவே எம்மவரால் சோற்றுக் கற்றாழை ( ALOE VERA ) என அழைக்கப்படுகின்றது. இந்த குமரிச் செடி அதிகமாக வளர்ந்திருந்த காரணத்தினால் குமரிக்கண்டம் என இலெமூரியாக்கண்டம் வழங்கப்பட்டது. இலை - மூலிகை - இலை மூலிகை. இதன் கடை எழுத்து நீங்கி இலை மூலியாகி இலைமூலி இலைமூரியாவாகி அது பின் இலெமூரியாக என வழங்கப்பட்டது என்னும் கருத்தை தேவநேயப்பாவாணர் அவர்கள் கூறுகின்றார். இது ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது. முதல் மனிதன் தோன்றிய இடமே முதல் மொழி தோன்றிய இடமாகவும் இருக்க வேண்டும். அவன் பேசிய மொழியே முதன்மொழியாக இருக்க வேண்டும். அதுவே நாம் பேசும் தமிழ் மொழியாகும். ஹரப்பா நாகரிகத்தை ஆராய்வு செய்த ஹெரஸ் பாதிரியார் சரித்திரம் ஆரம்பிப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்பே இலெமூரியா நாடு தமிழ்நாடாய் இருந்தது என்று கூறியிருக்கின்றார். இயல்பாகத் தோன்றிய மொழிக்கு பதினாறு பண்புகள் இருக்க வேண்டும்

''தொன்மை இயன்மை தூய்மை தாய்மை
முன்மை வியன்மை வளமை மறைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்மை இளமை இனிமை தனிமை
ஒண்மை இறைமை அம்மை செம்மை
எனும்பதி னாறும் இன்றமிழ் இயல்பெனப்
பன்னுவர் மொழிவலர் பாவாணர் தாமே´´

எனவே தமிழ் மொழி இயல்பாகத் தோன்றிய மொழியாகின்றது. உலகின் தொன்மை மொழிகளாக ஆறு மொழிகள் உள்ளன. அவை தமிழ், சமஷ்கிருதம், சீனம், இலத்தீன், கிரேக்கம், இப்ரூ ஆகியனவாகும். இவற்றில் சமஷ்கிருதம் பேச்சு மொழி அல்ல. இலத்தீன், இப்ரூ மொழிகள் வழக்கொழிந்து விட்டன. ஆனால் தேவநேயப்பாவாணர் கூறியது போல் இன்றும் இலக்கியச் செம்மை, இலக்கண வரம்பு, பழைமை, நிறைந்த சொல்வளம் மிக்க என்றும் கன்னியாக விளங்குவது தமிழ் மொழியே.

எம் முன்னோர் முதல், இடை, கடை என்று மூன்று சங்கங்கள் தொடர்ச்சியாக வைத்து தமிழ் வளர்த்தனர். அவர்களால் இயற்றப்பட்ட பல நற்றமிழ் இலக்கியங்களை கடல்கோள் போன்ற இயற்கை அழிவுகளினால் அழிந்து போயின. எம்மால் அறியப்படுகின்ற பழந்தமிழ் முதல் இலக்கண நூல் தொல்காப்பியமாகின்றது. இது தோன்றிய காலம் கி.மு.3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.மு.5 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகின்றது. இதனை இயற்றியவர் தொல்காப்பியர். இவர் அகத்தியரின் 12 மாணாக்கரில் ஒருவர். "முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணி" என்னும் பாயிரத்தொடர் மூலம் இவர் இந்நூல் யாப்பதற்கு முன்பே சிறந்த பல இலக்கண இலக்கிய நூல்கள் இருந்திருக்கின்றன என்பது அறியக்கிடக்கின்றது.

பயன்பாட்டில் உள்ளவை நிலைக்கும் பயன்பாட்டை இழப்பவை அழியும் அந்த வகையில் மொழியும் நிலைக்க வேண்டுமானால் பயன்பாடு அதிகரிக்க வேண்டும். பயன்பாடு அதிகரிக்க வேண்டுமானால் தமிழன் வாழுகின்ற இடங்களில் எல்லாம் தமிழ் மொழி பேசப்பட வேண்டும். இன்று இலத்தின் மொழி எழுதப்படும் மொழியாக மாத்திரமே உள்ளது. இந்நிலை போல் அன்றி எழுதப்படும் மொழியாக மாத்திரமன்றி பேசப்படும் மொழியாக தமிழ்மொழி என்றும் தொடர வேண்டுமானால் அந்நிய நாடுகளிலும் அதன் பயன்பாடு அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் தமிழ் மொழியின் மகத்துவம் அதிகரிக்க வேண்டும்.

ஒரு இத்தாலி நாட்டவராகிய பெஸ்கி பாதிரியார் மதம் பரப்பும் நோக்கிலே தமிழகம் வந்தார். இவர் தமிழ் மொழியைக் கற்று தமிழுக்குச் சேவை ஆற்றியது மட்டுமன்றி. தன் பெயரையும் வீரமாமுனிவர் என்று மாற்றினார். அவர் "என் கல்லறையிலே நான் ஒரு தமிழன் என்று எழுதுங்கள்" என்று கூறியதன் மூலம் தமிழ் மீது அவர் கொண்டுள்ள பற்றை எடுத்துக் காட்டியுள்ளார். முதல் தமிழ் அகராதி. கோடு போட்டு எழுதும் மெய் எழுத்துக்களை குற்று வைத்து எழுதவைத்தத்துடன், ர சேர்த்து எழுதும் நெட்டெழுத்துக்களை நீட்டி எழுதும் ஆ ,ஈ ,ஊ ஏ, ஓ, ஔ போன்ற நெட்டெழுத்துக்களாக மாற்றியமைத்தமை போன்று தமிழுக்கு பல அளப்பரிய சேவைகள் ஆற்றியுள்ளார். இவ்வாறு வேற்று நாட்டவர் தமிழ் மீது காதல் கொண்டு தமிழுக்கு சேவை ஆற்றியிருக்கும் போது தமிழ்ச் சிறார்கள் தமிழ்கல்வியைப் புலம்பெயர்வில் கற்று அதன் சிறப்பைப் போற்றுவதில் சிறுமை இருக்கப் போவதில்லை. திருக்குறளின் பெருமை உணரப்பட்டு, அது இன்று பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் போது அந்நூலை புலம்பெயர் தமிழ் சிறார்கள் கற்பதில் நேரம் விரயம் ஆக்கப்படப் போவதில்லை.

இலத்தீன் சட்டத்தின் மொழியாகவும், பிரெஞ்ச் காதல் மொழியாகவும் ஆங்கிலம் வணிக மொழியாகவும், சமஸ்கிருதம் தெய்வீக மொழியாகவும் காணப்பட தமிழ் மொழி பண்பாட்டு மொழியாகக் காணப்படுகின்றது. நாம் தமிழ் பண்பாட்டைப் போற்றும் ஒரு பரம்பரையை உருவாக்க வேண்டுமானால் மொழிக்கல்வியை வளரும் சமுதாயத்தினரிடம் கொண்டு சேர்க்க வேண்டியது அவசியமாகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி மனிதனை மனிதன் புரிந்து கொள்ள ஒரு சிறந்த ஊடகமாகத் தொழிற்படுகின்றது. தமிழ்மொழிபேசும் பெற்றோர் வாழுகின்ற புலம்பெயர்வில், பெற்றோரை அவர் தம் பிள்ளைகள் சரியான முறையில் புரிந்துகொள்வதற்கு தமது தாய்மொழியைப் பேசக் கற்றல் அவசியமாகின்றது. எதிர்காலத் தலைமுறையினர் தமிழ் மொழியைப் புறக்கணிக்கின்ற போது எமது பரம்பரைப் பாரம்பரியங்கள் அழிந்துபோகின்றன. பண்பாடு மறைந்து போகின்றது. ஒவ்வொரு இனத்தவரும் தமது பண்பாட்டு அம்சங்களை இன்றும் தாம் வாழுகின்ற பகுதியில் நிலைநிறுத்திக்கொண்டே வருகின்றார்கள் என்பதை பல மொழி பேசுகின்ற மக்களிடையே வாழுகின்ற எமது புலம்பெயர் தமிழ்இளந்தலைமுறையினர் நன்கு அறிவார்கள்.

இன்று ஏறக்குறைய 77 மில்லியன் தமிழர்கள் உலக நாடுகள் எல்லாவற்றியும் புலம் பெயர்ந்து வாழுகின்றார்கள். தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளில் எல்லாம் தமிழின் பெருமை போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற போதுதான், தொன்மை பெற்ற எம் செம்மொழியின் சிறப்பானது, தமிழர் புலம்பெயர்ந்து வாழுகின்ற நாட்டவர்களுக்கு அறியக்கூடியதாக இருக்கும். அதற்கு இளந்தலைமுறையினர் தமிழ் மொழியைக் கற்க வேண்டியிருப்பதுடன் அவ் இலக்கண இலக்கியங்களை அவர்கள் வாழுகின்ற நாட்டு மொழிமூலம். மொழிபெயர்க்க முடியும். அத்துடன் அதன் பெருமையை அந்நாட்டவர்களுக்கு தெரியப்படுத்த முடியும்.

புலம்பெயர் இளந்தலைமுறையினர் தமிழ் மொழியில் நாட்டம் கொள்ளவும், கற்கவும் அவர்தம் பெற்றோரும், ஆசிரியர்களுமே முதலில் அக்கறை கொள்ளுதல் அவசியமாகின்றது. பெற்றோர் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளும்போதுதான் பிள்ளைகளுக்கு மொழிக்கல்வியைக் கொடுப்பதற்கு முன்வரமுடியும். பிரெஞ்ச், இத்தாலி, இலத்தீன், ஜெர்மன், ஸ்பெயின், ஆங்கிலம், போன்ற மொழிகளை இரண்டாவது மொழியாகக் கற்கின்ற தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியைக் கற்பது கடினம் அல்ல. பெற்றோர் கலைக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் மொழிக்குக் கொடுப்பதில்லை என்பது ஆசிரியர்களின் முக்கிய குற்றச் சாட்டாக அமைகின்றது. வீட்டிலிருந்து பிள்ளை தமிழ்ப் பாடசாலைக்கு அனுப்பப்படும் போதுதான் ஆசிரியர்கள் அக்கல்வியைப் பிள்ளைகளுக்கு வழங்க முடியும். எனவே எதிர்காலத் தலைமுறையினர் தமிழ்கல்விக்கு முதல் பெற்றோர் பங்கு அவசியமாகின்றது.

இன்று புலம்பெயர்விலே தன்னலமற்ற பல தமிழ்ப்பாடசாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே பணிபுரிகின்ற ஆசிரியர்கள் சேவை மனப்பாங்கிலே தமது பணியை ஆற்றிக்கொண்டிருக்கின்றார்கள். தமிழ்கல்வி எதிர்காலத் தலை முறையினருக்குச் சென்றடைய வேண்டும் என்னும் நோக்கில் செயல்பட்டுக் கொண்டிருக் கின்றார்கள். ஆனால் புலம்பெயர்ந்து வளர்கின்ற எதிர்காலத் தலைமுறையினர் தாய்மொழியைக் கற்பதில் நாட்டம் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். தமது கல்வி மொழிக்கு எந்தவகையிலும் தமிழ்மொழி பயனளிக்காது என்றே கருதுகின்றனர். தமக்கு வருமானத்தை ஈட்டித்தராது என்னும் கருத்தையும் கொண்டிருக்கின்றனர்.

அதைவிட எமது தமிழ் பாடசாலைகள் மாணவர்களுக்கு மொழியில் சரியான ஈர்ப்பை கொண்டுவராதது குறைபாடாகவே காணப்படுகின்றது. ஒரு பிள்ளை தாய் மொழியில் சிறப்புப் பெற்றிருக்கும்போது கல்விமொழியிலும் மிக்க சிறப்பை அடைய முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். எனவே தாய்மொழியில் இலகுத்தன்மையை ஏற்படுத்தும் போது அது மாணவர்கள் கற்றலுக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தும். எனவே பாடத்திட்டம் இலகுவான முறையில் அமையுமாறு தயாரித்தல் கல்வியாளர் கடமையாகின்றது. கற்றலும் கற்பித்தலும் இலகுவாக அமையும் பட்சத்தில் மாணவர்களுக்கு கற்கும் ஆர்வம் தூண்டப்படும். வேற்றுமொழியைக் கல்வி மொழியாகக் கொண்டிருக்கும் மாணவர்கள் கடினமான வழக்கொழிந்த சொற்களைக் கற்கும் போதும், கடினமான முறையில் இலக்கணத்தைக் கற்பிக்கும் போதும் மொழி கற்பதில் சலிப்படைகின்றனர். தமிழ் கற்பிக்கும் பாடசாலைகளில் சில விரும்பத்தகாத அரசியல் விடயங்கள், அத்துடன் கற்பிக்கும் ஆசிரியர்களின் கவர்ச்சியற்ற கற்பித்தல் நடைமுறைகளும் வகுப்பறைக்கு கற்பிக்கும் ஆயத்தமில்லாது வருதலும், கற்பிக்கும் விடயத்தில் சந்தேகம் தீராமலே கற்பிக்க முன்வருதலும், யதார்த்தத்திற்கும் சூழலுக்கும் ஏற்புடையதாகக் கல்விப்பாடத்திட்டம் அமையாமையும், கல்வி மொழிப் பாடசாலைகளில் ஒரு பாடமாக தமிழ்மொழி இல்லாமையும், அதன் மூலம் தமக்கு எவ்வித பெறுபேறுகளும் கிடைக்காது என்று தமிழ் மாணவர்கள் கருதுவதும், புலம்பெயர் மாணவர்களிடையே தமிழ்மொழியில் நாட்டம் குறைவதற்குக் காரணமாகின்றன.

எனவே குறைகள் எங்கே, எப்படி உள்ளதோ அதைப் புரிந்து கொண்டு சீரமைப்பதன் மூலம் புலம்பெயர்வில் எமது தாய்மொழியின் சிறப்பை எதிர்காலத் தலைமுறையினருக்கும் கொண்டுசேர்க்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிக்க மறந்த பாடங்களும் படிக்க மறுக்கும் தமிழர்களும்

திருமதி.சுந்தராம்பாள் பாலச்சந்திரன் (எழுத்தாளர்)

தமிழர்கள் உலகப் பரப்பெங்கும் பரவி வாழ்ந்தாலும் யேர்மனியில் தமிழர் வாழ்வியல் சார்ந்தே இப்பதிவு இடம்பெறுகிறது. சில தசாப்தங்களுக்கு முன்பு ஈழத் தமிழர்கள் பெருமளவு தொகையினர் யேர்மனி வந்து சேர்ந்தனர். தனிமனிதர்களாக, குடும்பங்களாக, ஒற்றைப் பெற்றோர்களாக, குறைந்த வயதுடைய சிறுவர்களும்கூட வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டுப் போரில் நேரடியாகப் பாதிக்கப்பட்டோர் போர்ச் சூழலினால் வாழ்வியல் சிக்கல்களை எதிர்நோக்கியோர் எனப் பலதரப்பினர் வந்து சேர்ந்தனர்.

தூரதேசங்களுக்கு மக்கள் இடம் பெயர்ந்தார்கள் என்று ஒருவரியில் கூறி அமைதியடைய முடியாத அளவுக்கு சிக்கல்களை இம்மக்கள் எதிர்கொண்டனர். எல்லாவித பிரச்சினைகளுக்கும் முதற்காரணியாக அமைந்தது வேற்றுமொழி. யேர்மனிக்குள் வாழவந்த போதும் "டொச்" மொழியை படிக்கவேண்டிய தேவையிருந்தும் அநேகமானோரிடம் ஆர்வமின்மை காணப்பட்டது. படிக்க மறுக்கும் தமிழர்கள் என்று வரையறை செய்து பார்த்தாலும் இவர்கள் தம் பிள்ளைகள் டொச் மொழியோடு தமிழையும் படிக்கவேண்டு மென்ற தணியாத தாகத்தை கொண்டிருந்தனர். இதன் வெளிப்பாடாகவே தமிழ்க்கல்விக் கூடங்கள் உருப்பெற்றன.

வாழும் நாட்டு மொழியோடு தம் தாய்மொழி தமிழையும் பிள்ளைகள் கற்று சிறப்போடு விளங்கவேண்டுமென்று பெருவிருப்புக் கொண்டிருந்த பெற்றோர்கள் தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டின் மொழியை கற்றுக்கொள்ள வேண்டுமென்ற சிந்தனை அவர்களது கனவில் கூட வந்ததில்லை. இதன் விளைவு மிகக்குறைந்த எண்ணிக்கையான தமிழர்கள் மட்டுமே தம் சொந்த வாழ்வியலில் மொழியறிவுள்ளவர்களாகத் தம் கடமைகளை செய்கின்றனர். ஏனையவர்களுக்கு எப்போதுமே மொழிபெயர்ப்பு உதவிக்கு ஆள் தேவைப்படுகின்றது. இதனால் பெரும்பாலான பெற்றவர்களும், அவர்களது பிள்ளைகளும் மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ள அபாயநிலை தோன்றியுள்ளது.

படிப்புக்கு வயது ஒரு தடையல்ல என்று பிறருக்கு அறிவுரை சொல்லும் தமிழர்கள், தம்சொந்த வாழ்க்கையில் அதைக் கடைப்பிடிக்க முனைவதில்லை. உதாரணமாக இலங்கையில் படித்துப் பெருமைப்படும் வகையில் உயர்பதவிகள் வகித்த தமிழர்கள்கூட இங்கு தம்பிள்ளைகள் எதையெல்லாம் செய்யவேண்டுமென்று பட்டியலிட்டதுபோலத் தமது ஆசைகளை எண்ணங்களை வளர்க்கிறார்களே தவிர தம் பிள்ளைகளின் வெற்றிக்குப் படிக்கல்லாக இருப்பதை மறந்துவிடுகிறார்கள். பின்னாளில் பிள்ளைகளின் பின்னே மொழி ஆளுமையற்ற பெற்றோராகச் செல்லும்போது பல முரண்பாடுகள் தோன்றுவதை இன்று காணமுடிகிறது. பிள்ளைகளைப் பார்த்து ….. உங்களுக்குத்தானே எல்லாம் செய்தோம் … செய்கிறோம் என்று புலம்பும் போதுகூடத் தமது தவறை உணர்வதேயில்லை. நமது பிள்ளைகள் பெருமைப்படக்கூடிய வகையில் ஓரளவுக்கேனும் மொழியைப் படித்திருக்க வேண்டாமோ. படிக்க மறந்த பாடங்களை இப்போதாவது படிக்க ஆரம்பிக்கும் ஆர்வம் கொண்டால் பின்னாளில் பல்லினச் சமூகத்தோடு இணைந்து வாழ இலகுவாக இருக்கும். இல்லையேல் சாளரம் வழியே வானத்தை வெறித்துப் பார்க்கும் வெறுமையான நாட்களைக் கணக்கிட நேரிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்க மறந்த பாடங்களில் அடுத்துக் குறிப்பிடத்தக்க விடயம் "திருப்தியாக வாழ்தல்" இது இங்கு வாழும் தமிழரிடையே பெரும் குறைபாடாகவுள்ளது. திருப்தியாக வாழவேணும் என்ற சிந்தனையோ, திருப்தியாக வாழ்கிறோம் என்ற நிறைவோ கிடையாது. இங்கு பணத்தைச் சுட்டிக்காட்டவில்லை. இங்கு நாம் செய்யும் தொழில், இன்றுள்ள நண்பர்கள், நாம் வாழ்து கொண்டிருக்கும் தேசம், நம்மைச் சுற்றியுள்ள உறவுகள் என்று பாருங்கள். வாழும் வாழ்வில் நிறைவு தெரிகிறதா ….. இல்லையே கடந்துபோன காலத்தின் வாழ்வியலே வசந்தகாலம் என்றும், நாளை நம்பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய அளவு கடந்த கற்பனையும் இன்றைய வாழ்வில் மகிழ்வை குலைத்து நிற்கிறது. இன்றுள்ள வாழ்க்கைதான் எனது மகிழ்ச்சியென எப்போது நாம் எண்ணி வாழத் தொடங்குகிறோமோ அப்போதுதான் குடும்பத்தினரையும் மகிழ்ச்சிப்படுத்தமுடியும்.

இங்குள்ள ஏராளமான குடும்பங்களில் மறைமுகப்போர் நடந்துகொண்டிருக்கிறது. சிலர் ஏற்றுக்கொண்டும் பலர் மறைத்துக் கொண்டும் வாழ்வதைக் காணலாம். இந்த இடத்தில் சீனப் பழமொழியொன்றை எடுத்துப் பார்ப்போம். நாம் வாய்க்குள் போடும் உணவும், நம் வாயிலிருந்து வெளிவரும் சொற்களுமே நமக்குத் தீங்கு விளைவிக்கின்றன. பலபெற்றோர் தமது எண்ணங்களைப் பிள்ளைகளிடம் திணிக்கின்றனர். தம் பிள்ளைகள் மேல் கொண்ட பாசத்தினால்கூட இருக்கலாம். ஆனால் அது சிலவேளை தவறாகிவிடுகிறது. பிள்ளைகள் விளக்கம் கேட்கும் சந்தர்ப்பங்களில் பலர் கோபமடைவதோடு செவிமடுக்க விரும்புவதுமில்லை. இந்நிலை மாறவேண்டும். வளரும் உலகில் மாற்றத்தை தடுக்க முடியாது. நாம்தான் மாறிக்கொள்ள வேண்டுமென்ற பாடத்தை படிக்க மறுக்க முடியாது.

இளம் தலைமுறையினர் புதுப்புது முயற்சிகளை எடுக்கும்போது அபாயம் வரலாம் என்ற பயத்தில் தடைகளை விதிக்கின்றனர், தயங்குகின்றனர். காலத்தோடு இணைந்து அவர்களது பாதுகாப்பான வாழ்வுக்கு உத்தரவாதமளிக்கத் தயங்காது நிற்கும் பாடத்தை படிக்கவேண்டும். டொச்மொழி ஆளுமை, சிறப்புத் தொழிற்பயிற்சி எனப் போதிய தகுதிகளைக் கொண்டிராத ஏராளமான தமிழர்கள் சிறந்த உழைப்பாளிகளாகவும் நம்பிக்கையாளர்களாகவும் வாழ்வதை மறுப்பதற்கில்லை. இதே தன்னம்பிக்கையை பிள்ளைகளுக்கும் கொடுப்பதில் பின் நிற்கக்கூடாது.

நாம் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் நல்ல மனிதர்களாக வாழ்ந்து காட்டவேண்டும். பணமில்லாமல் வாழலாம். நன்றியுணர்வும், மற்றவர்களை மதிக்கும் பண்பும்கொண்ட மனமுடையவர்களாக வாழவேண்டும். இளம் தலைமுறை தமிழர்கள் படிக்கவேண்டிய சிறப்பு பாடமிது. ஐரோப்பிய தேசங்களில் இடம்பெயர்ந்து வாழும் பெரும்பான்மைத் தமிழர்கள் தம் குடும்பமென எண்ணி ஊரிலுள்ள பெற்றவர்களை மட்டுமல்ல உறவுகளையும் பேணிப் பாதுகாக்கும் பண்போடு வாழ்கின்றனர். நன்றியோடு நடந்துகொள்கின்றனர். இங்குள்ள பெற்றோர் தமது விருப்புவெறுப்புகளை மதிக்காது பிள்ளைகளுக்காக அயராது உழைக்கிறார்களென்பதை இளம் தலைமுறை மறக்காமல் நன்றியோடு வாழவேண்டும். எண்ணிலடங்காத சிக்கல்களை எதிர்கொண்டும் ஏதிலிகள் என்ற நிலையை உடைத் தெறிந்து யேர்மனிய குடிமக்கள் என்ற நிலையில் வாழும் சூழ்நிலை உருவாகிவிட்டது. நாம் தமிழர். நாம் பிறரை மதிக்கும் பண்புடைய சமூகத்திலிருந்துதான் வந்திருக்கிறோம். நன்றியுணர்வு கொண்ட ஒரு இனத்தின் விழுதுகள் நாங்கள் என்பதை நிலைநாட்டப் பல பாடங்களைப் பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் படிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைத் துறையில் வயலின் வாத்தியத்தின் பங்கு

திரு. கந்தையா சுபாஸ்கரன் - வயலின் ஆசிரியர்

தாய் மண்ணைப் பிரிந்தாலும், தாய்மொழியை மறவாத நம் தமிழ் மக்கள் புலம்பெயர் மண்ணில் தங்கள் கலை, கலாச்சாரம் முதலிய பண்பாட்டு கோலங்கள் மறைந்து போகாது பேணிக்காத்து வளர்த்து வருவது யாவரும் அறிந்ததே. அந்த வகையிலே ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகிய மூவரின் கலை ஆர்வங்களும் சேரும் பொழுதுதான் கலை உன்னதமான வளர்ச்சியை அடைகின்றது. மக்களைப் பண்புடையோர் ஆக்கும் கலைகளில் இசை தனித்தன்மை வகிக்கின்றது.

இயல், இசை, நாடகம் ஆகில முத்தமிழ்களில் மையமாக திகழும் இசை இயற் தமிழோடும் இசைந்து செயற்படுகின்றது. இசை மனித வாழ்வோடு இணைந்து இதயத்திற்கு இதம் அளிக்கும் ஒரு மகத்தான கலையாகும். ஆதனால் அன்றோ "இசையால் வசமாகும் இதயம் எது" என்று பாடப்பட்டுள்ளது. இது இனம், மதம், மொழி என்பவற்றுக்கு அப்பாற் பட்டது. இசைக்கு எல்லையே கிடையாது. இசைக் கருவிகளை மீட்பதன் மூலம் ஆத்ம திருப்தியை அடைவதோடு அமைதி, சந்தோசம், பணிவு என்பவற்றுடன் அனைத்திலும் மேலான குருபக்தியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

நிறைந்த நுண்ணறிவுடன் நன்றாகப் பாடப்படுவதே இசை (சங்கீதம்) ஆகும். இது கீதம், வாத்தியம், நிருத்தியம் என மூன்று வகைப்படும். இவற்றுள் கீதம் என்பது வாய்ப் பாட்டுச் சங்கீதத்தையும், வாத்தியம் என்பது இசைக்கருவிகளில் வாசிக்கும் சங்கீதத்தையும் நிருத்தியம் என்பது நாட்டியம் அல்லது நடனத்தில் இடம்பெறும் சங்கீதத்தையும் குறிக்கின்றது.

வாத்தியங்களை எடுத்துக் கொண்டால் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் மூன்றை யும் "வாத்தியத்ரயம்" என்று சிறப்பாக முன்னோர் அழைத்துக் கொண்டனர். ஏனெனில் இம் மூன்றும் முறையே சரஸ்வதி, கண்ணன், நந்தி போன்ற தெய்வங்களின் கையில் இருக்கின்றன. எனவே இவை "தெய்வீகக் கருவிகள்" எனச் சிழிறப்பாகப் போற்றப்படுகின்றன.

மேலும் பிடில் (வயலின்) யாழ், நாதஸ்வரம், தவில், கஞ்சிரா, கடம், தம்புரா, செண்டை, ஜலதரம், கோல், தம்பட்டம், பஞ்சமுகவாத்தியம், ஜால்ரா, திருச்சின்னம், சிப்ளா, கிளாரினெட், ஸாரங்கி, குடமுழா, ஒர்கன், ஸ்வரத்தட்டு, சித்தார், கிராமபோன், சாக்சபோன், ஆர்மோனியம், தபலா-பாயா, சாரிந்தா, சரத் போன்ற கிராமிய , கர்நாடக, ஹிந்துஸ்தானிய, மேல்நாட்டு வாத்தியங்கள் மிகவும் இனிய நாதத்தைத் தந்து எல்லா உயிரினங்களையும் மகிழ்விக்கின்றன.

இவ்வண்ணம் மேல்நாட்டு இசைக்கருவியான தற்போது வழக்கிலுள்ள வயலினை ஐரோப்பாவில் முதன்முதலில் ஸ்ட்ராடிவேரியஸ் என்பவர் உருவாக்கினார். எனினும் கர்நாடக இசைக்கு இக்கருவியை அறிமுகப்படுத்தியவர் பாலஸ்வாமி தீட்சிதர் என்று கூறப்படுகின்றது. இவர் கர்நாடக இசையினை வயலினில் உள்ள நான்கு தந்திகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றையும் சபசப என சுருதி சேர்த்து மிகத் திறமையாகவும் இனிமையாகவும் முதன்முதலில் வாசித்தார். இவரின் இவ் இசைத்திறமையினால் 1824ஆம் ஆண்டு எட்டயபுர சமஸ்தான வித்வானாக நியமனம் பெற்றார்.

தற்போது வழக்கிலுள்ள வயலின் வாத்தியத்தின் இசையும் மிகவும் இனிமையானது. தந்தி வாத்தியங்களில் ஒன்றான இந்த வயலின் நான்கு ஸ்தாயிகளிலும் இலகுவில் வாசிக்கலாம். வில்போட்டு வாசிக்கப்படுவதால் கார்வையான நாதத்தைக் கொண்டிருக்கும். சுலபமாக எடுத்துச் செல்லலாம். தொடர்ச்சியான நாதத்தைக் கேட்கலாம். தேவைக்கேற்ப பஞ்சமசுருதி, மத்திமசுருதியில் வாசிக்கக்கூடிய வசதி உள்ளது. துரித காலங்களில் பயின்று இலகுவில் வாசிக்கலாம், கமகங்கள், சங்கதிகளைத் தெளிவாக வாசிக்கலாம், சாகஹித்ய சொற்களை தெளிவாக்கிக் காட்டி வாசிக்கலாம். இது கர்நாடக இசையில் பிரதான வாத்தியமாகவும் சிறந்த பக்கவாத்தியமாகவும் மிளிர்கின்றது. ஆடவர்களதும், பெண்களதும் குரலுக்கு ஏற்றவாறு சுருதி சேர்க்கும் வசதி வயலினில் உண்டு. பாடகர் களுக்கு ஆறுதலைக் கொடுக்கும் பக்கவாத்தியமாக விளங்குகின்றது.

இவ் வயலின் இசையைக் கற்பதனால் மாணவர்களுக்கு ஸ்வரஞானம், சுருதிஞானம், தாளஞானம், மனோதர்மம். அதாவது கற்பனாசக்தி பெருகின்றது. அத்துடன் மூர்ச்சனாகார இராகங்களின் விளக்கங்களையும் ஆசிரியர் மாணவர்களுக்குச் சிறப்பாக வாசித்துக் காட்டலாம். இதை வாசித்து பிரபல்யம் அடைந்த கலைஞர்கள் கும்பகோணம் இராஜமாணிக்கம்பிள்ளை, சீர்காழி நாராயணஸ்வாமிப்பிள்ளை, துவாரம் வெங்கடசாமிநாயுடு, தஞ்சை வடிவேற்பிள்ளை, புதுக்கோட்டை நாராயணசுவாமிஜயர், டி.என் கிருஷ்ணன், லால்குடிஜெயராமன், குன்னக்குடி வைத்தியநாதன், எம்.எஸ் கோபாலகிருஷ்ணன், இலங்கையைச் சேர்ந்த புத்துவாட்டிசோமு போன்றோர்.

எனவே இந்தப் பெரும் பயன்தரும் வாத்தியமான வயலின் இசையினை எல்லோரும் இலக்கணமுறையில் சிறந்த ஆசிரியரிடம் கற்று நாளாந்தம் பயிற்சி செய்து ஆலயங் களிலும் தமிழ் கலாச்சார விழாக்களிலும் பொதுஅரங்குகளிலும் பங்குபற்றி மிகவும் சிறப்பாக இறைவன் அருளால் இக் கலையை நிலை நாட்டுவீர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இசை வரலாறு

திருமதி.ஞானாம்பாள் விஜயகுமார்

இசைக்கு இசையாத பொருள் இல்லை என்பதனால் இசை என்று பெயர் வந்தது. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை இசையுடன் வாழ்கின்றான். பிறந்தவுடன் தாலாட்டு இசை, காதலில் கசிந்து உருகும்போது இசை, தேவாரப் பாடலில் இசை, ஒப்பாரிப் பாடலில் இசை என்று பிறப்பு முதல் இறப்புவரை இசையுடன் மனிதன் வாழ்கின்றான். இசைக்கு இலக்கணம் முதல் தமிழ்நூல் அகத்தியம் என்பதாகும்.

7ம், 8ம், 9ம் நூற்றாண்டில் அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்திநாயனார் என்ற நாயன்மார்களால் தனித்தமிழ் பண்களில் தேவாரப் பாடல்கள் தோன்றின. தேவாரம் என்ற சொல்லில் உள்ள வாரம் என்ற சொல்லில் உள்ள வாரம் என்ற சொல்லிற்கு இசைப்பாடல் என்று பொருள். தமிழிசைக்கு கிடைத்த உருப்படிகளில் இராகதாளத்துடன் கிடைத்த ஆதி உருப்படி தேவாரம் ஆகும். தேவாரங்கள் எவ்வாறு நாயன்மார்களால் பாடப்பட்டதோ அப்பண்களிலேயே ஓதுவார்களால் பரம்பரைபரம்பரையாக இன்றுவரை பாடப்பட்டு வருகிறது.

அக்காலத்தில் 103 பண்கள் அறியப்பட்டு இருந்தபோதிலும் 23 பண்களே தேவாரத்தில் கையாளப்பட்டுள்ளன. 23 பண்களில் திருஞானசம்பந்தர் 19 பண்களிலும், திருநாவுக்கரசர் 10 பண்களிலும், சுந்தரர் 17 பண்களிலும் தேவாரங்களை இயற்றி உள்ளனர். தேவாரப் பாடல்கள் அனைத்தும் பண்சுமந்த இனிய இசைப்பாடல்கள். தேவார முதலிகள் மூவரும் தமிழையும் இசையையும் இணைத்துப்பாடி தமிழிசைக்கு பெருமை சேர்த்துத் தந்துள்ளார்கள். தேவாரப்பண்களில் காணப்படும் 23 பண்களும் அவற்றிற்கு இணையாக கருதப்படும் தற்கால ராகங்களும்.

| பண் | இராகம் |
|---|---|
| இந்தளம் | மாயாமாளவகௌளை |
| சீகாமரம் | நாதநாமக்கிரியை |
| அந்தாளிக்குறிஞ்சி | சாமா |
| பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| கொல்லி | நவரோசு |
| மேகராகக்குறிஞ்சி | நீலாம்பரி |
| புறநீர்மை | பூபாளம் |
| கௌசிகம் | பைரவி |
| சாதாரி | பந்துவராளி |
| செவ்வழி | யதுகுலகாம்போதி |
| பஞ்சமம் | ஆஹிரி |
| தக்கேசி | காம்போதி |
| செந்துருத்தி | மத்தியமாவதி |
| வியாழக்குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை |
| நட்டபாடை | நாட்டை |
| பழந்தக்கராகம் | ஆரபி |
| குறிஞ்சி | ஹரிகாம்போதி |
| நட்டராகம் | பந்துவராளி |
| தக்கராகம் | காம்போதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவார காலத்திற்குப் பின்னர் தோன்றிய நூல்களை சங்கீதமகரந்தம் (நாரதர் 11ம் நூற்றாண்டு) கீதகோவிந்தம்(ஜெயதேவர் 12ம் நூற்றாண்டு) சங்கீதரத்னாகாரம் (சாரங்கதேவர் 13ம் நூற்றாண்டு) சங்கீதசுதாகரம் (ஹரிபாலர் 14ம் நூற்றாண்டு) ஆகிய நூல்களில் இசை பற்றிய குறிப்புக்கள் விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

15ம் நூற்றாண்டில் அவதரித்த அருணகிரிநாதரினால் இயற்றப்பட்ட திருப்புகழ் பாடல்களில் இதுவரை காணப்படாத பல அரிய தாளங்களை அறிமுகப்படுத்தினார். அந்தப் பாவலர் என்றும் வாக்கிற்கு அருணகிரி என்றும் இவர் போற்றப்படுபிறார்.

17ம் நூற்றாண்டில் தோன்றிய முத்துத்தாண்டவர் பல கீர்த்தனைகளை தமிழில் இயற்றினார். கீர்த்தனைகளை பல்லவி, அனுபல்லவி, சரணம் என வகுத்து பாடினார். இவருடைய உருப்படிகள் இராகபாவம் ததும்புவனவாக அமைந்துள்ளன.

18ம் நூற்றாண்டில் அருணாசலக்கவிராயர் தோன்றி தருக்கள், விருத்தங்கள், கீர்த்தனைகள் வாயிலாக இராமநாடகத்தை இசை நாடகமாக எழுதினார். இக்காலத்தில் மாரிமுத்தாப்பிள்ளை என்ற தமிழ் வாக்கேயகாரரும் பல தமிழ் இசைப்பாடல்களை இயற்றினார். முத்துத்தாண்டவர், அருணாசலக்கவிராயர், மணிமுத்தாப்பிள்ளை ஆகிய மூவரும் சீர்காழி மூவர் என சிறப்புப்பெயர் பெற்றவர்கள். இம்மூவரும் சங்கீத மும்மூர்த்தி களிற்கு முன்பே தமிழ் நாட்டில் தோன்றி இசைப்பணியாற்றியவர்கள்.

18ம் நூற்றாண்டில் இசையின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். ஏனெனில் இக் காலத்தில் தான் சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜசுவாமிகள், முத்துஸ்வாமிதீட்சிதர், சியாமாசாஸ்திரிகள் ஆகியோர் கர்நாடக இசைக்கு மெருகூட்டினார்கள். மும்மூர்த்திகளில் தமிழில் உருப்படிகளை இயற்றியவர் சியாமாசாஸ்திரிகள் மட்டுமே. இராகங்களை எந்த அளவிற்கு சிறப்பாக கையாள முடியுமோ அந்தளவிற்கு இராகங்களை நுட்பங்களை கையாண்டு இசைத்துறையில் ஒரு பெரிய சாதனையை மூவரும் நிகழ்த்தியுள்ளனர்.

19ம் நூற்றாண்டில் தோன்றிய கவிக்குஞ்சரபாரதியார், மயூரம் வேதநாயகம்பிள்ளை, கோபாலகிருஷ்ணபாரதியார், இராமலிங்கஅடிகள், நீலகண்டசிவன் முதலியோர் தமிழில் பாடல்களை இயற்றியுள்ளனர். வேதநாயகம்பிள்ளை அவர்கள் இயற்றிய சர்வசமய கீர்த்தனைகளும் கோபாலகிருஷ்ணபாரதியார் இயற்றிய நந்தனார் சரித்திர கீர்த்தனைகளும் சிறப்பு வாய்ந்தவை.

20ம் நூற்றாண்டிலே சாதாரண மக்களும் விரும்பக்கூடிய வகையில் இலக்கியச் சுவையுடன் சுப்பிரமணியபாரதியாராலும் தேசிகவிநாயகம் பிள்ளையாலும் இசைப் பாடல்கள் இயற்றப்பட்டன. 20ம் நூற்றாண்டின் தலைசிறந்த வாக்கேயகாரரான பாபநாசம் சிவன் பல தமிழ் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். இவர்களைத் தவிர கோடீஸ்வர ஐயர், இலட்சுமண பிள்ளை, டைகர் வரதாச்சாரியார், பொன்னையாபிள்ளை, தண்டபாணி தேசிகர், பெரியசாமிதூரன், திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை, சித்தூர் சுப்பிரமணியபிள்ளை போன்றோரும் பல தமிழ்ப் பாடல்களை இயற்றி மெட்டு அமைத்து தமிழிசையை வளர்த்துள்ளனர்.

தேவார பண்ணிசையில் இருந்து மகாகவி பாரதியார் பாடல்கள் வரை தமிழிசையில் பாடல்கள் கொட்டிக்கிடக்கின்றன. பாடுபவரும் கேட்பவரும் இசையை உணரும்வகை தமிழிசையை கேட்டும் பாடியும் தமிழையும் இசையையும் வளர்த்தெடுப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்வாழ வழி சமைப்போம்

திரு.பசுபதிராஜா - எழுத்தாளர்

இன்றைய காலகட்டம் பொதுவாக ஈழத்தமிழ் மக்களுக்கு சகல வழிகளிலும் நெருக்கடி மிகுந்த காலப்பகுதி என்பது உண்மை. இந்த இக்கட்டான நெருக்கடி நிலையில், பிரதி அனுகூலங்களாய் நாம் மென்மேலும் அமுக்கப்பட்டு அழிந்துவிடாது வீழ்ச்சி நிலையில் இருந்து மிக வேகமாக எழவேண்டிய தேவை ஈழத்தமிழ் இனத்திற்கு மாத்திரமின்றி உலகவாழ் தமிழின மக்கள் முன்னால் இருக்கும் மிகப்பெரிய கடமைப்பாடு ஆகும். எப்படி நாம் வீழ்ந்தோம், அதற்கான முன்னணிக் காரணிகள் என்ன? எனவும் அதற்கு நிவாரணமாக நிர்மானிக்கக்கூடிய காரணிகள் என்ன? எனவும் மிகவும் விரைவாக அனைத்தையும் சிந்தித்து ஒரு பொது உடன்பாட்டில், உற்சாகமான வேலைத்திட்டத்தின் கீழ் இணைந்து செயலாற்ற முன்வரவேண்டும். இவ்வாறு நாம் தொலைநோக்கிப் பார்க்கையில், எம் வளர்ச்சிப்பாதையில் முதற் கண்டுகொள்ளவேண்டிய காரணியாக நம் வாழ்வுக்கும் வீழ்வுக்குமான அடிப்படை அம்சமாக கல்வியே கட்டியெழுப்பப்பட வேண்டிய நிலையில் உள்ளது. அதிலும் கிட்டத்தட்ட பத்துஇலட்சம் மக்களுக்கு மேல் ஈழத்திலிருந்து அரசியல் பிரச்சினைகள் காரணமாகப் புலம்பெயர்ந்து பல்வேறுபட்ட நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஈழத்தமிழ் மக்களின் எதிர்காலச் செல்வங்களின் கல்வி குறித்தும், அவர்கள் இனிவரும் காலங்களில் எதிர்கொள்ள இருக்கும் மிகவும் சிக்கல்களும் முரண்பாடுகளும் குறித்தும் தொலைநோக்கும் பார்வையின்றி இருந்துவிடுதல் என்பது நம் தலைமுறையினருக்குச் செய்கின்ற பழியாகும்.

இங்கே ஒரு சமூகத்தின் ஆதாரசுருதியான, ஆரோக்கியமாக இருக்கக்கூடிய அம்சங்கள் பற்றிப் பேசுகின்ற, எழுதுகின்றபொழுது அவற்றை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அமைப்புக்கள் நிறுவனங்கள், சார்பு இயக்கங்களின் இன்றைய செயற்பாடுகளின் பற்றிப் பேசுவதும் காலத்தின் கட்டாயமாகப் பார்க்கவேண்டுமேயன்றி அவற்றின் மீது வேண்டுமென்றோ அல்லது காட்டமாக நாம் விமர்சிக்க தலைப்படுகின்றோம் என்று எடுத்துக்கொள்ளுதல் முறைமையாகாது. எதுவும் விமர்சனத்திற்கு உட்பட்டே ஆக வேண்டும். அப்போதுதான் மாற்றம் என்ற சொல்லை மட்டும் மாறாமல் வைத்துவிட்டு, அனைத்திற்கும் மாற்றம் தேடும் மானிட நோக்கத்திற்கு உயிர்த்துடிப்பை ஊட்டும் ஊட்டமாக வாட்டம் போக்கும் என்பது என் தாழ்மையான எண்ணம்.

உலகில் கல்விக்கண் திறக்கப்பட்ட ஓர் சமுதாயம் அதன் அனைத்து வளர்ச்சிப் பாதைகளிலும் வீறுநடை போடுவதை நாம் அவதானிக்கின்ற சமநேரத்தில் கல்வியை மிகவும் உச்சஸ்தாயியில் பெற்று விளங்கக்கூடிய தமிழ்பெருங்குடி மக்கள் சமூகம், தன்னை சகலவழிகளிலும் இறங்கி வரிசையில் இடமளித்தது ஏன் என்கின்ற கேள்வி சமூக உணர்வு கைவரப் பெற்றவனுக்கு ஏற்படுவதும் சகஜம்தான். அப்படி சூழ அகலமாக நாம் உற்று நோக்குகையில் கல்விப்பெருஞ்செல்வம் சுட்டிக்காட்டுகின்ற பொதுநலப்போக்கு இச் சமுதாயச் சிற்பிகளிடம் அறவே கிடையாது என்ற ஆத்மார்த்தமான முடிபுக்கு நாம் இலகுவாக வந்துவிடலாம். பொறியியலாளர்களாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படுகின்ற பேர்களிடையே போட்டி மனப்பாங்கு, மருத்துவர்களாக மாறுகின்ற மனங்களுக்குள் இதயமில்லை, அதிகாரிகளாக வலம்வருபவர்கள் அதிகாரத் துர்ப்பிரயோகம், ஆசிரியர்களாக பயிற்சி பெற்றவர்கள் தற்குறிகளாகச் சமுதாயத்தை குதறுதல், வளர்ச்சிப்பயிரை வெட்டிவீழ்த்தும் வெட்டுக்கிளிகளின் இறக்கைகளுக்குள் சமூக ஆரோக்கியமும் அமரத்துவம் அடைகின்றது. சுதந்திரம், விடுதலை, சுயநிர்ணயம் பற்றி இந்த நூற்றாண்டில் அதிகம் தன்னை ஆள்படுத்தி, பொது எதிரியிடம் விமோசனம் எதிர்பார்க்கும் தமிழ்சமூகம், சமூக நலன்களை கட்டி ஆளவும் தன் சகோதர இனமக்களை எட்டி உதைக்கவும், பட்டிகட்டிப் பரம்பரை பரம்பரையாக தொட்டுத் தொழுகின்ற நிலையே அனைத்து விடயங்களையும் கட்புலனை சுட்டெரிக்கின்றன.

மேலிருந்து புத்தகத்தைக் கீழ்நோக்கிப்படிக்க, ஒரு மனிதனை, கீழிருந்து மேல் நோக்கி உயர்ச்சிக்கு அழைத்துச் செல்லும் செல்வம் கல்விச்செல்வம் என்பதை தெட்டத்தெளிவாக அறிந்துவைத்துக் கொண்டு, அதை மேற்கோள்காட்டி மேடையில் பேச என்று மட்டும் வைத்துவிட்டு விழி மூடிக்கிடப்பது ஏன்? இருபத்தைந்து வருட தாய்மொழிப் பயிற்றுவிப்பு, ஏன் எம் எதிர்காலச்செல்வங்கள் இடையே மகத்தான வெற்றியை வெற்றிடமாக வைத்திருக்கிறது? நமக்குச் சற்றும் சம்பந்தமில்லாத வேற்று அந்நிய மொழிகளை மிகவும் அசுரத்தனமாக அகாயசூரர்களாக மூன்று மொழிகளைக்கூட மூச்சு விடுவதற்குள் கற்றுக்கொண்டு கொடிநாட்டும் நம் குழந்தைகள். ஏன் அந்த அந்நிய மக்களைவிடப் புரிந்து கொள்வதிலும், பொருள் உணர்வதிலும் மும்முரமாக இருக்கும் நமது தலைமுறைச் செல்வங்கள் எம் இரத்தச் செறிவுகொண்ட தாய்மொழிக்கல்வியில் போதில வளர்ச்சியைப் பெறவில்லை மாத்திரமின்றி, தமிழைக்கற்ற பிள்ளைகூட அந்நிய மொழியில் தமிழ்ச்சொல்லின் பொருளைக்காண குழப்பமடைவது ஏன்? தமிழர்கள் தனித்துவமாக முன்னெடுக்கின்ற காரியங்கள் எல்லாம் ஏன் தோல்வி முகத்தைச் சொந்தமாக்குகின்றன? இதுவரை சிங்கள அரசு தந்த கல்விக்கட்டமைப்பின் கீழ், தமிழ் மொழிப்புகட்டல் பயிற்சிப்பாடவிதானம் தான் தமிழர்களுக்கு அவர்தம் கல்விநிலையில் பெரும் வெற்றிபெற வைத்ததுடன் அவர்களைப் பெருமைப்படவும் வைத்தது என்று எண்ணவும் புலம்பெயர் நாடுகளின் எம் தலைமுறைச் செல்வங்களின் பிரகாசமான எழிர்ச்சிக்குப் புலம்பெயர் நாடுகளின் கல்விக்கட்டமைப்பும் ஒழுங்கமைப்பும் தான் காரணம் என்ற முடிவுக்கு நாம் வந்துவிடமுடியுமா? இங்கே புலம்பெயர் நாடுகளில் தமிழ் தாய்மொழி கற்றுக் கொள்ளச் செல்லும் எம்குலச் செல்வங்களுக்கு போதிய பாடவிதான அமைப்பூக்கமும் தெளிவான பாடப்புத்தகமும் இல்லாதபோதும் இருக்கின்ற பாட விதானங்கள் பலவிதமான கல்விசார் நிறுவனங்களிடை வித்தியாசமாகக் கைக்கொள்ளப் படுவதுடன், அந்நிய மொழியைக் கற்றுக்கொள்ள ஒன்றாகச் செல்லும் தமிழ் மாணவ மணிகள் பல்வேறு பெரிய மாநிலங்களில் இரத்தச்செறிவு மிக்க தாய்த் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ள ஐந்து பிரிவுகளாக பிரிந்து செல்கின்றனர் என்றால் தமிழ்சமூக ஆதிக்க மனப்பாங்காலும் முரண்பாடுகளாலும் மீண்டும் எம் தலைமுறைச் செல்வங்கள் புகலிட மண்ணிலும் பிரிவுமனப்பாங்கிற்கு மூளைச்சலவை செய்கின்ற நிலை பரிதாபகரமானதே.

நவீனகாலத் தமிழ்ச்சமூகம் இருபெரும் பாதைகளில் தவிர்க்கமுடியாமல் பயணம் செய்ய ஆரம்பித்து இருக்கின்றது. அதில் ஒன்று அரசியல் பாதை, இன்னொன்று சமயம் சார்ந்த பாதை. இந்த இரண்டு பாதைகளும் இனிமேல் ஒன்றையொன்று சந்திக்கமுடியாத சங்கதிகள். இச்சமூகத்தை அச்சுறுத்தும் அவலநிலையைக் காட்டுகின்றது. இதில் அரசியல் சமூகம் சார்ந்த அக்கறையோடு வாழ்பவர்களே தம் தாய்மொழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கவேண்டும் என்ற உற்சாகத்தைக் கொண்டிருக்க சமயம் சார்ந்து வாழ்பவர்கள் அந்நிய மக்களின் அரவணைப்பையே ஆதாரமாகக் கொள்ளத்தலைப்பட்டு இருக்கின்றனர். இச்சமுதாயப் பரிதாபப் போக்கிற்கு தமிழ்மக்கள் தமக்குள்தானே எழுதி இயக்கும் முரண்பாடுகளும் மூர்க்கத்தனங்களும் முன்னணி வகுக்கின்றன. அவை கல்விச்செல்வத்தின் மீது அவமானத் தடயங்கள் பதியம்பண்ணிப் பத்திரமாகக் காலத்தின் கைகளிலே ஒப்படைப்பது நீதியான சமூகம் தோன்றச் சாவுமணி அடிக்கும்காலம் அண்மிக்கின்றது. உண்மையில் தங்கள் தாய் மொழியை, மற்றும் தமிழர்தம் பண்பாட்டு விழுமியங்கள் குறித்தும் அதை எதிர்காலத் தலைமுறைகளுக்குப் புகட்ட புலம்பெயர் நாடுகளில் முன்னெடுக்கும் அமைப்புக்கள் மிகவும் சிறப்பாகச் செயல்படுகின்றனர். பல்வேறுபட்ட வாழ்க்கைச் சூழ்நிலைகள் அனுதினமும் தாக்கங்களை உண்டாக்குகின்றபோதும் இடைவிடாது செயல்படுகின்றவர்களின் செயற் பாடுகள் , பிள்ளைகளை தங்கள் இலட்சிய வேட்கைகளுக்குள் இழுத்துவிடுவதினால் பிள்ளைகள் வாழும் புகலிடச் சூழ்நிலைகளும் இவர்களின் இந்த மெத்தனப்போக்குகளும் பிள்ளைகள் அவர்தம் ஏக்கங்களை எண்ணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தமுடியாமல் போய்விடுவது மட்டுமா, ஒரு தமிழ்கல்வி சார்அமைப்புக்கள் இருக்கும் குழந்தைகள் இன்னோர் கல்விசார் அமைப்பைச் சேர்ந்த பிள்ளைகளைப் பகை உணர்ச்சியுடன் நோக்குவது இங்கு காணப்படும் நிலை இருக்கின்றது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர் களினதும் மற்றோர்களிடத்தும் சூழ்நிலைக் கைதிகளாக நிறுத்தப்படுகின்றனர். இதையெல்லாம் முற்றாக நிராகரித்து அந்நிய மக்களின் நிர்வாக அலகுகளுக்குள் எமது பிள்ளைகளை ஒப்படைத்து, இனிவரும் தலைமுறைச் செல்வங்களிடையே ஆசிரியப் பெருந்தகைகளைத் தேர்ந்தெடுத்து அந்நிய மொழியில் பயிற்றுவித்து அந்த மாணவ ஆசிரியர்கள் மூலம் தமிழ் பாடவிதானங்கள் அமைத்துச் செயற்பட்டால் தமிழ் தளைக்க வாய்ப்பு உண்டு. இல்லையேல் பெரியவர்கள் என்ற போர்வையில் தலைமை அடிபாடு களுக்குள்ளும் துதிபாடுதற்குள்ளும் தமிழ் அழியும் துர்ப்பாக்கியம் ஏற்படும்.

இப்படித் தமிழ் பல்வேறுபட்ட இடுக்கண்ணைச் சந்திக்கின்ற போது எரிநெருப்பில் எண்ணை வார்த்ததுபோல் இன்னும் ஓராயிரம் ஆண்டுகளிடையே உலகில் அழியப்போகின்ற மொழிகளில் தமிழும் ஒன்று என்று ஐக்கியநாடுகளின் மொழிசார் கணிப்பு ஒன்று திடுக்கிடும் தகவலைத் தந்திருக்கின்றது. ஆயினும் உலகில் பரந்துபட்டு வாழுகின்ற பன்னிரண்டு கோடி தமிழ் மக்களுக்குள் பல்வேறு நெருக்கடி நிலையிலும் ஈழத்தமிழ் மக்கள்தான் தமிழ் மொழியின் இதய காவலனாக இருக்கின்றனர் என்று மகிழ்ச்சி ஊட்டும்செய்தி. ஆயினும் இந்த விசயத்திலாவது புலம்பெயர் அமைப்புக்கள் ஒன்று திரண்டு இன்று எம் அருகே இருக்கும் அரிய தொழில்நுட்பவசதி வாய்ப்புக்கள் கொண்டு இளைய தலைமுறையினரின் ஆலோசனைகளோடு, ஏனெனில் அவர்களால்தான் இனிமேல் எதையும் முன்னெடுக்கமுடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பொறுப்புகள் அமைப்புக்கள் அனைத்தையும் கையளித்து வழிகாட்டச் சொல்லும் வாழ்வே தமிழ் இனிப் புத்துணர்ச்சிமிக்க புதுத்தெம்பை பெறமுடியும் என நம்பிச் செயல்பட்டால் தமிழ் விரியும், நாளை விடியும், நன்மை புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Gopara Gnanam

Rheinische Str. 79, 81. 44137 Dortmund. TEL: 0231/5450028.

Mobil:- 0171 330 65 42. www.goparagnanam.com. goparagnanam@hotmail.com

புலம்பெயர் மண்ணில் பைந்தமிழ் வளர்க்கும் பணியில் அயராது சேவையாற்றி இருபத்தைந்தாவது ஆண்டு விழாக்காணும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை மேன்மேலும் வளர்ந்து சேவை செய்ய வாழ்த்துகின்றோம்!

இந்து கிறிஸ்தவ மக்களின் அனைத்துவிதமான கொண்டாட்டங்களுக்கும் தேவையான பட்டுப் புடவைகள், பட்டுவேஷ்டிகள், சிறுவர்களுக்கான ஆடை அலங்காரப்பொருட்கள், தங்கநகைகள் - ஆபரணங்கள், மளிகைப்பொருட்கள் அனைத்தையும் ஒரேகூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்



## கோபாரா ஞானம்

றைனிஷ ஸ்ராஸ- 79-81, 44137 டோர்மூண்ட்

ஜேர்மனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம்? ......

திருமதி. வாசுகி சுதாகரன் (குணராஜா) - ஆசிரியை
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி
திருநெல்வேலி. யாழ்ப்பாணம்

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்தகுடி என்று எங்கள் தமிழ்க் குடியின் பழமைக்கு பெருமையாய் இலக்கணம் வகுக்கின்றோம் நாங்கள்

சங்கறுப்பது எங்கள்குலம்
சங்கரனார்க் கேது குலம்
சங்கை அரிந்துண்டு வாழ்வோம்
உம் போல இரத்துண்டு வாழோம்.

என்ற நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமென்று இறைவனோடு சத்தியத்தால் வாதிட்ட நக்கீரர் பரம்பரை நாங்கள் என்று அடிக்கடி நவின்று கொள்வோம்.

அகத்தியர் மொழியில் எம் அறிவு கண்டோம்
ஔவை மொழியில் எம்திறமை கண்டோம்

சேர சோழ பாண்டிய மூவேந்தராட்சியில் எம் வீரம் பகன்றோம். முறமெடுத்து புலியடிச்ச தமிழிச்சியின் வரலாறும், ஆனை அடக்கிய அரியாத்தையும், வீரபாண்டிய கட்டபொம்மன் எங்களுடன் தான். அகநானூறும், புறநானூறும் எங்களின் வீரத்தையும் தூய்மைக் காதலையும் சான்று பகரும். கடாரம் வென்ற சோழனின் கதையிலும் எங்களின் பொருளாதார வளத்தையும்

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்ற பழமொழி ஊடாக எங்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையும், சிறந்த வளமான வாழ்வையும் அன்றே கண்டோம். இத்தனை பெருமை தமிழுக்கும் இருந்தும் தமிழின் பெருமையும் தமிழனின் சிறப்பும் பேசும் பொருளாய் போனதில் தான் எந்தன் மனவேதனை.

"உலகம் இருந்தாலென்ன
உலகம் அழிந்தாலென்ன
உன் கடமையிலிருந்து தவறாதே" என்றார் சுவாமி விவேகானந்தர். அந்த வகையில் தக்கதருணத்தில் நாம் செய்யவேண்டிய கடமையை தவறாது நிறைவேற்ற வேண்டுமென்ற என் இதயத்திலிருந்து ஒரு சொல் "மெல்லத் தமிழ் இனிச் சாகுமா?" என்ற தலைப்புகளில் கவிதைகளும், கட்டுரைகளும், பட்டிமன்றங்களும் நடாத்தும் அளவுக்கு கேள்விக்குறியான தமிழ்மொழியையும் தமிழினம் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைக் காக்கவேண்டிய இமாலயப் பொறுப்பினை ஏற்பது யார்? தமிழினம் தலைநிமிர நடாத்திய முப்பது வருட யாகம் மூன்று வருடத்தில் முடிந்துபோன வரலாறு. முப்பது வருட யாகத்திலும் நெய்யாய் உருகியவர்களும், விறகாய்க் கருகியவர்களும், நெல்லுப் பொரியாய் நொய்ந்தவரும், தானியமாய்த் தீய்ந்தவரும் ஆயிரம் ஆயிரம். ஆனால் யாகத்தில் எங்கோ ஓர் ஒழுங்கீனம், யாகத்தீ அவிந்து போயிற்று. முப்பது வருட யாகத்தினால் தமிழன் கண்டதெல்லாம் ஓலமும், ஒப்பாரியும், அவலமும், அழிவும், தலைகுனிவும், தாலிஅறுப்பும், விபச்சாரமும், குன்றும், குழியும், குதர்க்கமும், நோக்காரும் நெஞ்சம் மறக்காத இதயம் பிழியும் துயரங்கள் மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்தி நகைமாளிகை



உங்கள் விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைக்கப்பட்ட 22 கரட் தங்கநகைகளை பெற்றுக்கொள்ள **Dortmund** நகரில் 16 வருட காலமாக மக்களின் நன்மதிப்பை பெற்ற ஸ்தாபனம்

**இத்தனை காலமும் எமது ஸ்தாபன வளர்ச்சிக்கு உதவிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் கனிந்த நன்றிகள்**

உங்கள் நகைகளை கூடிய விலைக்கு விற்க அல்லது அதை மாற்றி புதிய சிங்கப்பூர் நகைகளை பெற்றுக்கொள்ள எம்மை நாடவும்.

மூக்கு குத்துதல், காது குத்துதல், பொன்னுருக்குதல் போன்ற அனைத்து சுபகருமங்களுக்கும் 22 கரட் தங்கத்தினாலான ஆபரணங்களை குறித்த தவணையில் உங்கள் விருப்பத்திற்கேற்ப நேர்த்தியாக பெற்றுக்கொள்ளலாம். திருத்த வேலைகளும் செய்துகொடுக்கப்படும்.

நியாயமான விலையில் அதிக தேர்வுகள்,
மங்கையர் மனம் கவரும் புத்தம் புதிய டிசைன்களில் சிங்கப்பூர் மற்றும் டுபாய் (916) நகைகள்

## ஒரு முறை விஜயம் செய்தால் உண்மை புரியும்

Koenigswall-10
44137-Dortmund
Germany

Tel : 0231-5330154
0231-5330155

(Dortmund பிரதான புகையிரத நிலையத்திற்கு 100m அருகில்)

www.sreeshakhthe-jewellery.de




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது வருடமென்ன முப்பது யுகங்கள் சென்றாலும் கண்மணிக்குள் நிற்கும் அவலமும், அவமானமும் மறக்கமுடியாது, மறக்கவும் கூடாதது. தமிழன் என்ற ஒரேயொரு காரணத்திற்காக உலகமே பார்த்துக் கொண்டிருக்க ஒடுங்கிப் போன எங்கள் (தி) யாகங்கத்தின் இறுதி நாட்கள். சுயநலம் எங்கு தொடங்குகின்றதோ அங்கு ஒழுங்கீனம் தலைவிரித்தாட தொடங்கிவிடும். அந்த வகையில் எங்கள் தமிழன் வாழ்வும், வளமும் நொடிந்து போனதென்னமோ உண்மை தான். ஆனாலும் புலம்பெயர் தமிழ் இளைஞர்களே! யுவதிகளே மீண்டும் வருகிறேன் உங்களிடம். எங்களையும் எங்கள் இனத்தின் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை தொடர்ந்து காக்கும் இமாலயம்.

இலங்கையில் 70 - 80ம் ஆண்டுகளில் கிட்டத்தட்ட 35,00,000 இலட்சம் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். இது 30 வருடங்களில் குறைநத்து 2 மடங்காக கூடியிருக்கவேண்டும். ஆனால் நடந்தது என்ன? தமிழர்கள் இன்று மிகமிக அருகிய தொகைக்கு வந்துவிட்டனர். மீதி எங்கே? ஏன்ற வினாவினை நாங்கள் தேடினால் புலம்பெயர் இளைஞர்களே! யுவதிகளே! மீதித் தமிழரெல்லாம் புலம்பெயர் நாடுகளில் உங்கள் அம்மாவாகவும், அப்பாவாகவும், சித்தப்பாகவும், சித்தியாகவும், மாமாவாகவும், மாமியாகவும், உங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இங்கு நாங்கள் சொற்ப அற்பத் தமிழர்களாய் அடிபட்டுக் கிடக்கிறோம். எங்கள் வாழ்க்கையில் எங்கள் வாழ்க்கையை கொண்டுசெல்ல முடியாது ஓடிக்கொண்டிருக்கிறோம். நாங்கள் தொலைபேசியில் கதைத்தாலும் பஞ்சப்பாட்டு, கவிதை, கட்டுரை எழுதினால் பஞ்சப்பாட்டு என்று நீங்கள் புறுபுறுப்பது எங்களுக்கு வலிக்கிறது. இங்கு நாம் வாழ்வை ஓட்டிக் கொண்டு மட்டுமே இருக்கிறோம்.

எங்கள் நாட்டில் எங்கள் பிள்ளைகளை காப்பாற்ற முடியாத சூழலில் தவித்துக் கொண்டிருக்கிறோம். வளர்முக நாடுகளிலிருந்தும் தாராளமாய் பொருளாதாரத்திலும், உலகமயமாதலுக்குள்ளும் எங்கள் இளைய சந்ததியினரை இழந்து கொண்டிருக்கிறோம். எம்மால் நம் சந்ததியினரை காப்பாற்ற முடியவில்லை. காப்பாற்றும் படிகளை போட எத்தனித்தாலும் திட்டமிட்டு விதைக்கப்பட்டிருக்கும் நஞ்சு விதைகளை நம்மி எங்கள் இளைய சந்ததி நகர்ந்து கொண்டிருக்கிறது. உங்கள் தொடர்புகளாலாவது நல்லவற்றை தெரிவு செய்யத் தெரியாது நடை உடை பாவனையிலும் கலாச்சார விழுமியங்களிலும் உங்கள் நாடுகளைக் குறைபிடிக்கப் பார்க்கிறார்கள். உங்கள் வளர்ப்பில் குறைகளைக் கண்டுபிடித்துக் கொண்டு எங்கள் சமுதாயத்தில் எங்கள் பிள்ளைகளை சீராய் வளர்க்க முடியாது தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் நாட்டிலேயே இறைமையுடன் வாழமுடியாத நாங்கள் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் புரிந்தும் புரியாத வலைக்குள் மாட்டிக்கொண்டு விட்டோம். எங்கள் பிள்ளைகளின் எதிர்காலமும் கேள்விக் குறியாகி நிற்கிறது. ஏனெனில் எங்கள் மொழியையும் எங்கள் கலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும் எங்கள் பிள்ளைகள் கூட காப்பாற்ற மாட்டார்கள் என்ற நிலையில் நாங்கள் இன்று. ஏனெனில் இங்கிருக்கும் தமிழ் சனத்தொகையோ மிகக் குறைவு. அதிலும் நம்மைப் பற்றி நம் தமிழைப் பற்றி சிந்திப்பவரோ அதிலும் குறைவு. சிந்திப்பவரிலும் அதனைப் பற்றி செயற்படுத்த நினைப்பவரும் நாட்டின் நிலைப்பாட்டிற்கு பயந்து நடுங்கி ஆடிப்போய்விட மீதி எங்கே? எப்படி? அந்நியராட்சியில் அடிபணிந்து அமைதியாக கிடக்கின்றோம்.

அரைகுறை ஆடைஅணிந்து, அடுத்தவன் வாழ்விற்காக ஆலாய்ப் பறந்து நொக்கியாவுடன் Sms, Chat E-mail என பல கலை பயின்று பரிதவித்துக் கொண்டிருக்கிறோம். புலம்பெயர் தமிழர்களே! இத்தனை துன்பத்திலும் பெருமையாய் ஒரு செய்தி. எம் நாட்டில் வாழும் இளைஞர்களும் யுவதிகளும் உங்களுக்கு சமமாய் என்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனி யுகத்தில் உங்களை விஞ்சியே நிற்கின்றனர். புலம்பெயர் தமிழ் இளைஞர்களே, யுவதிகளே!

நீங்கள் வளர்ந்த நாடுகளில் வாழும் அறிவான இளைய சமுதாயம். எங்கள் நிலத்துப் பிள்ளைகள் போல Sms, Chat, Eimail என்று வீணாகப் பொழுதைப் போக்க மாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் அறிவியல் உலகில் அறிவியலோடு பிறந்து வளர்ந்த இளைய சமுதாயம். உங்கள் சிந்தனைகளும் அதன் வளர்ச்சியும் சிறப்பானதாக இருக்குமென நம்புகிறேன். அந்த வகையிலே உங்கள் சிந்தனை ஆற்றலினூடாக நீங்கள் செய்யவேண்டியது உங்கள் ஆதியைத் தேடுங்கள். உங்களைப் பெற்றவர்களில் மொழியை இனத்தைப் பண்பாட்டை கலாச்சார விழுமியத்தை பறைசாற்றுபவராகப் புறப்படுங்கள். எங்களை பிரதிபலிப்பவர்களாக பெருந்தொகையாக உலக நாடெல்லாம் குவிந்து இருப்பது நீங்கள் தான். எங்கள் சொந்த நாட்டில் சொற்ப மனிதராய் ஏதிலிகளாய் நாங்கள் இருப்பதால் எங்களை எங்கள் மொழி இனத்தை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை காக்க முடியாதவராய் கதிகலங்கிக் கொண்டிருக்கிறோம். இங்கு சொற்ப தமிழர்களான எங்களால் எதனையும் சாதிக்க முடியாது.

எனவே புலம்பெயர் தேசத்து இளைஞர்களே! யுவதிகளே! உங்களுக்கு நான் விடுக்கும் அறைகூவல் ஒன்று! நீங்கள் எங்கள் நாட்டிற்காக போராட வேண்டாம். எங்கள் தமிழ்மொழியையும் எங்கள் தமிழ் இனத்தின் கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்கு நடவடிக்கையை ஆழமாக எடுப்பதோடு எங்கள் இனத்துவ அடையாளத்தை “ஊழி“ உள்ளவரை நிலைப்படுத்துங்கள்! இதுவே என் வேண்டுகோள். இத்தனை அங்கலாய்ப்புக்களிலும் பெரியதொரு ஆசுவாசமும் திருப்தியும். யேர்மனியில் தமிழ்க்கல்விச் சேவை பாடசாலை சேவையினூடாக 400க்கு மேற்பட்ட பிள்ளைகளின் தமிழ் கல்வி வளர்ச்சியில் அதன் தீவிரமான அர்ப்பணிப்பான செயற்பாடுகளிலும் நிட்சயம் எம்மினத்தை, மொழியை அடையாளப்படுத்தும் நல்ல சமூகத்தை உருவாக்கும் என்பது வெள்ளிடைமலை.

அந்த வகையிலே 25 வருட பூரண சேவையுடன் வெள்ளிவிழாவினைக் கொண்டாட இருக்கும் யேர்மன் தமிழ்க் கல்விச்சேவை நிறுவனமே உனது தீர்க்கதரிசனமான சிறப்பான புண்ணியமான செயற்பாட்டில் (உங்கள் நாட்டில்) 15வது அகவைக் கொண்டாட்டத்தில் நேரடியாகக் கலந்து தமிழின் சுவையில் விளைத்துப் போனவர் யான். அன்றே எனக்குத் தெரியும் இந்த நிறுவனத்தின் சேவை வெளிப்பாட்டின் தெளிவும் திருப்தியும். உலகம் உள்ளவரை உன் சேவை போற்றப்படும். தமிழ்மொழி வளர்ச்சியில் உங்கள் ஆசான்கள் அனைவரையும் இத்தருணத்தில் கரம் குவித்து மனதார வாழ்த்துகிறேன் வாழிய! வாழிய! உங்கள் புனிதமான சேவை தொடர இறை ஆசி வேண்டி நகர்கிறேன் இந் நிலத்துப் பூவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் எனது தாய்மொழிக் கல்வியும்

செல்வி.சுபாங்கி ரவீந்திரநாதன்
கலைவாணி தமிழ்பாடசாலை - முன்ஸ்ரர்

இளமையில் கல் அதுவும் கசடறக் கல் அதனை தாய்மொழியில் கல் என்றார்கள் நமது பெரியோர்கள். நான் எனது தாய்மொழியான தமிழ்மொழியைக் கற்றுத் தேர்ந்திருக்கிறேன் என்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் பத்துவயதில்தான் எனது தாய்மொழியாம் தமிழைக் கற்கத் தொடங்கினேன். இன்று தமிழில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கிறேன் என்பதை நினைத்துப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

நான் தமிழைக் கற்பதற்கு மூலகாரணமாக இருந்த எனது பெற்றோரை இவ்விடத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தாயார் என்னை அல்லும் பகலும் ஊக்குவித்து, தெரியாதவற்றை சொல்லித்தந்து, சந்தேகங்களை தெளியவைத்து பக்கபலமாய் இருந்திருக்கிறார். நான் தமிழ்க்கல்வி கற்ற முன்ஸ்ரர் கலைவாணி தமிழ்பாடசாலை, எனது தாய்மொழிக் கல்விக்கு பேருதவி புரிந்திருக்கிறது. எனது நகரத்தில் இத்தமிழ்பாடசாலை நடைபெறாமல் இருந்திருந்தால் நான் தமிழ் படிக்கமுடியாமல் போயிருக்கும். அதுவும் எனது தமிழ் ஆசிரியர் எனக்கு கிடைத்தது பெரும்பேறு என்றே சொல்வேன். என்மீது எவ்வளவு அக்கறை எடுத்து பாடங்களைச் சொல்லித் தந்தார். நான் என்ன சந்தேகங்களைக் கேட்டாலும் எப்போதும் முகம் சுளிக்காது சிரித்த முகத்துடன் எனக்கு விளக்கம் தருவார். அவர் எனக்கு மட்டுமல்ல அத்தனை மாணவர்களுக்கும் அதேபோல் பாடம் சொல்லிக் கொடுப்பதில் சிறந்து விளங்குகிறார். அவரின் ஒத்துழைப்பினால்தான் நான் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளையும், ஐரோப்பிய ரீதியில் வெற்றிக் கிண்ணங்களையும் பெறமுடிந்தது.

கலைவாணி தமிழ்ப் பாடசாலையில் நடைபெறும் விழாக்களில் எல்லாம் நான் பல வாய்மொழி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருக்கிறேன். அதனால் எனது தமிழ்மொழி உச்சரிப்பை, ஞாபகசக்தியை, தமிழின் சிறப்பை தெரிந்து கொள்ள, புரிந்துகொள்ள முடிந்தது. வரலாற்றுச் சரித்திர நாடகங்களில் பங்கு கொண்டபோது நமது பழைய வரலாற்றுச் சிறப்புகளை, தமிழ்மன்னர்களின் வீரம், காதல், கருணை போன்றவற்றை எல்லாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிந்தது. கிராமியப் பாடல்கள், கலாச்சாரத்தை அறிவுறுத்தும் பாடல்கள் போன்றவற்றை நாம் பாடும்போதும், அப்பாடல்களுக்கு நடனம் ஆடும்போதும் நமது கலாச்சார, பண்பாடுகளை அறிந்து மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன், நமது தமிழ்மொழி செம்மொழி மட்டுமல்ல சிறப்பானது, தொன்மையானது என்ற தெளிவைப் பெற்றிருக்கிறேன். நான் மட்டுமல்ல எனக்கு தெரிந்த தமிழ் பிள்ளைகள் எல்லோரையும் தமிழ் படிக்க ஊக்குவிக்க வேண்டும் என்ற பேரவாவையும் என் மனதில் தோன்றச் செய்திருக்கிறது.

பாடசாலையில் நாம் எவ்வளவு படித்தாலும் நம்முடன் படிக்கும் சகமாணவர்களுடன் மட்டுமே பரீட்சைகளை எழுத முடிகிறது. நமது கலைவாணி தமிழ்ப் பாடசாலை ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை என்ற ஐரோப்பிய நிறுனத்துடன் இணைந்து செயற்படுகின்றது. ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை ஆண்டுதோறும் நடாத்தும் ஐரோப்பியரீதியிலான தமிழ்ப் பொதுப்பரீட்சையில் தோற்றுகிறோம். அதனால் நாம் ஐரோப்பிய ரீதியில் தமிழ் மாணவர்களுடன் போட்டியிட்டு எமது திறமையை வெளிக்காட்டுவதற்கு சிறந்த சந்தர்ப்பத்தை ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவை எமக்களிக்கிறது. நான் பலமுறை ஐரோப்பிய ரீதியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக எனக்கு வாய்ப்பளித்த ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவைக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

ஐரோப்பிய ரீதியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடம்பெறும் மாணவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. சித்தியடைந்த ஏனையோர் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. விசேடமாக முதலாம் இடம்பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் வெற்றிக் கிண்ணங்கள் நமது தாயகத்தில் தமிழ் வளர்த்த பெரியார்களின் பெயரால் வழங்கப்படுவது போற்றப்பட வேண்டிய சிறப்பாகும். அதுவும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் ஆண்டுவிழாக்களில் அனைத்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் முன்னிலையில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளவது பெருமையான விடயமாகும். இதனால் நாம் தாயகத்தில் தமிழ்வளர்த்த பெரியார்களை நினைவு கூர்கின்றோம்.

நாம் பரீட்சை எழுதி முடிந்து பெறுபேறுகள் அறிவிக்கப்படும். அதன்பின்னர் ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையினர் எமது பாடசாலைக்கு வந்து மாணவர்களை தனத்தனியாகச் சந்தித்து நாம் எழுதிய விடைத்தாள்களை எமக்கு காட்டுகின்றனர். அதில் நாம் எழுதிய சிறப்பான விடயங்களை எமக்கு எடுத்துக்கூறி, எமது தமிழ் படிக்கும் ஆர்வத்தை பெருக்கி, எம்மை பெருமைப்படுத்துகின்றனர். நாம் விட்டுள்ள தவறுகளை எமக்குச் சுட்டிக்காட்டி எதிர்காலத்தில் அத்தவறுகள் விடாதிருக்க விளக்கமளிக்கின்றனர். ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் இந்நடவடிக்கை பாராட்டப்பட வேண்டிய சிறப்பானதொன்றாகும்.

யேர்மனியில் உள்ள வேறு தமிழ்நிறுவனங்கள் நடாத்தும் தமிழ்ப் போட்டிகளில் பங்கு கொண்டிருக்கிறேன். பரிசுகளையும், பாராட்டுகளையும் பெற்றிருக்கிறேன். உதாரணமாக டோர்ட்முண்ட வள்ளுவர் தமிழ்ப் பாடசாலை நடாத்துகின்ற திருக்குறள் மனனப் போட்டியில் பங்கு கொண்டிருக்கிறேன். மண் சஞ்சிகை நடாத்தும் தமிழ்ப் போட்டிகளில் பங்கு கொண்டிருக்கிறேன். ஹம் காமாட்சி அம்பாள் ஆலய நிர்வாகத்தினர் நடாத்தும் சைவசமயப் போட்டிகளில் பங்கு கொண்டிருக்கிறேன். நான் தமிழ் கற்றுக் கொண்டதே இதற்கெல்லாம் மூலகாரணமாக அமைந்தது என்பதில் எனக்கு மகிழ்ச்சியே.

எதிர்காலத்தில் நான் ஜேர்மனியில் பணிபுரியும்போது நான் சந்திக்கின்ற தமிழ் முதியவர்களுக்கு உதவிசெய்வதற்கு நான் கற்றுக் கொண்ட தமிழ் துணையாக இருக்கும் என்று நம்புகின்றேன். யேர்மனியில் உள்ள கேளின் (Köln) பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராக இருக்கும் தமிழ்ப் பேராசிரியை உல்ரிக் நிக்கலஸ் அவர்கள் சென்னையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் தமிழில் பேசினார். அப்போது "தமிழ் இலக்கியங்களைப் படிக்கும்போது நான் ஒரு தமிழ்ப் பெண்ணாகப் பிறக்கவில்லையே என்ற கவலை எனக்குண்டு" என்று தெரிவித்துள்ளார். இதனை நான் இணையத்தளத்தில் படித்த போது நான் தமிழ்கற்றதற்கும், தமிழ்ப் பெண்ணாக இருப்பதற்கும் பெருமைகொள்வதாக உணர்கிறேன்.

தமிழின் பெருமைகளை, தொன்மையை எனது ஜேர்மனிய சகமாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும், நமது கலாச்சாரப் பண்பாடுகளை நாம் தொடர்வதற்கும், நமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வதற்கும் நான்கற்ற தமிழ்க் கல்வி பெருந்துணையாக நிற்கும். அதற்கு காரணமாக அமைந்த எனது பெற்றோருக்கும், முன்ஸ்ரர் கலைவாணி தமிழ்ப் பாடசாலைக்கும், எனது தமிழ் ஆசிரியருக்கும், ஜேர்மன் தமிழ்க் கல்விச் சேவைக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனாகப் பிறந்திட வேண்டும்

தமிழ்மணி பொ. சிறீஜீவகன்

மீண்டும் பிறந்திட வேண்டும்
ஈழமதில் பிறந்திட வேண்டும்
தமிழனாகப் பிறந்திட வேண்டும்
அழியாத கல்விதனைப் பெற்றிட வேண்டும்
மொழிகள் பலவும் தெரிந்தே கற்றிட வேண்டும்
தமிழைத் தரமுடன் கற்றிட வேண்டும்
தாய்த்தமிழைச் செழிப்புடன் வளர்க்கும் வாண்மை வேண்டும்
எட்டாத கலைகள் கற்றிட வேண்டும்
பாட்டுக்கள் பாடியே வாழ்ந்திட வேண்டும்
மயக்கமுறா நல்லறிவு பெற்றிட வேண்டும்
தொழில்கள் பலவும் தெரிந்திட வேண்டும்
தமிழாசானாய் சிறந்தே விளங்கிட வேண்டும்
தெளிவாகப் பேசும் நாவன்மை வேண்டும்
உள்ளத்தில் உண்மைஒளி நிலைத்திட வேண்டும்
உண்மையைப் பேசும் இதயம் வேண்டும்
உயிர்கள் மீது இரக்கமுடன் வாழும் சிந்தை வேண்டும்
மனிதரை மனிதனாக மதிக்கும் மனமும் வேண்டும்
பேராசைப் பகைமைகள் அகன்றிட வேண்டும்
ஒற்றுமை ஓங்கிக் கூடிக்குலாவிட வேண்டும்
பட்டினியில்லா உலகம் காண வேண்டும்
நாட்டுக்குள் சமதர்ம சமாதானம் நிலைத்திட வேண்டும்
பிரிவினைப் பேயைக் கொல்லும் வீரம் வேண்டும்
பண்புடன் வாழும் மனிதரைக் காண வேண்டும்
இனிய இயற்கையைத் திருடா மனிதம் வேண்டும்
அகண்ட அண்டமதில் தனியுரிமை கோரா நாடுகள் வேண்டும்
மூப்பின்றி முன்செல்ல வேண்டும்
முதுமையிலும் இளமையின் வேகம் வேண்டும்
செத்தாலும் தமிழனாகப் பிறக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் நெஞ்சத்தால் நவில்கின்றோம்
# நன்றி மலர்கள்

புகலிடத் தமிழ்மக்கள் வாழும் ஐரோப்பிய நாடுகளில் தமிழ் வளர்க்கவென முயற்சி செய்த, யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும், உதவியும், ஒத்தாசையும் அளித்த, அளித்துக் கொண்டிருக்கின்ற யாவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள். இருபத்தைந்து வருடங்கள் நடந்த பாதைதனில் வழிகாட்டி ஒளியூட்டி வளர்த்த சான்றோர்கள், அன்பர்கள், நண்பர்கள் யாவருக்கும் மலர்தூவி மணம் பரப்பி மனம் நெகிழ்ந்து நன்றி பாராட்டுகின்றோம். இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா மலர்வதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களுக்கு எம் நன்றிகள். வாழ்த்துக் களும், வழிகாட்டும் நற் கருத்துக்களும் தந்த சான்றோர்களுக்கும், விழா சிறக்க வந்த பிரதம விருந்தினர் இலக்கியச்சுடர் திரு.த.இராமலிங்கம் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் (சென்னை) அவர்களுக்கும், இலங்கையிலிருந்து பல உதவிகளையும், மேடை எழுத்துக் கொடியையும் (Banner) உருவாக்கி அனுப்பிய திரு.அருந்தவராஜா அவர்கட்கும், இம்மலர் மலர்வதற்கு முன்அட்டை வரைந்த ஓவியர் திரு.மாரிஆனந் அவர்களுக்கும், வாழ்த்துக் கூறி விளம்பரம் தந்து நிதி உதவி புரிந்த வியாபார நிறுவனங்களுக்கும், மலர்தனை அச்சிட ஆலோசனை தந்து உதவிய திரு.மு.க.சு.சிவகுமாரன் (வெற்றிமணி ஆசிரியர்) அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் கூறும்


நிர்வாகிகள் உறுப்பினர்கள் ஆசிரியர்கள்
மாணவர்கள் பெற்றோர்கள்

யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.K.Silks and Gold Paraadise

டோட்மூண்ட் நகரில் புதியசேலை உலகம்! நவநாகரீக நவீன உலகம்!!

தேன்மதுரத் தமிழோசை உலகம் எல்லாம் பரவச் செய்யச் சேவையாற்றும் யேர்மன் தமிழ்க் கல்விச் சேவையின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழாவுக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்கள்!



நகையும், பட்டும் இணைந்த நவநாகரீக நிறுவனம்

நீங்கள் விரும்பிய டிசைன்களில் பெண்களுக்கு வேண்டிய அழகுசாதனப் பொருட்கள்

சிறுவர், சிறுமிகள், பெண்கள் அனைவருக்கும் ஏற்ற றெடிமெட் ஆடைகள்

பார்ப்போர் மனதை கொள்ளை கொள்ளும் மைசூர் சில்க், காஞ்சிபுரம், கோலம் அண்ணாமலை பட்டுச்சேலை, **Oneminits Sari, Net Sari, Welt Wett Sari** வகைகள்

பஞ்சாபி, குருதா, பிஜாமா, நக்மாசூட் போன்ற உடைவகைகள்

பட்டுப்புடவைகள்! தங்கநகைகள்!! அழகுசாதனப் பொருட்கள!!!
அனைத்தும் மலிவு விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த நிறுவனம்.

**Adler str 33, 44137 Dortmund. Tel: 0231-9501647 Fax: 0231-9501648**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org